janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி


மக்கள் வாரஇதழ்

மலர் 86 | 2024 ஜனவரி 07 - ஜனவரி 13 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 40






# ராமர் கோயில் பெயரால் பாஜக பாசிஸ்ட்டுகளின் தேர்தல் பிரச்சாரம்!







**உத்தரப்பிரதேச மாநிலம், அயோத்தியில் ஸ்ரீ ராமஜென்மபூமி அறக்கட்டளை ஒருங்கிணைப்பில் கட்டப்பட்டு வரும் ராமர் கோயில், ஜனவரி 22 ஆம் தேதி கும்பாபிஷேகம் செய்து திறக்கப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை வரவுள்ள நாடாளுமன்ற தேர்தலுக்கான பரப்புரையாக பாஜக பயன்படுத்தி வருகிறது என காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம், சிவசேனா மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன.**

ராமரை வேட்பாளராக அறிவிப்பதுதான் மிச்சம் என சிவசேனா கட்சித் தலைவர் சஞ்சய் ராவத் விமர்சித்துள்ளார். அயோத்தியில் ராமர் கோயில் திறப்பை பாஜக தேர்தல் பரப்புரை நிகழ்ச்சியாக நடத்துவதால், நாங்கள் திறப்பு விழாவிற்கு போகப்போவதில்லை என அறிவித்துள்ளார். நம்பிக்கை என்பது தனிப்பட்ட நபர்களைச் சார்ந்தது. பாஜக செய்கிற வெற்று விளம்பரச் செயல்கள் யாவும் கடவுளை அவமதிக்கும் வகையிலேயே உள்ளதாக ராஷ்ட்ரிய ஜனதா தளம் விமர்சித்துள்ளது.

### பாஜகவை எதிர்க்கிற இந்துத்துவவாதிகள்

அயோத்தியில் ராமர் கோயில் திறப்புவிழா என்பது மதம், ஆன்மிகம் தொடர்புடைய மதச்சார்பான நிகழ்ச்சியாகும். மாறாக இத்தகைய கோயில் திறப்பு நிகழ்வை திட்டமிட்ட அரசியல் நிகழ்ச்சியாக பாஜக மாற்றி வருவதை எதிர்க்கட்சிகள் மட்டுமின்றி தீவிர இந்துத்துவ அமைப்புகளே கண்டித்து வருகின்றன. குறிப்பாக அயோத்தி ராமர் கோயில் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ ராம ஜென்ம பூமி தீர்த்த சேத்ரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் ராய், பிரதமர் மோடியை விஷ்ணுவின் அவதாரம் என பேசியது கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது. ராமர் கோயில் இயக்கத்தின் மூளையாக செயல்பட்ட பாஜக தலைவர் அத்வானி மற்றும் முரளி மனோகர் ஜோஷி ஆகிய இருவரும் வயது மூப்பு காரணமாக திறப்பு விழாவிற்கு வரவேண்டாம் என ராம ஜென்ம பூமி அறக்கட்டளை வலியுறுத்தியதும் சர்ச்சையானது. 90 வயதான, முன்னாள் பிரதமர் தேவகவுடாவிற்கு அழைப்பு விடுக்கும்போது அத்வானி, முரளி மனோகர் ஜோஷி ஆகியோரை மட்டும் புறக்கணிப்பது சர்ச்சையாகி உள்ளது.

சுயமோக, விளம்பரப் பிரியர்கள் கல்யாண வீட்டில் மாப்பிள்ளையாகவும் இழவு வீட்டில் பிணமாகவும் இருக்க விரும்புவார்கள். அத்வானி வந்தால், ராமர் கோயில் கட்டியே பெருமையையும், ஊடக வெளிச்சமும் அவருக்கு சென்று விடும் என்ற கவலையில், நிகழ்வின் மொத்த கவனமும் தன்னைச் சுற்றி மட்டுமே இருக்கவேண்டும் என்ற காரணத்தாலேயே பாஜகவின் முன்னாள் தலைவர்களை அமித்ஷா மோடி ஆதரவு கும்பலால் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுகின்றனர் என தீவிர இந்துத்துவா அமைப்பு குற்றம்

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்


## மோடி அரசின் புதிய சட்டங்களுக்கு எதிராகப் போராட்டம்


# லாரி ஓட்டுநர்கள் வேலைநிறுத்தம் - போக்குவரத்து முடக்கம்

அண்மையில் நடந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 146 பேர் இடைநீக்கம் செய்யப்பட்டனர். பின்னர் எதிர்கட்சி உறுப்பினர்கள் இல்லாமல் குற்றவியல் சட்டங்கள் உட்பட பல்வேறு திருத்த சட்ட முன்வரைவுகளை நிறைவேற்றினர்.

இந்திய தண்டனைச் சட்டம் (1860) என்பதை `பாரதிய நியாய சன்ஹிதா' என்றும், குற்றவியல் நடைமுறைச் சட்டம் (1898) என்பதை 'பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா' என்றும், இந்திய சாட்சிய சட்டம் (1872) என்பதை 'பாரதிய சாட்சிய அதினியம்' என்றும் சட்டங்களின் பெயர்களை ஒன்றிய பா.ஜ.க அரசு மாற்றியிருக்கிறது. பல்வேறு சட்டப்பிரிவுகள் மாற்றப்பட்டு,

தொடர்ச்சி 15 ஆம் பக்கம்





கட்சிக் கடிதம்

# இருபத்தி மூன்றே விடை பெறுவாய்! இருபத்தி நான்கே விடியலை தருவாய்!



போர்க்குணமிக்க தோழர்களே!

**இரண்டாயிரத்து இருபத்து மூன்று விடை பெற்றுவிட்டது. கட்சியின் 98 ஆண்டுகள் நிறைவு பெற்று, 99 ஆம் ஆண்டின் அடியெடுத்து வைக்கின்ற நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.**

நம் தோழர்கள் மிகுந்த உற்சாகத்தோடு, நம்பிக்கையோடும் விழாவில் பங்கேற்றுள்ளனர்.

இருபத்திநான்காம் ஆண்டு டிசம்பர் 26 கட்சியின் நூற்றாண்டு தொடங்குகின்றது. ஆண்டு முழுவதும் விழா கோலம் மட்டும் அல்ல, சாதனைகள் படைக்கும் ஆண்டாக அமையும். அதன் முன்னோட்டமாக இருபத்தி நான்கை பயன்படுத்திட வேண்டும்.

இருபத்தி மூன்றாம் ஆண்டு விடைபெறும் தருணத்தில் பெரும் சோதனைகள், வேதனைகள், இழப்புகள், பெரும் இடர்பாடுகளுடன் முடிந்துள்ளது. இயற்கையின் இடர்பாடுகளால் ஏற்பட்ட துயரங்கள் எழுதி மாளாது.

இயற்கை நமக்கு அளித்த கொடையை அத்துடன் இணைந்து வாழ்ந்த வரை இடர்பாடுகள் குறைவாகத்தான் இருந்தது.

நிலமும், நீரும், காற்றும், நெருப்பு, ஆகாயம் என ஐம்பெரும் பூதங்கள் அனைவருக்கும் பொதுவானது.

ஆனால் அவைகளை சுயநலக்கார்கள் தனதாக்கி சொந்தம் கொண்டாட முற்பட்டனர்.

நீர் வழிப்பாதையை ஆக்கிரமித்து பிரம்மாண்ட கட்டிடங்கள் கட்டி அதற்குரிய பாதையை அடைத்து விட்டால், அது வேறொரு பாதையை தேடாமல் வேறு என்ன செய்யும்?

மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்கிற உயரிய எண்ணங்கள் படிப்படியாக குறைந்து, சுயநலம் மேலோங்கி தனக்கு கிடைத்திட்ட வாய்ப்புகளை தன்னை வளப்படுத்திக் கொள்ளவும், தன் வசதிகளை பெருக்கிக் கொள்ளவும் முயல்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருப்பது கவலை அளிக்கின்றது

சில நபர்களின் சுயநலத்தால் பல லட்சம் மக்கள் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.

இயற்கையோடு இணைந்து வாழ மறுத்து, அதனை எதிர்த்து வாழ முடியும் என்கிற நிலை எடுத்தால் இயற்கையின் சீற்றத்தை எதிர்கொள்ள எவராலும் முடியாது.

ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து மக்களை காக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு மட்டுமல்ல, பாதிக்கப்படாத மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களால் இயன்ற உதவிகள் அனைத்தையும் செய்வது தங்களது கடமை என கருதி உதவியவர்கள் உண்டு. அத்தகைய நல்லெண்ணம் வரவேற்கப்பட வேண்டும். ஊக்கப்படுத்திட வேண்டும். உதவிடுவோர் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும்.

மாநில அரசு தன்னால் இயன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டுள்ளது பாராட்டுக்குரியது. அனைத்தையும் மாநில அரசு மட்டுமே ஏற்று செயல்படுத்த முடியாது.

ஒன்றிய அரசு உதவி கரம் நீட்ட வேண்டும். வரி வசூல் அனைத்தையும் ஒன்றிய அரசு வாரி சுருட்டி செல்கிறது. பேரிடர் நிதி ஒன்று உருவாக்கப்பட்டு ஒன்றிய அரசின் பராமரிப்பில் உள்ளது.

தமிழ்நாட்டில் புயல் மழையின் பெருவெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களை பேரிடர் மாவட்டங்களாக அறிவிக்க வேண்டும் என்றும். 21,000 கோடி ரூபாய் நிதி வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ளது.

ஒன்றிய அரசோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகரம் நீட்ட மறுத்து, இதுதான் சந்தர்ப்பம் என அரசியல் பழிவாங்கல் என்கிற கொள்கையை மேற்கொண்டு இருப்பது பெரும் கொடுமையாகும்.

மக்களின் துயரங்களை, துன்பங்களை ரசிக்கும் நிலையை ஒன்றிய அரசு மேற்கொள்ளும் கொள்கை எனில் இதனை என்னவென்று கூறுவது?. ஒன்றிய அரசின் மனிதாபிமானமற்ற நிலையை என்னவெனக் கூறுவது?

ஒன்றிய அரசிடம் குவிந்துள்ள பணம் யாருடைய பணம்?. மோடிக்கும், அமித்ஷாவிற்கும், நிர்மலா அம்மையாருக்கும் சொந்தமான பணமா?. அவர்களது சொந்த பணத்தை நாம் கேட்கவில்லை. மக்கள் அளித்திட்ட பணத்தை, மக்களுக்காக கேட்கப்படுகின்றது.

ஆனால் ஒன்றிய அரசின் அணுகு முறையில் சிறிதும் ஜனநாயகம் இல்லை. மாறாக வஞ்சகம் நிறைந்த,



அருவருக்கத்தக்க அரசியல் செய்கின்றது.

அதனால்தான் இவ்வாண்டின் முதல் அரசியல் நடவடிக்கையாக ஜனவரி 8ஆம் நாள் தமிழ்நாடு முழுவதும், ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பாக பெருந்திரள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று முடிவு செய்துள்ளோம். இப் போராட்டம் ஒன்றிய அரசின் மிகக் குறுகிய அரசியலை, தமிழ்நாட்டு மக்களிடம் அம்பலமாக்கும் என்பது மட்டுமல்ல, ஒன்றிய அரசுக்கு அரசியல் ரீதியாக நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

கடந்த பத்தாண்டு காலமாக குறிப்பாக நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி என்பது, நாட்டின் பெரும்பான்மை மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மிகத் தந்திரமான முறையில் மேற்கொள்கிறது.

சூழ்ச்சிகளை, வஞ்சக செயல்களை அவ்வாறு எளிதில், எளிய மக்களால் புரிந்து கொள்ள இயலாது என்கிற எதார்த்தமான உண்மையை நாம் அறிவோம்.

அம்மக்களிடம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவான பாஜகவின் மக்கள் விரோத செயல்பாடுகள் குறித்து எடுத்துரைப்போம்.

மோடியின் அரசை கண்டு அல்லது மோடி, அமித்ஷா கூட்டணியை கண்டு அஞ்சிட வேண்டிய அவசியம் இல்லை.

இவர்கள் சுத்த கோழைகள். தங்களின் கொள்கைகளை பயங்கரமாக சொன்னவர்கள் இல்லை, தங்களின் ஆட்சியின் சாதனைகளை இவர்களால் சொல்ல இயலாது, தாங்கள் கொடுத்திட்ட வாக்குறுதிகள் எதனை எல்லாம் நிறைவேற்றி உள்ளோம் என்று இவர்களால் கூற இயலாது.

மாறாக மத வெறியை தூண்டுவதன் மூலம், தங்களின் அரசியலை தக்க வைத்துக் கொள்ள முயல்கிறார்கள்.

காலம் காலமாக பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக இந்திய அரசு குரல் கொடுத்து வந்தது. ஆனால், தற்போது மோடி அரசு அக் கொள்கையில் இருந்து விலகி இஸ்ரவேலுக்கு ஆதரவான நிலையை மேற்கொள்கிறது.

காஷ்மீர் மாநிலத்திற்கு எந்த அடிப்படையில் 370 பிரிவின் கீழ் சலுகைகள் வழங்கப்பட்டன என்பது குறித்து வெளியில் சொல்ல மாட்டார்கள். மாறாக, நாடு முழுதும் ஒரே சட்டம் என்று கூறி தப்பித்துக் கொள்வார்கள்.

இஸ்லாமியர்களுக்கு எதிராக, கிறிஸ்தவர்களுக்கு எதிராக இந்து மக்களை தன் பக்கமாக முழுமையாக அனித்திரட்டும் அற்பத்தனமான காரியத்தை செய்து கொண்டுள்ளனர்.

இந்து மதத்தை சாதிகளாக பிரித்து, சண்டையிட செய்து, இங்கேயும் பிளவை உண்டாக்கி இதில் குளிர் காய்கிற கூட்டம் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்து மதத்தை சார்ந்தவர்கள் நான்கு வர்ணங்களாக பிரிக்கப்பட்டு, ஏற்றத்தாழ்வை உருவாக்கி உயர் சாதி, கீழ் சாதி என்ற பாகுபாடு என்பது தொடர்கின்றது.

ராமாயணம் என்கிற இதிகாசம் நீண்ட காலமாக நம் நாட்டில் உலா வருகின்றது. நல்ல சுவை மிக்க கற்பனை கதை அவ்வளவுதான். அதற்கு மேல் ஒன்றும் இல்லை.

ஒரு கதை என்று வருகின்ற போது, அதில் வரும் கதாநாயகனின் பெற்றோர், அவன் பிறந்த ஊர் இவை பற்றி எல்லாம் கதை ஆசிரியர் குறிப்பிடுவார். அவ்வாறு குறிப்பிட்ட ஊர் தான் அயோத்தி.

அயோத்தியில் உள்ள பாபர் மசூதியில் தான் ராமர் பிறந்தார் என்று கூறி, பாபர் மசூதியை இடித்தார்கள் அயோக்கியர்கள்.

இடிக்கப்பட்ட இடத்தில் கோயில் கட்டி, ராமன் என்கிற பெயரில் உலோகத்தில் குழந்தை போன்ற உருவத்தை செய்து அதற்கு கும்பாபிஷேகம் செய்ய உள்ளார்கள்.

இதற்கான அழைப்பை தேடித்தேடி அரசியல் கட்சித் தலைவர்களுக்கு குறிப்பாக, இந்தியா கூட்டணியில் உள்ள தலைவர்களுக்கு வழங்கி வருகின்றனர்.

இவர்கள் போகவில்லை எனில், இவர்கள் இந்துக்களுக்கு எதிரி என்று விமர்சனம் செய்து, தங்களின் அரசியல் ஆதாயத்தை பெருக்கிக் கொள்ள முயல்வார்கள்.

ராமன் பிறந்த ஊரை தேடிப்பிடித்து அலைபவர்கள் ஊரைக் காட்டிலும் பெற்றவர்கள் இருக்கிறார்கள் அல்லவா?

தசரத மன்னனுக்கும், அவனின் அறுபதயிரம் மனைவிகளில் ஒருவரான, ராமனின் அம்மாவாக கூறப்படுகின்ற பத்தினியான கோசலைக்கும் எங்காவது கோயில் உண்டா?

பிறந்த ஊரை தேடி அலைந்து அங்கே தான் ராமன் பிறந்தான் என பித்தலாட்டத் தனமாக பேசுபவர்கள் பெற்றவளை மறக்கலாமா? கதைப்படி தசரத மன்னனுக்கும், கோசலைக்கும் பிறந்தவன் தானே இராமன் .

பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த கோசலைக்கு ஏன் கோவில் கட்டவில்லை?, ராமன் பிறப்பதற்கு காரணமான தசரத மன்னனுக்கு ஏன் கோவில் கட்டவில்லை?. கும்பாபிஷேகம் செய்யவில்லை?

மகாபாரத கதையை திரும்பத் திரும்ப கூறுபவர்கள். சூழ்ச்சிக்காரன் கிருஷ்ணனுக்கு கோவில் கட்டி வழிபடுகின்றார்கள். மதுராவில் கோவில் உள்ளது. அதன் அருகே உள்ள மசூதியை கிருஷ்ணர் பிறந்த இடம் இதுதான் என்று அதனை இடித்து தள்ள ஆயத்தமாகி வருகின்றார்கள்.

குந்திதேவிக்கு பிறந்தவர்களுக்கெல்லாம் கோவில் கட்டி கும்பாபிஷேகம் காண்பவர்கள், மூத்த மகனான கர்ணனுக்கு எங்கேயும் கோவில் கட்டி உள்ளார்களா? கடவுள் என்றால் தருமனுக்கு மூத்தவன் கர்ணன். அவன் ஏன் புறக்கணிக்கப்படுகிறான்?

கதையில் வரும் கதாபாத்திரங்களிலா கூட பாகுபாடு காட்டும் ஆர்.எஸ்.எஸ். கும்பல். மக்களின் மூடநம்பிக்கைகளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, அவர்களின் பலவீனத்தை தங்களுக்கு சாதமாக்கி கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் அவலத்திற்க்கு உள்ளாகியுள்ளது பாஜக.

2024 பொதுத் தேர்தலில் ராமரை காட்டி வாக்குகளை பெற, குள்ள நரி கூட்டம் திட்டமிட்டு வருகின்றது.

அயோத்தி கோவில் விழாவை ஒட்டி இல்லம் தோறும் விளக்கேற்றுங்கள் என்று கூறுகின்றார், மதச்சார்பற்ற நாட்டின் பிரதமர்.

விளக்கேற்றுவதன் மூலம், வாக்குகளை பெறலாம் என்கிற முயற்சியை மேற்கொள்கிறார்.

கதையில் வரும் கதாநாயகனை கடவுளாக்கி, மக்களை அதனை ஏற்க செய்து, அதனையே தங்களின் பாசிச அரசியலுக்கு பயன்படுத்த துணிந்துள்ள கூட்டம் பா.ஜ.க. என்பதனை கவனத்தில் கொண்டு, எதிர்வரும் நாடாளுமன்ற பொது தேர்தலை, கொள்கை ரீதியாக எதிர்கொண்டு, வகுப்பாக பாசிச சக்திகளை தோற்கடித்து, இந்தியாவை, நாட்டு மக்களை காத்து 2024 புதிய விடியலை காண்போம்.

மீண்டும் சந்திப்போம் !

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

# பாஜக அரசின் கொலைவெறி தாக்குதல் வெகுண்டெழுந்து போராடுவோம்



நா.பெரியசாமி

**இடதுசாரி கட்சிகள் மற்றும் ஜனநாயக கட்சிகள் ஆதரவோடு, கடந்த 2004 ஆம் ஆண்டு அமைந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் ஒன்றிய அரசு 2005 செப்டம்பர் மாதம் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் நிறைவேற்றியது.**



இச்சட்டத்தின் மூலம் நாடு முழுவதும் உள்ள ஊரகப் பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் குறிப்பாக விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு தலா 100 நாட்கள் வேலை பெறுவதற்கு சட்டபூர்வ உரிமை அளிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் வேலையின்மை பெருகி வரும் சூழலில், வேலை பெறுவதற்கு சட்டபூர்வ உரிமை அளிக்கும் தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் உலக நாடுகளின் பாராட்டை பெற்றது. உள்நாட்டில் உழைக்கும் மக்களுக்கு பெரும் நம்பிக்கை அளித்தது.

இதனைத் தொடர்ந்து சட்டத்தின் பெயர் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டம் என பெயர் மாற்றம் கண்டது. இந்தச் சட்டத்தின் கீழ் திட்டப் பணிகள் தயாரித்து, அவைகளை செயப்படுத்தும் அதிகாரம் கிராம சபா மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டது. இது கிராம மக்களிடம் புத்தெழுச்சியை உருவாக்கியது.

கடந்த 2006 பிப்ரவரி 2 ஆம் தேதி முதல் கட்டமாக 150 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகள் இன்று 740 க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் சுமார் 26 கோடி தொழிலாளர்களுக்கு வேலை பெறும் உரிமையை சட்டபூர்வமாக உறுதி செய்துள்ளது.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டச் செயலாக்கம், அதன் பலாபலன்கள் குறித்து பல்வேறு நிறுவனங்கள் ஆய்வு செய்துள்ளன. இதில் சர்வதேச அமைப்புகளும், பல நாடுகளின் அரசுகளும் ஈடுபட்டு, அதன் முடிவுகளை அறிக்கைகளாக வெளியிட்டுள்ளன. இந்த ஆய்வுப் பணி பல நிலைகளில் தொடர்ந்து வருகின்றன.

எந்தவொரு ஆய்வும் திட்டத்தின் மீது எதிர்மறையான கருத்துக்களை தெரிவிக்கவில்லை. மாறாக சமூக சொத்துக்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் உருவாக்கம், வேளாண்மை உற்பத்தித் திறன் அதிகரிப்பு, நிலத்தடி நீர் சேகரிப்பில் முன்னேற்றம், வேலை வாய்ப்புக்காக புலம் பெயர்ந்து செல்வது குறைந்திருப்பது, கூட்டு பேரம் பேசும் சக்தி அதிகரிப்பு என ஏராளமான நேர்மறை பலன்கள் இருப்பதை அனைத்து ஆய்வுகளும் உறுதி செய்துள்ளன.

இந்த முன்னோடி திட்டத்தை ஆர். எஸ். எஸ். வழிநடத்தும் பாஜக, ஆரம்ப நிலையில் இருந்தே எதிர்த்து வருகின்றது.

கடந்த 2014 ஆம் ஆண்டில் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் பாஜக அறுதிப் பெரும்பான்மை பலத்துடன் ஒன்றிய ஆட்சியில் அமர்ந்தது. அன்று முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை சீர்குலைத்து, சிதைத்து, அழித்தொழிக்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது.

உடல் உழைப்பு மட்டுமே வாழ்வாதாரமாக கொண்ட விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள் செய்யும் வேலையில் எந்திரங்கள் பயன்படுத்துவதும், ஒப்பந்ததாரர்கள் அனுமதிப்பதும் முற்றிலும் தடை செய்யப் பட்டிருக்கிறது. ஆனால், பாஜக ஒன்றிய அரசு வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் புதிது, புதிதாக வேலைகளை சேர்த்து அதனை பலவீனப்படுத்தியுள்ளது. வேலை வாய்ப்பு வழங்க முன்னுரிமை தருவதற்கு பதிலாக கட்டுமான, கட்டிட மூலப் பொருட்கள் வாங்குவதற்கு அதிக நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது

உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராக வளர்ச்சித் துறை அலுவலர்கள், ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்ட இடைத்தரகர்கள் ஆகியோர் 'புனித'' கூட்டணி அமைத்து சுயலாபம் பெறுவதற்கான சந்து, பொந்துகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இத்திட்டத்தில் ஊழலும், முறைகேடுகளும் நடைபெறுகின்றன. இந்த உண்மையை மறைக்க தொழிலாளர்கள் மீது "வேலை செய்யாமல் ஊதியம் பெறுகிறார்கள்; சாலையோர மர நிழலில் தூங்கி பொழுதை போக்குகிறார்கள்; அரசின் பணத்தை வீணடிக்கிறார்கள்; தொழிலாளர்களை சோம்பேரியாக்கும் திட்டம் என அவதூறு பரப்புரை செய்து வருகிறார்கள்.

பாஜக ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்திற்கான நிதியை வெட்டிக் குறைத்து வருகிறது. கடந்த 2020 – 23 ஆண்டில் ரூ 98 ஆயிரத்து 468 கோடி நிதி செலவிடப்பட்டுள்ள நிலையில் நடப்பு 2023 –24 ஆம் ஆண்டிற்கு ரூ 60 ஆயிரம் கோடி மட்டுமே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. இந்தத் தொகையை கொண்டு சுமார் 15 கோடி குடும்பங்களுக்கு தலா 100 நாட்கள் வேலை வழங்க இயலாது என்பதை இந்திய விவசாயத் தொழிலாளார் சங்கம் உள்பட பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் ஆதாரங்களுடன் எடுத்துக் கூறி, கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தின. ஆனால், ஒன்றிய அரசு அசைந்து கொடுக்கவில்லை.

ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதியில் செப்டம்பர் 2023 இறுதியில் ரூ 56 ஆயிரத்து 103 கோடி செலவிடப்பட்டு, அடுத்த ஆறுமாத காலத்திற்கு வேலை வழங்க முடியாத நெருக்கடி உருவாக்கப்பட்டுள்ளது.

வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் பாஜக ஒன்றிய அரசு தேசிய அலைபேசி வருகைப் பதிவு முறை (என்.எம்.எம். எஸ்.) அறிமுகப்படுத்தப்பட்டது. அதாவது ஒவ்வொரு ஊராட்சியிலும் வேலை உறுதியளிப்பத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் பணி யிடத்திற்கு வந்தவுடன, அவர்களை பணித்தளப் பொறுப்பாளர், அவரது ஆண்ராய்டு அலைபேசி மூலம் படம் பிடித்து, ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இதனை சரிபார்த்து, அதன் அடிப்படையில் ஊதியம் அனுமதிக்கப்படும் என்று நிபந்தனை விதித்தது.

இணையதள வலைத் தொடர்பு இணைப்பு கிடைக்காத ஏராளமான , ஊராட்சிகளில் தேசிய அலைபேசி வருகைப் பதிவு பெரும் இடையூறாக அமைந்தது. இதனை காரணம் காட்டி, தொழிலாளர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்த வேலை அட்டைகள், எவ்வித விசாரணையும் இல்லாமல் ஒரு தலைபட்சமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. இது போன்ற நடவடிக்கையால், இதுவரை 7.6 கோடி தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு பறிக்கப்பட்டுள்ளது என லிப் இண்டியா அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தற்போது வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் வேலை அட்டை பெற்றுள்ள குடும்பங்கள் அவர்களது வேலை அட்டையுடன், ஆதார் அடையாள அட்டையை இணைக்க வேண்டும் என ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறை நிர்பந்திக்கிறது. இப்படி வேலை அட்டையுடன், ஆதார் அடையாள அட்டையை இணைப்பதற்கான கால அவகாசம் 31.12.2023 ஆம் தேதியுடன் முடிந்து விட்டது. ஆதார் அடையாள அட்டை இணைக்காத குடும்பங்கள் ஊதியம் பெற முடியாது என அறிவித்துள்ளது:

ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறையின் நடவடிக்கை வேலை




உறுதியளிப்புச் சட்டத்திற்கும், உச்ச நீதிமன்ற தீர்ப்புகளுக்கும் எதிரானது.

ஆதாரர் அட்டை தொடர்பான வழக்கை உச்சநீதிமன்றத்தின் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து 2017 ஆகஸ்ட் 24 தீர்ப்பளித்துள்ளது.

இத் தீர்ப்பில் " அரசின் சேவைகளை பெறுவதற்கு ஆதார் அடையாள அட்டை கட்டாயமில்லை" என தெளிவாக கூறியுள்ளது.

கிராமப்புறத் தொழிலாளர்கள் சாதி, மத வேறுபாடுகள் கடந்து, பாலின பாகுபாடுகள் மறந்து உடல் உழைப்பு தொழிலாளர் என்ற முறையில் ஒன்று சேருவதை அணியமாவதை மதவெறி கொண்ட வகுப்பு வாத சக்திகள் ஏற்காது என்பதை அறிவோம். ஆர எஸ் எஸ் பாஜக வேலை உறுதியளிப்புத் திட்டத்தை அழித்து விட துடிக்கிறது.

வேலை பெறும் சட்டபூர்வ உரிமையை பாதுகாப்பதும், மேலும் வலுப்படுத்துவதும் கிராமப்புறப் பாட்டாளிகளின் உடனடி அரசியல் கடமையாகிறது. களம் தயாராகிறது. 23.01. 2024 ஆம் தேதி வெகுண்டெழுந்து போராடுவோம்.

**தொடர்புக்கு: 9443118544**

## வினாடி - வினா

1 காரல் மார்க்ஸ், ஃபிரெட்ரிக் எங்கெல்சை முதன் முதலாக எங்கு சந்தித்தார்?

2 காரல் மார்க்ஸ் பிரஷ்ய அரசாங்கத்தின் அழுத்தத்தால் எந்த நாட்டில் இருந்து எஎஎஓஓஉ வெளியேற ஆணையிடப்பட்டார்?


3 வானவில் தோன்றுவது எப்படி?

4 ஐ.நா. சபையில் பாட அனுமதி பெற்ற முதல் பாடகி யார்?

5 கற்கால மனிதர்கள் வாழ்ந்த குடிகள் குகைகளை கண்டுபிடித்த தொல்லியல் ஆய்வாளர் பெயர்?

6 குடவோலை முறை பற்றிய விவரங்கள் கொண்ட கல்வெட்டு எந்த இடத்தில் உள்ளது?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 40

# அதானி வாய்க்கு அவலாகும் இந்தியா!

கௌதம் அதானியின் சொத்துக்களின் மதிப்பு ஜனவரி மூன்றாம் தேதி காலை 11 மணிக்கு திடீரென 15 லட்சம் கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. சென்ற ஆண்டில், அது ரூபாய் 5.8 லட்சம் கோடியாக ஆழத்தில் கிடந்தது.

உச்ச நீதிமன்றத்தின் ஒரு தீர்ப்பினால், பங்குச் சந்தையில் ஏற்பட்ட தீவிர மாற்றங்களே இந்த திடீர் உயர்வுக்கு காரணமாகும்.

சென்ற ஆண்டு ஜனவரியில், ஹிந்தன்பர்க் ஆய்வு அறிக்கை, அதானி குழுமத்தின் வணிக நடைமுறைகள் குறித்த குற்றச்சாட்டுகளை முன் வைத்தது. குழுமத்துடன் தொடர்புள்ள பல்வேறு நிறுவனங்களில் நிதிநிலை மிக நன்றாக இருப்பதாகக் காட்டுவதற்காக, சட்டங்களை மீறிய வகையில் நிதிப் பரிவர்த்தனை செய்தது, முறைகேடான வகையில் நிதியை மாற்றி கையாண்டது, வரி ஏய்ப்பு செய்யும் வகையில் பல்வேறு செயல்பாடற்ற கம்பெனிகளை உருவாக்கி பராமரித்தது பற்றியதாக இந்த அறிக்கை இருந்தது.

இந்த குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணை செய்யுமாறு இந்திய பங்குகள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தை (ஷிணிஙிமி) உச்ச நீதிமன்றம் பணித்தது. 2023 ஆகஸ்ட் 14ஆம் தேதிக்குள் விசாரணை அறிக்கை சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பின்பு ஏறத்தாழ ஐந்து மாத காலமாகியும் செபி அறிக்கை தரவில்லை. எனவே விசாரணையை சிறப்பு புலனாய்வு குழுவுக்கு மாற்ற வேண்டும் என உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம் அவ்வாறு சிறப்பு விசாரணைக்கு அனுப்பத் தேவையில்லை என்றும் மூன்று மாத காலத்துக்குள் செபி விசாரணையை முடித்து தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இன்னும் மூன்று மாத காலத்துக்குள், நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்டுவிடும். தேர்தல் ஒழுங்கு நடைமுறைகள் அமலாக்கப்பட்டு விடும். அந்தக் களேபரத்தில், இந்த அறிக்கை வருமா, வராவிட்டால் அது குறித்த ஆட்சேபனை எழுமா, வந்தாலும் அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதெல்லாம் கேள்விக்குறி.

தீர்ப்பு வெளியானவுடன், "உண்மை நிலை நாட்டப்பட்டு விட்டது, சத்தியமேவ ஜெயதே" என்று அதானி கூறியிருக்கிறார். சாத்தான் வேதம் ஓதுகிறது. ஏறத்தாழ 10 மாத காலமாக விசாரணை நடக்கப்படாமல் பார்த்துக் கொள்வதையே சத்தியம் என்று சொல்ல முடியுமானால், "சத்தியமேவ ஜெயதே" (வாய்மையே வெல்லும்) என்ற முழக்கம் தூக்கிலேற்றப்படுகிறது என்று தான் பொருள்.

மொரிசியஸ், ஐக்கிய அரபு நாடுகள், பிரிட்டிஷ் வெர்ஜின் தீவுகள் ஆகியவற்றில், எந்தச் செயல்பாடும் இல்லாத 13க்கு மேற்பட்ட உப்புமா கம்பெனிகளை அதானி குழுமம் வைத்திருக்கிறது. இவற்றின் வழியாக கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்கள் வாங்கப்படுவதாகவும் விற்கப்படுவதாகவும் ஏராளமான வணிக பரிவர்த்தனைகள் நடத்தப்படுவதாகவும் பொய் கணக்கு எழுதப்படுகிறது. அதன் மூலம் அவை லாபம் ஈட்டி, அந்தப் பெரும் தொகைகள் அதானி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டதாக கூறி, பெரும் முறைகேடுகள் நடைபெறுகின்றன.

குஜராத்தில் உள்ள முந்த்ரா துறைமுகத்திற்கு இந்த நிறுவனங்களில் வாயிலாக நிலக்கரி ஏற்றுமதி செய்ததாக 12000 கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடு நடைபெற்று இருப்பதாக பைனான்சியல் டைம் பத்திரிக்கை வெளிப்படுத்தி இருக்கிறது.

இவற்றைப் பற்றி எல்லாம் மோடி அரசு கவலைப்படவில்லை. அதானியை தான் செல்லும் வெளிநாடுகளுக்கு எல்லாம் அவர் அழைத்துச் செல்கிறார். பக்கத்து நாடுகளில் எல்லாம் பெரும் நிறுவனங்களை அதானிக்கு தர வேண்டும் என்று வலியுறுத்தி பெற்றுத் தருகிறார்.

வெளிநாட்டில் அதானி நடத்தும் நிறுவனங்களுக்காக, இந்திய ஸ்டேட் வங்கி அதானிக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் (ஏறத்தாழ 8 ஆயிரம் கோடி ரூபாய்) வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்படுகிறது.

இந்தியர்களின் வரிப்பணத்தில் கட்டப்பட்ட ஏழு பெரிய விமான நிலையங்கள், 15 துறைமுகங்கள் அதானியிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டன.

உலகத்தில் மிகப்பெரிய சேரி என்று சொல்லப்படுகிற தாராவியில் மறு கட்டுமானம் செய்யும் ஒப்பந்தம். அதானிக்கு சாதகமான முறையில் விதிமுறைகளை மாற்றித் தரப்படுகிறது.

அதானியை சிக்கல்களில் இருந்து மீட்கவும், மேலும் கொழுக்கச் செய்யவும், மரபுகளுக்கும் சட்ட விதிகளுக்கும் முரணாக, மோடி அரசு அவருக்கு ஏராளமான சலுகைகளை தந்து கொண்டே இருக்கிறது. இந்த சலுகை சார் முதலாளித்துவ முறைமையையும், அதனால் இந்திய நாட்டில் உருவாகும் விலை உயர்வு, வேலையின்மை, அதிகரித்து வரும் ஏழ்மை, சமத்துவமின்மை ஆகியவற்றையும் எதிர்த்துப் போராடுவதற்கு இந்த நாட்டின் மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு சக்திகள் இன்னும் முனைப்போடு செயல்பட்டாக வேண்டும்.




1 ஆம் பக்கத் தொடர்ச்சி

சாட்டுகிறது.

இந்நிலையில் இந்து மகா சபை அமைப்பின் பொதுச் செயலாளர் சௌத்திரி, "அயோத்தியில் ராமர் கோயில் திறக்கப்படுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம், அதே நேரத்தில் பாஜக மட்டுமே இதன் ஒட்டுமொத்த பலனை அறுவடை செய்ய முயல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது" என்கிறார். "அயோத்தியில் கரசேவக இயக்கத்தை நாங்கள்தான் தொடங்கினோம், ஆனால் தற்போது ஒட்டுமொத்த நிகழ்வுக்கும் பாஜக குத்தகைதாரர் போல நடந்துகொள்கிறது" என விமர்சிக்கிறார். மத நிகழ்ச்சியை முழு அரசியல் பரப்புரையாக பாஜக மாற்றுவதால் ராமர் கோயில் திறப்புவிழாவில் எங்கள் அமைப்பு பங்கேற்காமல் புறக்கணிக்கிறது என்றார்.

இப்படி பாஜகவின் அயோத்தி அரசியல் மீதான விமர்சனங்கள் இந்துத்துவ அமைப்புகளிடமிருந்தே வந்துகொண்டிருக்கின்றன. இன்னொரு புறம், பாஜக சனாதன தர்மத்தை புறக்கணித்து விட்டது என்ற விமர்சனம் தீவிரமடைந்து வருகிறது. இந்தியாவின் முக்கிய பீடாதிபதிகள் மற்றும் மடாதிபதிகளைக் கொண்டு கோயிலை திறக்காமல் அரசியல்வாதிகள் திறப்பதா என விமர்சனம் எழுந்துள்ளது. ஊர்தோறும் சனாதனம் குறித்து வகுப்பு எடுக்கும் பாஜகவே, சனாதனத்தை மதிக்கவில்லை, காப்பற்றவில்லை என்ற விமர்சனத்தை எதிர்கொள்வது வேடிக்கைதான்!

## அயோத்தி நகரம் = கார்பரேட் + காவியின் சங்கமம்

அயோத்தியில் ராமர் கோயில் கட்டுவதற்கு கடந்த 2019 ஆம் ஆண்டில் நீதிமன்றம் பச்சைக்கொடி காட்டியதுமே, அயோத்தியையும் ராமர் கோயிலையும் மையப்படுத்திய பரப்புரையை பாஜக தொடங்கிவிட்டது. கோயில் திறப்பு விழாவுக்கு சில தினங்களுக்கு முன்னர், அண்மையில் அங்கு சென்ற பிரதமர் சுமார் ரூ.15,700 கோடி மதிப்பிலான புதிய சர்வதேச விமானநிலையம், சாலைகள், தங்கும் விடுதி மற்றும் ரயில் நிலையம் போன்ற உட்கட்டமைப்பு திட்டங்களை தொடங்கி வைத்தார். ஆன்மீகத்தோடு நவீனத்தையும் இணைக்கிற வகையில் அயோத்தியை நவீனப்படுத்துகிற கார்பரேட் பாணியிலான ஸ்மார்ட் சிட்டி நகரமாக மாற்றுவோம் என்றார்.

நவீன காலத்தில் கார்பரேட் மற்றும் காவியின் சங்கமத்தை இந்துத்துவவாதிகள் அயோத்தியில் அரங்கேற்றி வருகிறார்கள். மும்பை, தில்லி, கோவை, பெங்களூரு என நாட்டின் முக்கிய நகரங்களில் இருந்து விமானம் மற்றும் ரயில் போக்குவரத்தை அயோத்தியுடன் இணைப்பதன் மூலமாக அயோத்தியை இந்தியாவின் ஆன்மீகத் தலைநகராக பாஜக மாற்றுவதை விளங்கிக் கொள்ளலாம். நாட்டின் பல கோடி மக்கள் வறுமையிலும் வேலையில்லாமலும் திண்டாடி வருகையில் பல ஆயிரம் கோடிகளை மதத்தின் பெயரால் கடவுளின் பெயரால் இந்துத்துவ பாசிஸ்ட்கள் வீணாக்கி வருகிறார்கள். நாட்டுக்கே இது அவமானகரமான காலமாகும்!

## ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இலக்குகள்

ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் இலக்கு, நிச்சயம் அயோத்தியோடு மட்டும் நிற்கப்போவதில்லை. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அடுத்தடுத்த இலக்குகள் என்ற கட்டுரையில் வரலாற்றாசிரியர் ஏ.ஜி நூராணி எச்சரிப்பதாவது,

"அயோத்தியில் உள்ள பாபர் மசூதி, மதுராவில் உள்ள மசூதி மற்றும் வாரணாசியில் உள்ள ஞானவாபி மசூதி ஆகிய வரலாற்றுச் சிறப்புமிக்க மசூதிகளை அழிக்க வேண்டும் என்ற குறிக்கோளை தொடக்கம் முதலே சங்கப் பரிவாராம் (ஆர்.எஸ்.எஸ் வி.எச்.பி பா.ஜ.க) தன்னுடைய செயல்திட்டத்தில் கொண்டிருந்தது" என்கிறார்.

மேலும் கூறுவதாவது, "ஏற்கனவே பாபர் மசூதியை தன்னுடைய "சாதனைகளில்" ஒன்றாக சேர்த்த நிலையில், தற்போது நரேந்திர மோடி மங்கி வரும் தன்னுடைய செல்வாக்கை மாற்றியமைப்பதற்கு மதுரா மற்றும் வாரணாசியில் உள்ள இரண்டு மசூதிகளை பயன்படுத்த ஆயத்தமாயிருக்கிறார். அதுவும் தன்னுடைய அதே யுக்தியான நீதிமன்றங்கள் வாயிலாக" என்கிறார்.

ராமர் கோவில் கட்டுவது என்பது தேசம் முழுவதையும் ஒன்றிணைப்பதற்கான வேலையாகும். "எல்லாவற்றுக்கும் மேலாக, ஸ்ரீராமர் அனைவருக்குமானவர், அனைவருக்குள்ளும் வாழ்பவர்", என ஆர்.எஸ்.எஸ் பத்திரிகையில் எழுதிய மோடி, அயோத்தியில் திட்டங்களை தொடங்கி வைத்துப் பேசிய போது, 550 ஆண்டுகால காத்திருப்பு, வேதனைக்கு இப்போது விடிவுகாலம் பிறந்துள்ளது என தனது மதச்சார்பு கொள்கைகளையும் கருத்துக்களையும் தான் வகிக்கும் பதவிக்கும் பொறுப்புக்கும் சற்றும் பொருத்தமற்ற வகையில் ஆர்.எஸ்.எஸ் ஊழியர் போல பேசி வருகிறார். மோடி ஆட்சியில்தான் வரலாறு காணாத வகையில் இந்திய குடியரசு மீதான பெரும் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. 'நீதித்துறை என்ற இந்த நிறுவனத்தைப் பாதுகாக்கத் தவறினால் இந்த நாட்டில் ஜனநாயகம் இல்லாமல் போய்விடும்' என உச்ச நீதிமன்ற நீதிபதிகள் மக்களிடத்தில் முறையிட்டது இதற்கு முன் இந்திய அரசியல் உலகம் கண்டிராத நிகழ்வு.

நவீன மனித சமூகத்திற்கு எதிரான கருத்தியலை நடைமுறையாக்குவதற்கு தடையாக இருக்கும் நவீன குடியரசு நிறுவனங்களை கல்லறையில் புதைப்பதற்கு இவர்கள் ஷாகாக்களை தயாரிக்கிறார்கள். பிற்போக்கு வரலாற்றைப் படைப்பதற்காக 140 கோடி மக்களின் சமகால வாழ்வையும் எதிர்கால வாழ்வையும் பல நூறாண்டுக்கு பின்னுக்கு அழைத்துச் செல்லத் துடிக்கிறார்கள்.

தனது தான்தோன்றித்தன செயல்பாடுகளால், நவீன குடிமைச் சமூகத்தின் வரலாற்றை பின்னோக்கி இழுத்துத் செல்கிற ஆன்மீக பாசிசமாம் இந்துத்துவ பாசிசத்தின் இத்தாக்குதல்கள் 140 கோடி மக்களின் சகோதரத்துவ வாழ்வுக்கு பெரும் கூட்டுச் சவக்குழியை வெட்டி வருகிறது.

ஜனநாயக குடியரசுக்கும் பிற்போக்கு பாசிசத்திற்கும் இடையிலான முதல் நேரடிப் போரான ஸ்பெயின் உள்நாட்டு போர், ஐந்து லட்சம் மக்களை கல்லறையில் கொன்று புதைத்தது. அதைத் தொடர்ந்து வந்த முசோலினியின் பாசிசமும் ஹிட்லரின் நாசிசமும் உலகை இரண்டாம் உலகப் போருக்கு இழுத்து சென்று சவக் குழிகளை கோடிக் கணக்காக்கியது.

ஜெர்மானிய நாசிசம் மற்றும் இத்தாலிய பாசிசத்தின் பண்புகளை ஆதர்சமாக கொண்ட நூறாண்டு பழமை அமைப்பான ஆர்.எஸ்.எஸ் தமது பிற்போக்கு குணாம்சமான ஆன்மிக இந்துத்துவ பாசிசத்தை இந்திய நிலைமைக்கு ஏற்ப உருவாக்கிக் கொண்டுள்ளது. ராமர் கோயில் திறப்பு நிகழ்வானது பாஜகவிற்கும் மோடிக்கும் முக்கிய வரலாற்று மைல்கல் என்பது கசப்பான எதார்த்த உண்மையாகும்.

இந்த இக்கட்டான நிலையில் எதிர்ப்பற்ற பாய்ச்சலை மேற்கொண்டு வரும் பிற்போக்கு சக்திகளை முறியடிப்பது நமது வரலாற்று கடமையாகும். கடந்த கால பிற்போக்கு அரசியலை முறியடித்து எதிர்கால பொன்னுலகை கட்டுவதற்கு நாம் நிகழ்காலத்தில் போராடியே தீர வேண்டும்.

அருண் நெடுஞ்செழியன்
தொடர்புக்கு: 9842391963

# நில அபகரிப்புக்கு துணை போகும் அமலாக்கத்துறை !



த.லெனின்

**எதிர்க்கட்சிகளை மிரட்டுவதற்கும் பழிவாங்குவதற்கும் அமலாக்கத்துறை போன்ற அமைப்புகளை பயன்படுத்தி வருகிறது பாஜக. தற்போது தங்களது கட்சி நிர்வாகிகளுக்கு அவர்களின் நில அபகரிப்புக்கு ஆதரவாக செயல்பட்டு ஏழை எளிய மக்களையும் மிரட்டத் தொடங்கிவிட்டது.**

சங்கிகள் அதிகாரத்திற்கு வந்தால் சாமானிய மக்களின் நிலை என்னவாகும் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் இந்த நிகழ்ச்சி அமைந்துள்ளது.

### சேலம் ஏழை விவசாயிகளின் மீது வழக்கு!

சேலம் மாவட்டம் அப்பம்ம சமுத்திரம் ஊராட்சிக்கு உட்பட்ட காரமடை திட்டு பகுதியை சேர்ந்த வயோதிக விவசாயிகள் கண்ணையன் மற்றும் கிருஷ்ணன். இவர்களுக்கு அப்பகுதியில் சுமார் ஆறரை ஏக்கர் விளைநிலம் உள்ளது. இவர்களின் இந்த நிலத்தை அபகரிக்கும் நோக்கில் பா.ஜ.கவின் சேலம் கிழக்கு மாவட்ட இலக்கிய அணி செயலாளர் குணசேகரன் என்பவர் தொடர்ந்து பல்வேறு அச்சுறுத்தல்களையும் கொலை மிரட்டல்களையும் விடுத்து வந்துள்ளார்.


தன்னிடம் அவர்கள் சுமார் 90 ஆயிரம் ரூபாய் வாங்கியிருப்பதாகவும் அதற்கு இரண்டு ஏக்கர் நிலத்தை அடமானம் வைத்ததாகவும் வட்டியாக 60 ஆயிரம் ரூபாய் வந்துவிட்டதாகவும் கூறி ஒரு வழக்கினை கிழமை நீதிமன்றத்தில் அவர்கள் மீது தொடுத்துள்ளார். உரிய படிப்பறிவு இல்லாதவர்களால் நீதிமன்றத்தில் வழக்கறிஞரை வைத்து வாதிடவும் முடியாத நிலையில் அப்படியே வாதிட்டாலும் அந்த வழக்கறிஞரையும் தனக்கு சார்பாக மாற்றி ஒரு தலைப்பட்சமான தீர்ப்பை பெற்றுள்ளார். இதற்கு ஆதரவாக அவர் காட்டும் எழுதி வாங்கிய பத்திரம் முறையானதாக இல்லை என்பதும் தெரிய வருகிறது. அத்துடன் இப் பகுதிகளில் ஏற்கனவே இவர் இது போன்ற பல நில பறிப்புகளில் ஈடுபட்டவர் என்பதும், இவர் மீது பல்வேறு வழக்குகள் இருக்கும் நிலையில் இத்தீர்ப்பு பெறப்பட்டுள்ள என்பதும் குறிப்பிடத்தக்கது. போராடி நிலத்தை விவசாயிகளுக்கு பங்கிட்டு கொடுத்தனர் கம்யூனிஸ்ட்கள். அதை திரும்ப பிடுங்குகிறது பா.ஜ.க.

### நில அபகரிப்பில் பாஜக!

இந்த இரண்டு ஏழை விவசாயிகளும் விவசாயம் செய்வதற்கு உழுவதற்கு டிராக்டர்களை அமர்த்தினால் அவர்களை மிரட்டி தடுத்து நிறுத்தி உள்ளார். அதையும் மீறி அவர்கள் பயிரிட்டபோது அவர்களது நெற்பயிரை அறுவடை செய்யும் நேரத்தில் அதற்கு மேல் உள்ள தனது நிலத்திலிருந்து வேண்டும் என்றே உள்நோக்கத்தோடு தண்ணீரை திறந்து விட்டு அவர்களுக்கு பெரும் தீங்கு செய்துள்ளார் குணசேகரன்.

### அமலாக்கத்துறை அதிகாரிகளை கைது செய்க!

இது தொடர்பாக காவல் நிலையத்திலும் நீதிமன்றத்திலும் வழக்குகள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில் சில மாதங்களுக்கு முன்பு அமலாக்கத்துறையில் இருந்து சம்மன் ஒன்று வந்தது. விவசாயிகள் இருவரின் சாதி பெயரை குறிப்பிட்டுள்ளது. இதுவே தலித்துகள் மீதான வன்கொடுமை குற்றமாகும். அவ்வதிகாரிகள் மீது தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவது மிகவும் அவசியம் என்பதை .இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பலரும் வலியுறுத்தி வருகின்றனர்.




இதற்கிடையே தற்போது சென்னையில் ஜிஎஸ்டி வரித்துறையில் துணை ஆணையராக பணியாற்றி வரும் இந்திய வருவாய்த்துறை அதிகாரி பாலமுருகன் ஜனாதிபதி திரௌபதி முர்முவுக்கு பரபரப்பான கடிதத்தை எழுதியுள்ளார். அதில் சம்மன் அனுப்பப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்கில் ரூ.450 தான் இருந்துள்ளது. இவர்கள் தமிழக அரசின் முதியோர் உதவித்தொகையை பெற்று வருகின்றனர். சேலம் மாவட்ட பாஜக பிரமுகர் அளித்த புகாரில் அவர்களுக்கு ஜாதி பெயரை குறிப்பிட்டு சம்மன் அனுப்பியது என்பது ஆச்சரியமளிக்கும் வகையிலும், கண்டிக்கும் வகையிலும் உள்ளது.என்றும் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பதவி விலக வேண்டும் என்றும் கோரிக்கையையும் வைத்துள்ளார்.

அமலாக்கத்துறை அனுப்பிய சம்மனில் சட்டவிரோத பணம் பரிமாற்றம், சட்டத்தின் கீழ் விசாரணை செய்ய வேண்டும் என்றும், ஆஜராகும் போது வங்கி கணக்கு புத்தகம், ஆதார் அட்டை, பான் கார்டு ஆகியவற்றோடு ஆஜராக வேண்டும் என்றும் நேரில் ஆஜராகவில்லை என்றால், சட்டவிரோத பணம் பரிமாற்ற சட்டத்தின் கீழ் இருவருக்கும் சொந்தமான ஆறரை ஏக்கர் நிலத்தை ஜப்தி செய்வோம் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட விவசாயிகள் இருவரும் வழக்கறிஞர் பிரவீனா என்பவரின் உதவியுடன், சென்னையில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் ஆஜராகினர். படிக்கத்தெரியாத, வயதான விவசாயிகளுக்கு உதவியாகச்சென்ற வழக்கறிஞர்களை அமலாக்கத்துறை அலுவலகத்திற்குள் அனுமதிக்கவில்லை. இதனை எதிர்த்து வழக்கறிஞர்கள் "வழக்கறிஞரோடு வரக்கூடாது என்பதற்கான விதிமுறைகள் எதாவது இருக்கிறதா?" என்பதை எங்களுக்கு காட்ட வேண்டும் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டனர். அதற்கும் முறையான பதில் அளிக்காமல் அமலாக்கத் துறை காவலர்களை அனுப்பி உங்களை வெளியே தள்ளுவோம் என்றும், முதலமைச்சராகவே இருந்தாலும் எங்களை எதுவும் செய்ய முடியாது என்றும் அதிகார, ஆணவச்சருக்கோடு பேசியதும் வீடியோவாக பதிவாகியுள்ளது. பின்பு அப்பாவி விவசாயிகள் இருவரையும் உள்ளே அழைத்துச்சென்று விசாரணை என்ற பெயரில் மிரட்டல் விடுத்துள்ளனர்.

### புதுக்கதை விடும் அமலாக்கத்துறை!

இப்போது அமலாக்கத்துறை வேறொரு கதையைக் கூறுகிறது. விவசாயிகள் காட்டெருமையை வேட்டையடினார்களாம். காட்டெருமையை தனியொருவராக வேட்டையாட முடியாது என்கின்றனர் விவரமறிந்தவர். அந்த வழக்கில் WLOR - 1/2017 குற்றச்சாட்டு நிரூபிக்க இயலாத காரணத்தினால் கடந்த 28.12.2021 ல் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். தீர்ப்பிற்கு பிறகு அந்த வழக்கில் அமலாக்கத்துறை சொத்து ஆவணங்களோடு ஏன் ஆஜராக கேட்டது? தமிழ்நாடு வனத்துறை அமலாக்கத்துறையிடம் முறையிட்ட ஆவணம் எங்கே? விடுதலைக்கு பிறகு அதே வழக்கில் விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அமலாக்கத்துறைக்கு எப்படி வந்தது அதிகாரம்?

ஆனால் உண்மையோ வேறுவிதமாக இருக்கிறது. தேசிய குற்ற ஆவண காப்பகம் (NCRBHQ) வெளியிட்ட அறிக்கையில் கடந்த 2017 – 19 வரை எந்த ஒரு வழக்கும் தமிழ்நாட்டில் பதிவாகவில்லை. ஆனால் 2017 – 23 வரை உள்ள காலகட்டத்தில் உத்திரபிரதேசத்தில் 1195 வழக்கும், ராஜஸ்தானில் 964 ம், தமிழ்நாட்டில் வெறும் 4 வழக்குகள் மட்டுமே பதிவாகியிருக்கின்றன. சரி அஅப்படியே எடுத்துக்கொண்டால் கூட வழக்குகள் அதிகம் பதிவாகியுள்ள உ.பி., ராஜஸ்தான், மகாரஷ்டிரா மாநிலங்களில் உள்ள ஒரு வழக்கிற்கு கூட அமலாக்கத்துறை ஏன் விசாரிக்கவில்லை? இதைதான், ஒரு பொய்யை மறைக்க, ஓராயிரம் பொய்யை அடுக்குவது என்பதா?

### பா.ஜ.க.வின் கைப்பாவையாக அமலாக்கத்துறை!

அமலாக்கத்துறை பாஜகவினரின் கைபாவை ஆகிவிட்டது என்பதற்கு கண்கூடான சாட்சியாக இந்நிகழ்வு அமைந்துள்ளது. விவசாயிகள் 15 ஸ்டேன்டர்டு ஏக்கர் நிலம் வைத்துக் கொள்ளலாம் என்கிறது தமிழ்நாட்டின் நில உச்சவரம்புச் சட்டம். அப்படியே இச்சட்டத்தை மீறி நிலம் வைத்திருந்தாலும் இது குறித்து நடவடிக்கை எடுக்க தமிழக அரசுக்குத் தான் உரிமை உண்டு. ஆனால் ஏழை தலித்து விவசாயிகளின் நிலத்தை பிடுங்க கேவலம் அமலாக்கத்துறை அதற்கு உதவி இருக்கிறது என்றால் இதைவிட பெரிய கொடுமை வேறு என்னவாக இருக்க முடியும்?

சட்ட விரோத பண பரிமாற்றம், கருப்பு பணம்,, வருமானத்துக்கு மீறிய சொத்து சேர்ப்பு, வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமாக வரும் பணம் உள்ளிட்டவற்றை விசாரிக்க உருவாக்கப்பட்ட ED அமைப்பு இப்போது பாஜகவின் கை பாவையாக மாறி காரியம் ஆற்றும் நிலைக்கு சரிந்து போனது இந்திய வரலாற்றிலேயே இப்போதுதான் நடந்திருக்கிறது.

### சவத்துப்போன ச(ர)வுக்கு சங்கர்!

கடந்த டிசம்பர் 1ம் தேதி அரசு மருத்துவரிடம் ரூ.20 லட்சம் லஞ்சம் வாங்கியதாக தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு துறையால் அமலாக்கத்துறை அதிகாரி அங்கித் திவாரி கைது செய்யப்பட்டார். தமிழக அரசு மருத்துவர் மீது நிலுவையில் உள்ள புகாரை நீக்க லஞ்சம் கேட்டு இப் பணத்தை பெற்றுக்கொண்டதாக ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 7(ஏ)ன் கீழ் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த கைதுக்கு பிறகு திவாரியின் அலுவலகம் மற்றும் வீட்டில் ஊழல் கண்காணிப்பு இயக்குனரகத்தின் (ஞிக்ஷிகிசி) தொடர் சோதனைக்கு வழிவகுத்தது.முதலில் அமலாக்கத்துறை இந்த சோதனைகளுக்கு இழுத்தடிப்பு செய்தது. ஆனால் அதையும் மீறி சோதனைகள் நடைபெற்றது. பின்பு வேறு வழியின்றி அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு அவர் மீது அமலாக்க துறையே வழக்கு பதிந்துள்ளது.

சமூக செயல்பாட்டாளர் என கூறிக் கொள்ளும் யூடியூபர் சவுக்கு சங்கர்அமலாக்க துறையை காப்பாற்ற, பாஜகவை பாதுகாக்க இந்த ஏழை தலித் விவசாயிகள் பேரில் யாராவது அரசியல்வாதிகள் நிலம் வாங்கியிருக்கலாம் எனப் பேசியிருப்பது எவ்வளவு பெரிய அயோக்கியதனம். அவர்களது பூர்வீக நிலத்தை ஒரு பாஜக பிரமுகர் வளைத்து போட விரும்புகிறார் அதை கேள்வி கேட்க முடியவில்லை! இப்படிப்பட்ட இந்த நிலப் பிரச்சனைக்கு ஒன்றிய அரசின் அமலாக்கத்துறை வருகிறது அதுவும் விவசாயிகளின் பெயரோடு அவர்களது சாதியையும் குறிப்பிட்டு ஒரு வன்கொடுமையை இழைத்திருக்கிறது அதையும் கேள்வி கேட்க அவருக்கு மனம் வரவில்லை!

ஆனால் அமலாக்க துறையின் நடவடிக்கையை நியாயப்படுத்தும் விதத்தில் இப்படி அவர் பேசுவது எதைக் காட்டுகிறது? அவரும் விற்பனை பொருளாகி விட்டார் அவருக்கு அவர்களால் பண பரிமாற்றம் நடந்து விட்ட காரணத்தால் இன்று இந்த அநீதியை அவர் நியாயப்படுத்தவும் துணிந்து விட்டார்.

அமலாக்கத்துறை இதுவரை ஒன்றைக் கூட நீதிமன்றத்தின் நிரூபித்து அக்குற்றத்திற்காக குற்றவாளிகளை தண்டித்ததாக வரலாறு இல்லை. மாறாக அவர்களை வாட்டி வதக்கி தமது பாஜக எஜமானர்களை திருப்தி படுத்தவும் இந்தியாவில் எதிர்க்கட்சிகளை முடக்கவும் தான் இந்த ஆள் தூக்கி சட்டத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர். ஏனென்றால் விசாரணைக்கு முன்பே அவர்கள் சிறை தண்டனையை அனுபவித்து வாட்டப்படுகின்றனர். இப்படி இந்த வழக்கில் வாடியவர்கள் பலர் பாஜகவிற்கு ஆதரவு தெரிவித்து ஆதரவாளர்களாக மாறியுள்ளதும் பதவிகளை சுவைப்பதும் பாஜகவிலேயே ஐக்கியமாகி புனிதர்களாக ஆகின்றனர்.

ஆட்டைக் கடித்து மாட்டை கடித்து மனிதனை கடித்த கதையாக, பாஜகவினரின் ஊதுக்குழலாக அவர்கள் ஆட்டுவிக்கும் ஆட்டங்களுக்கு ஏற்ப ஆடும் ஒரு துறையாக அமலாக்கத்துறையாக மாறிவிட்டது. எனவே வரும் 2024 நாடாளுமன்ற தேர்தலில் மத்தியில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாக வேண்டும். அப்படி ஏற்பட்டால்தான் அமலாக்கத் துறையின் அத்துமீறலில் மாற்றங்கள் ஏற்படும். எனவே அநீதிகள் களைய போராட்டங்கள் எழட்டும்! அதிகாரப் பீடங்கள் தகரட்டும்!



(தற்போது இவ்வழக்கை கைவிடுவதாக அமலாக்கத்துறை அறிவித்துள்ளது. ஆனாலும் தலித் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்டே ஆகவேண்டும்.)

தொடர்புக்கு:
9444481703

# வர்க்க ஒற்றுமைக்கான பயணத்தில் கம்யூனிஸ்டுகள்



ம.இராதாகிருஷ்ணன்

**“இத்தனை நூற்றாண்டு காலமாக பெரிய நிலப்பரப்புக்களின் ஆதிக்கத்தில் துன்பப்பட்ட உழைக்கும் மக்கள், அதே துன்பத்தை முதலாளிகளின் ஆதிக்கத்தில் அனுபவிப்பது தான் நவீன தொழில்களால் வந்த பயன்”**

**சதீஸ் சந்திர முகிர்ஜி**

19ஆம் நூற்றாண்டின் இந்தியத் தலைவர்களில் மற்ற எந்த சமகாலத்துவரையும் விட மேற்குலகின் தொழில்துறை செயல்பாடுகள் பற்றி அதிகமாக தெரிந்தவர் முகர்ஜி என்று பேராசிரியர் பிபின் சந்திரா குறிப்பிடுகிறார். மாமேதை எங்கல்ஸ் அவர்களின் இங்கிலாந்தில் தொழிலாளி வர்க்கம் (State of working class in England) என்ற நூலில் இருந்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, “மேற்கு உலகின் தொழில் முறை இந்தியாவில் வந்தால் அது மிகச் சிறிய எண்ணிக்கையிலான ஒரு முதலாளித்துவ வர்க்கத்தை உருவாக்குவதில் தான் முடியும். இந்த வர்க்கம் அந்நியரோ, நம்மவரோ யாராக இருந்தாலும் அதன் சக்தி வளர்வது, சாதாரண மக்களின் வாழ்வு மலர்ந்ததாக பொருளாகாது”.

“உழைக்கும் வர்க்கம் மனித எந்திரமாக மாற்றப்பட்டு விடும். சுயமரியாதை இழந்து முதலாளிகளால் ஆதிக்கம் செலுத்தப்படும் கூட்டமாக மாறிவிடும்”.

இந்தத்துயரிலிருந்து தப்பிக்க உழைக்கும் வர்க்கம் ஒன்றிணைந்து மிகப்பெரிய அளவில் தொழிலாளர் அமைப்புகளை அமைத்து ஒன்றிணைந்துள்ள முதலாளித்துவ சக்திகளுக்கு எதிராக போர் கொடுக்கும் வல்லமை பெற வேண்டும். பெரிய அளவில் முதலாளித்துவ வர்க்கத்தின் வளர்ச்சி இறுதியில் தொழில் அடிமைத்தனத்திற்கு தான் இட்டுச் செல்லும்.

1898 ஆம் ஆண்டிலேயே முகர்ஜி, பிரடெரிக் எங்கெல்ஸ் அவர்கள் நூலை அடிப்படையாகக் கொண்டு எச்சரித்தார். இன்று முதலாளித்துவ வர்க்கம் கார்ப்பரேட் வடிவெடுத்து, பாசிச சக்திகளை ஊக்குவித்து நாட்டையே கார்ப்பரேட்டும் காலடியில் கொண்டு சேர்க்க முயற்சித்து கொண்டு இருப்பதை காண்கிறோம்.

முதலாளித்துவ வர்க்கம் தான் விருப்பம் போல் சுரண்டி கொழுப்பதை தடுத்து நிறுத்தி உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்டத்தில் கம்யூனிஸ்டுகள் முன்னணியில் இருக்கின்றனர். பிரிட்டிஷ் இந்திய ஆட்சி காலத்தில் நீண்ட நெடிய தொழிலாளர்களின் போராட்டத்தின் வெளிப்பாடாக 1920 ஆம் ஆண்டு நாட்டின் முதல் மத்திய தொழிற்சங்கம் ஏஐடியுசி பிறந்தது.

இதற்கு அதே ஆண்டில் உருவான பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் மற்றும் பிரிட்டிஷ் தொழிற்சங்கத்தின் பங்களிப்பும் இருந்தது என்பதை வரலாற்று ஆவணங்கள் உறுதி செய்கின்றன.

1885 ஆம் ஆண்டில் உருவான இந்திய தேசிய காங்கிரஸ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடமிருந்து இந்தியாவிற்கு பூரண சுதந்திரம் வேண்டும் என்று கேட்கத் துணிவில்லாத நிலையில் தான் 1921 ஜாலியாவில் நடைபெற்ற ஏஐடியூசி மாநாடு பூரண சுதந்திரமே எமது கோரிக்கை என்ற விடுதலைக்கான கோசத்தை இந்தியாவிலேயே முதல் முறையாக எழுப்பியது. இந்திய மக்கள் சுயராஜ்யத்தை அடைவதற்கான தருணம் வந்துவிட்டது என இந்த மாநாடு அறிவிக்கிறது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதே தீர்மானத்தை அதே ஆண்டில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபையில் ஹஸ்ரத் மொகானி என்ற கம்யூனிஸ்ட் முன்வைக்க தீர்மானம் தோற்றுப் போனது. 1922ல் கயாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் “Dear Comrades, உலக கம்யூனிஸ்டுகள் சார்பாக நான் இங்கு வந்துள்ளேன்.”எனத் தொடங்கி பொருள் உற்பத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களைத் திரட்டுவது பற்றி பேசினார். அவ்வுரையில் பூரண விடுதலையைக் குறித்த தீர்மானத்தை முன்வைத்தார்.

1928 வரை ஓர் ஆண்டும் கம்யூனிஸ்டுகள் இந்த தீர்மானத்தை முன்மொழிந்தனர். 1923 ஆம் ஆண்டு சென்னையில் மே தினத்தை கொண்டாடி, இந்துஸ்தான் தொழிலாளர் விவசாயிகள் கட்சியை துவக்கி வைத்தார் சிங்காரவேலர். அகில இந்திய தொழிலாளர் விவசாயிகள் கட்சி 1928 இல் உருவானது. அதன் தேசிய செயற்குழுவிற்கு தேர்வு செய்யப்பட்ட 16 பேரில் 10 பேர் கம்யூனிஸ்டுகள்.

அகில இந்திய தொழிலாளர் விவசாயிகள் கட்சி, ஏஐடியுசி,ஹிந்துஸ்தான் சோசியலிச குடியரசு போன்ற அமைப்புகளின் சார்பில் காங்கிரஸ் மாநாட்டு பந்தலின் முன்பாக 50,000க்கும் மேற்பட்டோர் திரண்டு, பூரண சுதந்திரம் கேட்டு காங்கிரஸ் தீர்மானம் இயற்ற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினர். மோதிலால் நேரு தலையிட்டு தீர்மானம் ஏற்றுவதற்கு உறுதியளித்து, காங்கிரஸ் மகாசபை இந்தியாவிற்கு பூரண சுதந்திரம் வேண்டுமென்ற தீர்மானத்தையே நிறைவேற்றியது.

விடுதலை போராட்டத்திலும் வர்க்க உரிமை போராட்டத்திலும் இந்திய தொழிலாளி வர்க்கம் வீரமுடன் முன்னேறியது கம்யூனிஸ்டுகள் மீது பல்வேறு சதி வழக்குகள் அடக்குமுறை சித்திரவதை ஏவி விடப்பட்டது. 1926 இல் 32 தலைவர்கள் மீரட் சதி வழக்கில் கைது செய்வதற்காக அவர்கள் சிறையில் இருந்த நிலையில் வி. வி. கிரி, என். எம்.ஜோஷி ஆகியோர் ஏஐடியுசியில் இருந்து வெளியேறி இந்திய தொழிற்சங்க சம்மேளனத்தை அமைத்தனர். பி. டி. ரணதிவே தலைமையிலும் ஒரு சங்கம் அமைத்தனர்.



32 தலைவர்கள் விடுதலை ஆன பிறகு சங்கங்களை ஒன்றாக்க முயற்சி எடுக்கப்பட்டது எஸ்.எஸ்.மிராஜ்கர் வெளியே சென்றவர்களிடம் பேசினார். அவர்கள் வைத்த நிபந்தனைகளை ஏற்றார். கொடியில் எந்த அரசியல் சின்னமும் இடம்பெறாது. ஏஐடியுசி எனும் எழுத்துக்கள் மட்டுமே இருக்கும். பொதுக்குழுவில் அரசியல் தீர்மானம், சர்வதேச தொழிற்சங்க அமைப்புடன் இணைப்பு போன்றவை 75 சதம் வாக்கு பெற்றால் தான் நிறைவேறும் போன்றவற்றை ஏஐடியுசி அமைப்பு விதிகளில் இடம் பெறச் செய்தார்.

இன்றளவும் அவை இருக்கின்றது. விடுதலைக்குப் பின் ஏஐடியுசி பலம் பெற்றதாக வந்து விடக்கூடாது என்பதற்காக 1947 மே மாதத்திலேயே காங்கிரஸ் கட்சி ஐஎன்டியுசியை துவக்கியது.

இது குறித்து அன்றைய ஏஐடியுசி பொதுச்செயலாளர் என். எம்.ஜோசி பின்வருமாறு எழுதினார். “இந்துஸ்தான் மஸ்தூர் சேவா சங்கத்தினரால் 3.5.1947 அன்று புது டெல்லியில் கூட்டப்பட்ட காங்கிரஸ்காரர்கள் அடங்கிய கூட்டத்தில் தொழிலாளர்களுக்கென மத்திய ஸ்தாபனம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள்.

### சர்வ கட்சியினரையும் தன்னுள் கொண்ட ஸ்தாபனம்

1920 ல் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் ஏற்படுத்தப்பட்டது. இன்று அதன் அங்கத்தினர்கள் 8 லட்சம். இணைக்கப்பட்டுள்ள சங்கங்கள் 601. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் எந்த அரசியல் கட்சியுடனும் அதிகாரப்பூர்வமாக சம்பந்தப்படாமல் சுதந்திரமாகவும் ஜனநாயக முறையிலும் இயங்கி வரும் ஸ்தாபனமாகும்.

### எந்தக் கட்சி ஆதிக்கமுமில்லை.

அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸில் கம்யூனிஸ்ட்களின் ஆதிக்கம் வலுத்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது. அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸில் இன்றைய தினம் கம்யூனிஸ்ட்கள்தான் மெஜாரிட்டியாக இருக்கிறார்கள் என்பது உண்மை தான். ஆனால் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸில் தீர்மானிக்கப்படும் முடிவுகள் அனைத்தும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் தீர்மானங்கள் என்ற முறையிலேயே தீர்மானிக்கபடுகின்றன. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினால் தீர்மானிக்கப்படும் தீர்மானங்கள் அல்ல.

கம்யூனிஸ்ட்டுகள் மெஜாரிட்டியாக இருந்த போதிலும் தங்களுடைய மெஜாரிட்டி பலத்தை தங்கள் இஷ்டப்படி பிரயோகப்படுத்தவில்லை யென்பதையுமே ஏகமனதான முடிவுகள் தெளிவாகக் காட்டுகின்றன.

அது மட்டுமல்ல ஒரு அரசியல் கட்சி தன்னுடைய அரசியல் கொள்கைகளை கொண்டுவந்து ஸ்தாபனத்தில் ஆதிக்கம் செலுத்துவது மிகமிக கடினமான காரியமாகும். ஏனென்றால் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் சட்டங்கள் அத்தகைய முறையில் இருக்கின்றன. அதாவது “அரசியல் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்மானிக்க வேண்டியிருந்தாலும் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸால் வேலை நிறுத்தம் பிரகடனம் செய்ய வேண்டியிருந்தாலும் எந்த வெளி நாட்டு ஸ்தாபனங்களுடனாவது அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸை இணைக்க வேண்டி இருந்தாலும் நாலில் மூன்று பங்கு வு மெஜாரிட்டி இருந்தால்தான் தீர்மானிக்க இயலும்.

### நிர்வாகக் கமிட்டியிலும் கம்யூனிஸ்ட்டுகள் மைனாரிட்டிதான்

இவ்வாறாக அகில இந்திய தொழிர்சங்க காங்கிரஸை கைப்பற்ற வேண்டுமானால் நாளில் மூன்று பங்கு மெஜாரிட்டி தேவையாயிருக்கும். ஆனால் தற்சமயம் அவ்வளவு மெஜாரிட்டி கம்யூனிஸ்ட்டுகளுக்கு கிடையவே கிடையாது. ஜெனரல் கவுன்சிலிலும் காரியக்கமிட்டியிலும் கம்யூனிஸ்ட்டுகளின் பலம் மொத்த எண்ணிகையில் 55 சதவீதம்தான் இருக்கிறது. நிர்வாகஸ்தர்கள் 12 பேரில் 5 பேர்தான் கம்யூனிஸ்ட்டுகள்.

1943 ஆம் வருசத்துக்கு அப்புறம்தான் கம்யூனிஸ்ட்டுகள் மெஜாரிட்டியாக வந்து இருக்கிறார்கள். அதற்கு முன்னர் காங்கிரஸ் வாதிகள்தான் பொதுவாக மெஜாரிட்டியாக இருந்தார்கள். அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸின் சட்ட திட்டங்களும் வேலை முறைகளும் பரிபூரண ஜனநாயக முறையில் அமைந்திருக்கின்றன.

புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள ஸ்தாபனம் கட்சி சார்பு அற்றதென்றும் அரசியல் நோக்கமில்லாதது என்றும் உரிமை கொண்டாடப்படுகிறது. ஆனால் இந்துஸ்தான் மஸ்தூர் சேவக் சங்கத்தின் ஒவ்வொரு தீர்மானமும் குறிப்பிடுவதென்ன. இந்த புதிய ஸ்தாபனம் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதிகூடிய இந்திய தேசிய காங்கிரஸின் காரியக்கமிட்டி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்ட கொள்கைகளின்படி தொழிலாளர் இயக்கத்தை நடத்திச்செல்லும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தாபனம் காங்கிரஸின் ஒரு இலாகாவகத்தான் இருக்கும் என்று தெரிகிறது. எந்த வகையில் பார்த்தாலும் இந்த புதிய பிறவிக்கு கட்சிப்பற்று இல்லை என்றோ அல்லது அரசியல் பற்று இல்லை என்றோ கூறிவிட முடியாது.

காங்கிரஸ் கட்சி கட்சிக்கு தொழிற்சங்கம் என்று தொடங்கி வைத்த அந்த பிளவுபடுத்தல் என்பதை எல்லா அரசியல் கட்சிகளும் தனது ஆக்கிக் கொண்டன. 1964 இல் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பிளவு பட்ட போதும் தொடர்ந்து பல்வேறு கம்யூனிஸ்ட் கட்சிகளாக பிளவுபட்ட போதும் பிளவுகள் தொடர்ந்தன.

தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்ற உரிமைகள் அனைத்தையும் பறிப்பதையே அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு உலகமயமாக்கல் தனியார் மயமாக்கல் தாக்குதல்களை தொடுக்கிறது. இத்தகைய நிலையில் எல்லா சங்கங்களையும் ஓரணியில் திரட்டுவது என்ற மகத்தான பணியில் கம்யூனிஸ்டுகள் ஈடுபட்டனர்.

பாசிச தன்மை கொண்ட பாஜக உள்ளிட்ட தொழிலாளி வர்க்கத்திற்கு எதிரான அன்னிய வர்க்க அரசுகள் அனைத்தும் தங்களின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தடுக்கின்ற போராட்டங்களில் வெற்றிகளை ஈட்ட இந்த முயற்சி பேருதவி புரிந்திருக்கிறது.

1925 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் நாள் கான்பூரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கப் பட்டது. இந்தியாவின் தொழிலாளி வர்க்கக் கட்சியான இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தொடங்கியவுடனே நாட்டில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளில் தலையிட்ட முதல் நிகழ்வு ஏஐடியூசிக்கு வாழ்த்து தெரிவித்ததுதான்.

1926 ஜனவரி 9,10 தேதிகளில் ஏஐடியூசியின் 6 ஆவது மாநாடு சென்னையில் நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் தோழர் சிங்காரவேலர் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் “ நீண்ட காலத்திற்கு பயனுள்ள வகையில் ஏஐடியூசி செயல்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்த்துகிறது.

இந்தியத் தொழிலாளர்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் அது செயல்பட வேண்டும்.

இந்திய மக்களின் நலன்களுக்காக பணியாற்ற, ஏஐடியூசி எடுக்கக்கூடிய துணிச்சலான முயற்சிகளுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்குமென்று உறுதி கூறுகிறோம்.

இதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளிலும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஈடுபடும்.” என்று குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இன்று வரை உறுதியுடன் ஏஐடியூசியின் வளர்ச்சியிலும் தொழிலாளி வர்க்க ஒற்றுமைக்கான பயணத்திலும் துணை நிற்கிறது.

தொடர்புக்கு: 8524867888

# உலகமே பாராட்டிய உழைப்புக் கொடையை நடத்திக்காட்டியவர் எஸ்.ஜி.முருகையன்



அ.பாஸ்கர்

**ரஷ்ய நாட்டில் மக்களை கொண்டே சாலைகள் அமைப்பது, வேளாண்பண்ணைகளை உருவாக்குவது என பல்வேறு கட்டுமானங்களை உருவாக்கினார் மாமேதை லெனின். அப்படி ஒன்றுதான் இந்த உழைப்பு கொடை திட்டம். இந்த திட்டம் ரஷ்ய நாட்டில் பெரும்வெற்றியை கண்டது.**

இந்தத் திட்டம் இந்தியா முழுமைக்கும் செயல்படுத்த திட்டமிடப்பட்டது. அங்கு ஒன்று இங்கு ஒன்றுமாக செயல்படுத்தினார்கள்.

தமிழ்நாட்டில் ஒன்றுபட்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் மன்னார்குடி தாலுக்கா கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் மிகவும் முனைப்போடும், சிறப்பாகவும் செயல்படுத்தப்பட்டது. இந்தியா மட்டுமல்லாமல் உலக நாடுகளே திரும்பிப் பார்க்கின்ற அளவுக்கு இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்தியாவுக்கு வழிகாட்டுகிறது கோட்டூர் என்று தினசரி நாளிதழ்கள் புகழ்ந்து தலையங்கம் எழுதின. ஆம் அப்படி ஒரு நிகழ்வை நடத்திக் காட்ட வழிகாட்டிய இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி. அதை செயல்படுத்திய எளிய மக்களின் தலைவராக இருந்த தோழர் எஸ். ஜி .முருகையன் அவர்கள்.

1955 நொச்சியூர் ஊராட்சி மன்ற தலைவர் பதவிக்கு பொதுத் தொகுதியில் கம்யூனிஸ்ட், காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்ட சமூக வேட்பாளர்களை எதிர்த்து பட்டியலின வேட்பாளராக நின்று வெற்றி பெற்றார். மக்களின் நன்மதிப்பை பெற்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தார். மீண்டும் போட்டியின்றி தலைவராக தேர்ந்தெடுத்தார்கள் ஊராட்சி மக்கள். ஊராட்சி மன்ற தலைவர்கள் எல்லாம் சேர்ந்து ஊராட்சி, ஒன்றிய பெருந்தலைவரை தேர்வு செய்ய வேண்டும், 47 ஊராட்சி தலைவர்களை கொண்ட ஒன்றியம் கோட்டூர். 1961 ஆம் ஆண்டு நடைபெற்ற பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் இடஒதுக்கீடு இல்லாத காலத்தில் பொதுத் தொகுதியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வேட்பாளராக பட்டியல் வகுப்பைச் சார்ந்த எஸ்.ஜி. முருகையன் அவர்களை தேர்வு செய்கின்றனர். தஞ்சை மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சி எடுத்த முடிவை, கட்சிக்குள் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி தலைவர்களின் ஒத்த கருத்தோடு தேர்தல் களத்தில் நிற்கின்றார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த ஒருவர் போட்டியிட்டார். கடும் எதிர்ப்புக்கு மத்தியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பட்டியல் வகுப்பைச் சார்ந்த எஸ்.ஜி. முருகையன் 28 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். இன்று உள்ளாட்சி அமைப்புகளில் இட ஒதுக்கிடு அறிவித்தும் தமிழ்நாட்டில் பட்டியல் இனத்தை சேர்ந்த சில ஊராட்சி தலைவர்கள் நாற்காலியில் அமர ஆதிக்க சாதியினரால் அனுமதி மறுக்கப்படுகிறது நாற்காலியில் அமர்வதற்கு நீதிமன்றத்தை நாடி காத்து இருக்கும் நிலை இன்றும் தொடர்கிறது.

இந்திய வரலாற்றில் இட ஒதுக்கீடு இல்லாத காலத்தில் பொதுத் தொகுதியில் நின்று வெற்றி பெற்ற பட்டியல் இன முதல் ஒன்றிய பெருந்தலைவர் என்ற பெருமையைப் பெற்றுத்தந்த வரலாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு உண்டு. அவர்தான் எஸ்.ஜி. முருகையன்.

மத்திய அரசு வாழ்த்தி பாராட்டு கடிதம் அனுப்பியது எஸ்.ஜி.முருகையனுக்கு என்பது குறிப்பிடத்தக்கதாகும். மன்னார்குடியில் இருந்து முத்துப்பேட்டை செல்வதற்கு சரியான சாலை வசதி இல்லை. எனவே மன்னார்குடியில் இருந்து முத்துப்பேட்டை வரை செல்லும் பாமணி ஆற்றின் கீழ் கரையை உயர்த்தி அகலப்படுத்தி சாலையாக மாற்றலாம் என்று யோசனையை முன் வைத்தார் எஸ்.ஜி.முருகையன்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் வேத நாராயணன் அவர்கள் நடத்திய வளர்ச்சி மன்ற கூட்டத்தில் கோரிக்கையாகவும், இந்த சாலையின் அவசியத்தை பற்றியும், 47 கிராம மக்களும் நகரத்தோடு தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது. பள்ளி மாணவ மாணவிகள் நகரங்களுக்கு சென்று படிக்க முடியாத சூழ்நிலையும், அவசர உதவிக்கு மருத்துவமனை செல்வதற்கு கூட முடியாத சூழ்நிலை இருப்பதையும் விளக்கமாக எடுத்து கூறினார் எஸ்.ஜி.முருகையன்.

இதைக் கேட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் “நீங்கள் சொல்வதெல்லாம் சரிதான் இந்த திட்டம் ஏற்கனவே சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களும், மத்திய ரயில்வே கேபினட் அமைச்சர் கும்மட்டிதிடல் சந்தானம் ஐயங்கார் அவர்களும் முன்வைத்த திட்டம்தான். அவர்களாலேயே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியவில்லை. பழைய சாலைகளை போடுவதற்கே போதிய நிதி ஆதாரம் இல்லாத இந்த சூழ்நிலையில், புதிய சாலை பற்றி விவாதிப்பது என்பது முடியாத காரியம் என்று கைவிரித்து விடுகிறார்”

மாவட்ட ஆட்சித் தலைவரின் பேச்சை கேட்ட எஸ்.ஜி.முருகையன் எப்படியும் சாலை அமைக்க வேண்டும் என உறுதியாக முடிவெடுக்கிறார். இதுகுறித்து கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட அமைப்பில் கூறுகிறார். விவாதிக்கப்படுகிறது ரஷ்யாவில் உழைப்பு கொடை திட்டம் செயல்படுத்திய விதம் குறித்தும் விவாதித்து, இந்த திட்டத்தை இந்தியாவில் நடைமுறைபடுத்த நேரு எடுக்கும் முயற்சிகள் பற்றி விவாதிக்கப்பட்டு, இந்த சிரமதான பணியை கோட்டூர் ஒன்றியத்தில் செயல்படுத்த எஸ்.ஜி.முருகையன் அவர்களுக்கு பொறுப்பளிக்கப்படுகிறது.

ஊராட்சி ஒன்றிய குழு கூட்டத்தில் தீர்மானம் நிறை வேற்றப்படுகிறது. கோட்டூர் கட்சி அமைப்பு கூடுகிறது. மக்களைதிரட்ட முடிவுஎடுத்துகிராமங்கள் தோறும் அறிவிக்கப்படுகிறது. தோழர் எஸ்.ஜி. முருகையனும், கட்சியின் தலைவர்களும் இரவு பகல் என பாராமல் நடந்தும் சைக்கிளிலும் சென்று மக்களை திரட்டுகிறார்கள்.

சாலை போடும் தேதியை ஊர் முழுவதும் தண்டோரா மூலம் அறிவிக்கப்படுகிறது. வீட்டுக்கு ஒருவர் கூடை (வெட்டுக்கூடை) மண்வெட்டி அரிவாளுடன் பாமணி ஆற்றின் கீழ்கரைக்கு வர வேண்டும் என்ற அறிவிப்பு.

மன்னார்குடியில் இருந்து முத்துப்பேட்டை வரை பாமணியாற்று கீழ்கரையில் காலை 6 மணிக்கே மக்கள் மண்வெட்டி, கூடை, கடப்பாரையோடு கூடி நின்றனர். மறுமுனையில் மக்கள் சாரை சாரையாக வந்து கொண்டு இருந்தனர். இந்தப் பகுதியில் வாழ்கின்ற ஒட்டுமொத்த மக்களின் கோரிக்கையாக இது மாறியது. மன்னார்குடி கீழ் பாலத்திலிருந்து சிரமதான பணி தொடங்குவதற்கு மக்கள் தயாரானார்கள்.





மாவட்ட ஆட்சித் தலைவர் வேத. நாராயணன் வந்து பார்க்கிறார். வியந்து போகிறார். ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஜி.முருகையனை ஆரத்தழுவி கண்ணீர் வடிக்கிறார். உங்களுடைய திறமையை நான் குறைவாக எண்ணி விட்டேன் என்கிறார்.



அதெல்லாம் ஒன்றுமில்லை அய்யா என்று சமாதானம் செய்கிறார் எஸ். ஜி. முருகையன். மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் கூடை மண்ணை வெட்டி எஸ். ஜி. முருகையன் தலைமேல் வைத்து சிரமதான பணியை தொடங்கி வைக்கிறார்.

மக்களின் உழைப்பை தானமாக பெற்று இந்த சாலை உருவாகி கொண்டு இருக்கிற காட்சியை படமாக எடுத்து, இந்தியா முழுமைக்கும் உள்ள திரையரங்குகளில் காட்சிப்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் ஏற்பாடு செய்கிறார்.

தஞ்சையில் பெரிய கோயிலை கட்டுவதற்காக மாமன்னன் ராஜராஜ சோழன் பெரிய அளவில் மக்களை திரட்டினார் என்பது வரலாற்றுச் செய்தியாகும். அதற்குப் பிறகு மற்றுமொரு வரலாற்று பதிவு எஸ்.ஜி.முருகையன் தலைமையில் மன்னார்குடியிலிருந்து முத்துப்பேட்டைக்கு அதிக அளவில் மக்களை திரட்டி ஒரே நாளில் உழைப்பு கொடையின் (சிரமதான) மூலம் சாலை அமைத்தது என்பது. வியக்கத்தக்கதொரு புதிய வரலாற்றை படைக்க தோழர் எஸ்.ஜி.முருகையனுக்கு வழிகாட்டிய இயக்கம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியாகும்.

சிறப்பான சிரமதான பணியை செய்த ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஜி.முருகையன் அவர்களை சோவியத் யூனியன் அரசு 1963 ல் தன்னாட்டிற்கு இரண்டு வார காலம் வருமாறு அழைப்பு விடுத்தது. சோவியத் யூனியனுக்கு புறப்படுகின்ற சமயம் சோவியத் புரட்சி நாளும் வந்தது.

அந்த விருந்தில் இந்திய பிரதமர் ஜவஹர்லால் நேருவை சந்தித்து வாழ்த்தும் பாராட்டும் பெற்றார் எஸ்.ஜி.முருகையன்.

சோவியத் யூனியனிலிருந்து வெளியாகும் தினசரி நாளிதழான “ப்ராவ்தா” இதழ் இந்த வரலாற்றுச் சாதனையை தலையங்கமாக எழுதியிருந்தது. அதனை மொழி பெயர்த்து தினதந்தி நாளிதழும் “இந்தியாவுக்கு வழிகாட்டுகிறது கோட்டூர்” என்று தலைப்பில் தலையங்கம் எழுதியது.

தமிழ்நாட்டில் கோட்டூர் ஒன்றியத்திலிருந்து சிரமதான பணியை பற்றிய செய்திகள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை மத்திய அரசு கவனித்தது. நேரில் கண்டறிய முகர்ஜி என்ற உயர்மட்ட அலுவலரை அனுப்பி வைத்தது. அவரும் கோட்டூர் ஒன்றியத்தில் சிரமதான பணி நடைபெற்று இருக்கும் அனைத்து இடங்களுக்கும் சென்று நுட்பமாக கவனித்தார். புதுடில்லி சென்று கோட்டூரில் நடைபெற்றிருக்கும் பணிகளைப் பற்றி விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்தார்.

இந்திய பாராளுமன்றம் சிரமதான சேவை வாயிலாக கோட்டூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் ஆற்றிய சாதனையை நாடாளுமன்றத்தில் பாராட்டி “சாம்பியன் ஆஃப் சிரமதான்” என்ற விருதை எஸ். ஜி.முருகையனுக்கு மத்திய அரசு வழங்கியது.

ஒரு மாதத்தில் மண்சாலை கப்பி சாலையாக மாறிப்போனது. அந்த சாலையில் பேருந்து வெள்ளோட்டம் வருகிறது பேருந்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் வேத.நாராயணன், ஒன்றிய பெருந்தலைவர் எஸ்.ஜி.முருகையன் மற்றும் 47 ஊராட்சி மன்ற தலைவர்களும் அமர்ந்து இருக்க ஓட்டுனர் இருக்கையில் எஸ்.ஆர்.வி.எஸ் பேருந்து உரிமையாளர் ஆரோக்கியசாமி பேருந்தை இயக்கினார்.

மன்னார்குடி முத்துப்பேட்டை செல்லும் பேருந்து வழித்தடம் தொடங்கி வைக்கப்படுகிறது. வழி நெடுகிலும் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு மகிழ்ச்சி பொங்க பேருந்தை வரவேற்றனர். மனதார வாழ்த்தினர்.

எஸ்.ஜி.முருகையன் பொறுப்பில் இருந்த காலத்தில் மக்களை திரட்டி சிரமதானத்தின் மூலம் போட்ட சாலைகள் ஏராளம்.....

வீராக்கி விக்கிரபாண்டியம் சாலை, ஆதிச்சபுரம் வேதபுரம் சாலை, நாணலூர் முத்துப்பேட்டை மாங்குடி இணைப்பு சாலை, கோட்டூர் சேந்தமங்கலம் சாலை, வாட்டார் பைங்காட்டூர் சாலை, எளவனூர் பெருகவாழ்ந்தான் சாலை, நொச்சியூர் கிளார்வெளி சாலை என்று பட்டியல் நீளும்

எஸ்.ஜி.முருகையன் அவர்கள் செய்த சேவையும் மக்கள் பணியும் காலத்தால் அழியாத வரலாறாய் என்றும் வாழ்ந்து கொண்டே இருக்கும்.

தொடர்புக்கு: 9488488339



வ.மணிமாறன்

## பேரிடர் துயரத்திலும் மலிவான அரசியல்

# ஒன்றிய அமைச்சர் நிர்மலாவ
# ஒற்றை அதிகாரத்தின் பாசி

**மிக்ஜாம் புயல், கனமழையால் சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் திருவள்ளூர் மாவட்டங்கள் வெள்ளக் காடாயின. 36 மணி நேரம் இடைவிடாமல் மழை கொட்டித் தீர்த்தது. 43 சென்டிமீட்டர் அடர்த்தியுடன் பெய்த இந்த மழையால் மாநகரின் பல பகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.**

சென்னைக்கு மிக அருகே வங்கக் கடலில் 18 மணி நேரமாக மிக்ஜாம் புயல் நிலைகொண்டிருந்தது. புயல் நகர்ந்து செல்லும் வேகமும் மிக குறைவாக இருந்தது. இதன் காரணமாக சென்னையில் அதி கனமழை பெய்தது. நீர்நிலைகளுக்கு அருகில் இருக்கும் பகுதிகள் மற்றும் தாழ்வான பகுதிகளில், வீடுகளுக்குள் மழை நீர் புகுந்து 4 அடி வரை தேங்கியது.

இங்கு நிவாரணப் பணிகள் நடந்து கொண்டிருக்கும் போதே, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய மாவட்டங்களில் 103 செ.மீ., அளவுக்கு மழை வெளுத்து வாங்கியது. 150 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு டிசம்பர் 17, 18 தேதிகளில் மழை கொட்டி தீர்த்தது. பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. மக்கள் கடும் துயரத்துக்கு ஆளாயினர். தமிழ்நாடு அரசும் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களும், அதிகாரிகளும் மீட்புப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டனர்.

இந்தச் சூழலில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசினார். அப்போது, தென் மாவட்டங்களில் மழை வெள்ள மீட்புப் பணிகளை தமிழ்நாடு அரசு சரியாக செய்யவில்லை என குற்றம் சாட்டினார்.

“டிசம்பர் 12ஆம் தேதியே இந்திய வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கை வந்தபோதும் தமிழ்நாடு அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

2023ஆம் ஆண்டுக்கான பேரிடர் நிதியான 900 கோடி ரூபாய் இரண்டு தவணைகளாக வழங்கப்பட்டு விட்டது. ஏற்கெனவே தமிழ்நாடு அரசிடம் 813.15 கோடி ரூபாய் பேரிடர் நிதி இருக்கிறது.

மாநில அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோருக்கு முன்பாக தென் மாவட்டங்களுக்குச் சென்று மக்களுக்கு உதவியது தேசிய பேரிடர் மீட்புக்குழுவே” இவை அனைத்தும் நிர்மலா சீதாராமன் பேச்சுக்கள்.

வரலாறு காணாத, வானிலை ஆய்வுகளின் கணிப்புகளுக்கு அப்பாற்பட்ட கடும் மழையால் தலைநகர் சென்னையும், தென் மாவட்டங்களும் புரட்டி போடப்பட்டுள்ளன. இயற்கைப் பெருஞ்சீற்றம் மக்களின் வாழ்வை சீர்குலைத்துள்ளது. இதைப் பற்றிய எந்த கவலையும் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமனின் பேச்சில் வெளிப்படவில்லை. பெருமழை வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பல லட்சம் மக்கள் மீது பரிவோ கருணையோ அவருடைய பேச்சில் இல்லை. மாறாக அதிகார மமதையும் மலிவான அரசியலையுமே அவருடைய பேச்சும் உடல் மொழியும் வெளிப்படுத்துகிறது.

வழக்கமான பருவமழை, வெள்ளம், புயல் என்பதை விட அதிகப்படியான கடும் பேரிடரின் பாதிப்புகளை எதிர்கொள்ள, மீட்புப் பணிகளைச் செய்திட ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு அரசு கூடுதல் நிவாரண நிதி கேட்டது. உடனடியாக 2,000 கோடி ரூபாயை தேசிய பேரிடர் நிதியில் இருந்து இடைக்கால நிவாரணமாக வழங்குமாறு கோரியது.

இந்தக் கோரிக்கை தேசிய பேரிடர் நிதியின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டதோ விதிமுறைகளை மீறியதோ அல்ல. தேசிய பேரிடர் நிவாரண நிதி உருவாக்கப்பட்டதன் நோக்கமே, வழக்கத்தை விட கடுமையான இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது மாநிலங்கள் சமாளிக்க கூடுதல் நிதியை கொடுப்பதற்காகத் தான்.

பிறகு எதற்காக ஒன்றிய நிதியமைச்சர் கடும் சொற்களைப் பேசுகிறார்? அமைச்சரின் மரியாதைக்குரிய அப்பா வீட்டு சொத்தை கேட்கவில்லை என உதயநிதி ஸ்டாலின் சொல்ல நேர்ந்தது ஏன்? நிர்மலா சீதாராமனிடம் கையேந்துவது போன்று தினமலர் நாளிதழ் கேலிச்சித்திரம் வரைந்தது ஏன்?

ஒன்றிய அரசிடம் குவிந்து கிடக்கும் அதிகாரங்கள், ஒற்றைப் பேரரசாக கருதி ஆணவம் கொள்ள செய்கிறது. கூட்டாட்சி தத்துவத்தையே குழிதோண்டிப் புதைக்கும் கொள்கைகளைக் கொண்ட பா.ஜ.க, இன்னும் ஒரு படி மேலே செல்கிறது. இதன் ஒட்டுமொத்த வெளிப்பாடு தான் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனின் இந்தப் பேச்சு.

சென்னை மற்றும் அதனையொட்டிய மாவட்டங்களில் புயல், வெள்ள பேரிடர் பாதிப்புகளை ஒன்றிய அரசின் குழு பார்வை யிட்டது. தமிழ்நாடு அரசு மேற்கொண்ட மீட்புப் பணிகளை பாராட்டியது. ஒன்றிய அரசுக்கு அறிக்கை அளிப்பதாக கூறிச் சென்றது.



தமிழ்நாட்டில் எதிர்ப்புகள் எழுந்த பிறகு ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை பார்வையிட்டார். தென் மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பேரிடர் துயரங்களை அதிகாரிகள் அவரிடம் எடுத்துரைத்தனர்.

தமிழ்நாட்டிற்கு வந்த பிரதமர் மோடி திருச்சியில் விமான நிலையத்தின் புதிய முனையத்தை திறந்து வைத்தார். புதிய திட்டங்களை தொடங்கி வைத்தார். “வெள்ள பாதிப்புகளிலிருந்து மீள தமிழக மக்களுக்கு துணை நிற்போம்” என்று மேடையில் முழங்கினார். அதன் பிறகும் எதுவும் நடக்கவில்லை. எந்த நிதியும் தமிழ்நாட்டுக்கு வரவில்லை.

இதற்கு என்ன காரணம்?

அரசின் எல்லா நிதிகளும் வரி வசூல் மூலமாகவே வருகிறது. அதாவது மக்களுடைய வரிப்பணமே அரசின் எல்லா நிதிகளுக்கும் மூலாதாரம்.

ஒன்றிய அரசு மட்டுமே வருமான வரி வசூலிக்கிறது. மாநிலங்களிடம் இருந்த விற்பனை வரி விதிப்பும் ஜிஎஸ்டி வடிவில் ஒன்றிய அரசுக்கு சென்று விட்டது. பின்னர் ஒன்றிய அரசு அதனை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கிறது. மாநில அரசுகள் தனியாக வரி விதிக்கும் வகை யினங்கள் மிகச் சில மட்டுமே உள்ளன. இதனால் மாநில அரசுகள் ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வையே பெரும்பகுதி சார்ந்திருக்கின்றன.

ஒன்றிய அரசு ஒரு சில பொருட்கள் மீது செஸ் என்ற கூடுதல் வரி வசூலிப்பதன் மூலம் தேசிய பேரிடர் நிதி (National Disaster Response Fund) உருவாக்கப்படுகிறது. இதற்கு தனி நபர்களும் நன்கொடை தருகின்றனர்.

இந்த தேசிய பேரிடர் நிதியின் ஒரு பகுதி மாநில பேரிடர் நிதிக்கு (State Disaster Response Fund) கொடுக்கப்படுகிறது. அதாவது, ஒன்றிய அரசு 75%, மாநில அரசு 25% பங்களித்து மாநில பேரிடர் நிதி உருவாக்கப்படுகிறது.

பெருமழையும் மிகக் கடுமையான வெள்ளமும் ஏற்பட்டு தமிழ்நாடு பெரும் துயரத்தை சந்தித்துள்ளது. இதிலிருந்து மீண்டு வர மாநில பேரிடர் நிதியான 1,200 கோடி ரூபாய் போதாது. நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏறத்தாழ 12,000 கோடி ரூபாய் தேவைப்படும் என தமிழ்நாடு அரசு கூறுகிறது. அதனை கொடுக்குமாறு ஒன்றிய அரசிடம் கோருகிறது.

ஒரு மாநிலத்தில் கடுமையான பேரிடர் நிகழும் போது, அந்த மாநிலத்தின் பேரிடர் நிதியிலிருந்து மட்டும் நிவாரணம் அளித்திட முடியாது. அப்போது, தேசிய பேரிடர் நிதியில் இருந்து கூடுதல் ஒதுக்கீட்டை மாநிலங்கள்





# ...யின் பேச்சு ...சிச குரல்

பெற்றுக் கொள்ளலாம் என்பதே சட்டம், விதிமுறை. இதற்கு ஒன்றிய அரசின் பதில் என்ன?

அதிகாரங்களையும் நிதி வருவாய் வளங்களையும் ஒன்றிய அரசு மத்தியில் குவித்துக் கொண்டே போகிறது. கடந்த 9 ஆண்டுகளில் மோடி அரசு எடுத்துள்ள முடிவுகள் அனைத்தும் ஒன்றியத்தில் மேலும் மேலும் அதிகாரங்களை குவிப்பதாகவே உள்ளன.

சென்னை வானிலை ஆய்வு மையம் சரியான முன்அறிவிப்புகளை கொடுக்கவில்லை என்ற சர்ச்சை, மீட்புப் பணிகளுக்கு தேசியப்படைகளை அனுப்பினோம்; ஹெலிகாப்டர் அனுப்பினோம் என்பது, ஆளுநர் தனியாக ஆலோசனை நடத்துவதுஞ் இவை எல்லாம் அதிகார குவிப்பின் வெளிப்பாடுகள்.

அதிகாரக் குவிப்பால் வளர்ச்சிப் பணிகளுக்கு மட்டுமல்ல, பேரிடர்களை சந்திக்கும் போதும் ஒன்றிய அரசை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டியநிலை மாநிலங்களுக்கு உருவாகிறது. இதனால் பெருமழை, பேரிடரில் பரிதவித்து நிற்கும் மக்களுக்கு செய்ய வேண்டிய கடமைகளை கூட ஒன்றிய மோடி அரசு கொடையாக மாற்றி விடுகிறது. இதனைத் தான் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா எதிரொலிக்கிறார். இதனைத் தான் தினமலரின் கேலிச்சித்திரமும் வெளிப்படுத்துகிறது.

மக்களுக்கான நிவாரணத்தை அளிக்கக்கூடிய கட்டமைப்பு பலம் மாநில அரசுகளிடமே உள்ளது. ஒன்றிய அரசால் அதனைச் செய்ய முடியாது. இந்தப் பெருமழை, பேரிடர் பாதிப்பை கூட மாவட்டம் மாவட்டமாக பிரித்துப் பார்க்க வேண்டியுள்ளது. அதற்கேற்ப மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றையே முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் அமைச்சர்களும் பிரதிபலிக்கின்றனர். இதற்காக அவர்கள் கொடுக்கும் குரல், அதிகாரக் குவிப்புக்கு எதிரான கூட்டாட்சியின் குரல்.

மாநிலங்களின் இருப்பை நிராகரித்து, ஒற்றை தேசமாக, பாரதமாக உருவகிக்கும் ஆர்எஸ்எஸ் பாசிச அரசியலுக்கு எதிரான தமிழ்நாட்டின் குரல். மக்களாட்சியின் மாண்பை, கூட்டாட்சி குடியரசை முன்னிலைப்படுத்தும் ஜனநாயகத்தின் குரல். இதனை அவதூறுகளாலும் மலிவான அரசியல் மூலமும் மடைமாற்றி விடலாம் என பாஜக நினைக்கிறது. அது சாத்தியமில்லை என்பதை தமிழ்நாட்டு மக்கள் உணர்த்துவார்கள்.

தொடர்புக்கு: 9500001224



# தீர்ப்புகள் திருத்தப்பட வேண்டும்!

**1947 ஆகஸ்ட் 15 ல் இந்தியா சுதந்திரமடைந்தது. சுதந்திரம், ஜனநாயகம் நமக்கு கிடைத்துள்ளது. 1950 ஜனவரி 26 குடியரசு சட்டம் நிறைவேற்றப்பட்டது, சுதந்திரம், ஜனநாயகம், பாதுகாக்கவும், ஒழுங்கமைத்து, மேலும் வளர்க்கவும் அரசியல் சட்டம் உருவானது.**



டி.ராமசாமி

குடியுரிமை ஜனநாயகத்தில் சட்டமன்றம் –நாடாளுமன்றம், நிர்வாகம், நீதிமன்றம், ஊடகங்கள் இவைகள் நான்கு தூண்களாக கருதப்படுகிறது.

இவை நான்கிலும் நீதிமன்றத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை உள்ளது.

அரசமைப்புச் சட்டத்தின்படி ஆட்சி நடைபெறுவதை நீதிமன்றம் கண்காணிக்கிறது. அச்சட்டத்தின்படி உரிமைகளை மக்களுக்கு உறுதிப்படுத்துகிறது அதே சமயத்தில் சுதந்திரமும், ஜனநாயகமும், அனைத்து மக்களுக்கும் உறுதிப்படுத்தும் உயர்ந்த நோக்கத்தையும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இத்தகைய நிலைமைகளை ஒட்டித்தான் தீர்ப்புகள் வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். விருப்பமும் எதிர்ப்பார்ப்புகளும் தவறல்ல. வாழ்நிலை அடிப்படையை அனைவருக்கும் உறுதி செய்தல் என்ற உணர்வில் இருந்து தான் இத்தகைய எதிர்பார்ப்புகள் ஏற்படுகிறது.

சமீபத்தில் சில தீர்ப்புகள் வெளிவந்துள்ளது. இந்தியாவில் உள்ள 30 மாநிலங்கள் ஒன்று ஜம்மு – காஷ்மீர் மாநிலம். சுதந்திரப் போராட்டம் நடைபெற்ற போது, வெள்ளைக்காரர்களால் இந்திய ஒற்றுமையை சீர்குலைக்கும் நோக்கத்தில் இருமதங்களையும் சார்ந்த வகுப்புவாதிகள் இந்துமுஸ்லீம் கலவரத்தை உருவாக்கினார்கள். அதன் உச்சமாக இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது காஷ்மீர் முஸ்லீம் மக்கள், நாங்கள் பாகிஸ்தானோடு சேரமாட்டோம் இந்தியாவோடு தான் இருப்போம் என்று கூறினார்கள். இந்தியர்களாக இருந்தார்கள்.

இப்படி பல பிரத்யோக நிலைகளை கணக்கில் கொண்டு, அன்றைய பிரதமர் ஜவகர்லால் நேரு அமைச்சரவையில் மூலம் அரசியல் சட்டம் 370 மூலம் சில விசேச சலுகை வழங்கப்பட்டது. இருந்தாலும் திட்டமிட்டு சில திவிரவாத செயல்கள் நடந்து வந்தது. அது ஜனநாயக நடவடிக்கைகள் மூலம் அப்போதைக்கு அப்போது தீர்க்கப்பட்டு வந்தது.

தற்போதைய பாஜக அரசு தனது குறுகிய மதவெறி அரசியல் நோக்கத்திற்காக, தனக்கு இருக்கும் பெரும்பான்மையை பயன்படுத்தி ஜம்முகாஷ்மீர் மாநிலத்தை, ஜம்மு, காஷ்மீர், லாடாக் என மூன்றாக பிரித்து யூனியன் பிரதேசமாக மாற்றி விட்டார்கள். 370 வது பிரிவையும் ரத்து செய்து விட்டார்கள். இந்த நடவடிக்கை அந்த மாநில மக்களையும், ஜனநாயக சக்திகளையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

மற்ற மாநிலங்கள் தனக்கும் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு விடுமோ! என்ற அச்ச உணர்வு ஏற்பட்டது. ஒரே நாடு என்று! மாநிலங்கள் அழிக்கப்படுமோ?



என்ற கவலை இந்திய மக்களுக்கு ஏற்பட்டது பாஜக வின் இந்த செயல் ஜனநாயகத்திற்கு சவலாக அமைந்தது.

எனவே உச்சநீதிமன்றத்திடம் நியாயம் கேட்டு சென்றார்கள் உச்ச நீதிமன்றம் ஜனநாயக உணர்வுகளை மதிக்காமல் அரசின் நடவடிக்கையை ஆமோதித்து விட்டது.

பூசாரிகளிடம் சென்றால் வரம் கிடைக்காது என்று தான் கடவுளிடம் வரம் கேட்டார்கள்! நியாயம் கேட்டார்கள் நியாயம் கிடைக்கவில்லை. நெற்றிக்கண் திறந்தாலும் குற்றமே என்று சொல்வதில் நீதிமன்றம் தவறிவிட்டது.

ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவை உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு அத்தியாவாசியம். இதை கொடுக்க வேண்டியது அரசின் கடமை. அரசின் கடமையை உணர்த்துவதற்கும், இதை பெறுவதற்கும் மக்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். வீடு இல்லாதவர்கள் இடைக்காலமாக (சிறு, சிறு குடிசைகள் அமைத்து) அரசு புறம்போக்கு நிலங்கள், முன்பு நீர்பிடிப்பாக இருந்து தற்போது, காலமாற்றத்தில் தண்ணீர் தேங்காத மேட்டு பகுதிகள், சாலை ஒரங்கள், ஆகிய பகுதிகளில் குடிசைகள் அமைத்து காலத்தை கழித்து வருகிறார்கள் இந்த குடிசைகளை அகற்ற வேண்டும் என்று மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படுகிறது

அரசு நிலத்தை திருடும் திருடர்கள் என்று தீர்ப்பு வருகிறது! காலையில் இருந்து மாலை வரை உழைத்து உழைத்த களைப்பை தீர்க்க இடமில்லாமல் கிடைத்த இடத்தில் வாழ்பவன் திருடனா?

மாடமாளிகைகள் கூட கோபுரங்கள் அதனை நீதிமன்ற கட்டிடங்கள் உருவாக்குபவர்கள் சுவரே இல்லாத குடிசை அமைத்து காலம் கழிப்பவன் திருடர்களா?

கேதன் தேசாய் போன்றவர்கள் மருத்துதுறையில் உயர் அதிகாரிகளாக இருந்து மக்கள் பணத்தை கொள்ளையடித்து 1500 கிலோ தங்கம், படுக்கையில் 1000 கோடி பணம் வைத்திருந்தானே, அப்படிபட்டவன் திருடனா? ஏழைகள் திருடர்களா? கிரிக்கெட் ஊழல் லலித்மோடி, வங்கியில் பல்லாயிரம் கோடி பணத்தை கடன் பெற்று மோசடி செய்த நீரவ் மோடி போன்றவர்கள் யோக்கியர்களா? ஏழைகள் திருடர்களா?

சட்டம் அனைவருக்கும் சமம் என்று சொல்லப்படுகிறது ஆனால் ஏழைகளுக்கு ஒரு நீதி! வசதி படைத்தவர்களுக்கு ஒரு நீதி! என நீதி வழங்குவது நீதித்துறையை கேள்வி குறியாக்கியுள்ளது.

நிலத்தில் மக்கள் அனைவரும் வாழ்வதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். அதுவரை இப்படிப்பட்ட செயல்கள் தொடரத்தான் செய்யும். அவர்கள் இதை விரும்பி செய்வதில்லை மற்றவர்களை போல் நல்ல வீடுகளில் வசிக்கத்தான் விரும்புகிறார்கள். அது கிடைத்த போது வேறு வழியில்லை என்பதால் தான் இத்தகைய நிலை தொடர்கிறது.

எனவே மக்கள் விருப்பம் ஜனநாயகம், சட்டம் சார்ந்து மக்கள் உணர்வுகளையும் கணக்கில் எடுத்து நீதி வழங்க வேண்டும் பொதுவான பிரச்சனைகளில் மக்கள் எதிர்பார்க்கின்ற தீர்ப்பு தான் வரவேண்டும் தவறும் பட்சத்தில் தீர்ப்புகள் விமர்சனத்திற்கு உள்ளாகிறது திருத்தப்பட வேண்டிய சூழல் உருவாகும்! நெற்றிக்கண் திறந்தாலும் குற்றம் குற்றமே!

தொடர்புக்கு: 9443363828

# ஸ்மிருதி இராணியின் கருத்துக்கு மாதர் சம்மேளனம் கண்டனம்

ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் கால விடுப்பு அளிக்க மறுக்கும் ஸ்மிருதி இராணியின் கருத்துக்கு இந்திய மாதர் சம்மேளன மாநிலச் செயலாளர் மு.கண்ணகி கண்டனம்.

ஊதியத்துடன் கூடிய மாதவிடாய் காலவிடுப்பு மாணவர்கள் தொழிலாளர்களுக்கு என அனைத்து தரப்பினருக்கும் அத்தியாவசியமானது. உளவியல் ரீதியாகவும், உடல் ரீதியாகவும் மிக சோர்வையும் பலவீனத்தையும் ஏற்படுத்தக்கூடிய இயற்கை உயிரியல் நிகழ்வுஎன்பது உண்மைதான்.

ஆனால் பெண்களின் ஹார்மோன்களின் சுரப்பு, உணவு முறைகள், இரத்த அனுக்களின் எண்ணிக்கை, உடல்வாகு, பரம்ரைகாரணிகள் போன்றவற்றில் சீரற்ற மாதவிடாய் அதிக உதிரபோக்கு, தாங்கி கொள்ள முடியாத வலியுணர்வு, டிஹைரேசன், மயக்கம், வாந்தி போன்ற உடல் உபாதைகளும் ஏற்படும். இத்தகைய உடலியல் சிரமங்களை தாங்கி பெண்கள் வேலை செய்ய வேண்டும் என்பது பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

இந்திய மாதர் தேசிய சம்மேளனம் 3 முதல் 5 நாட்கள் மாதவிடாய் விடுமுறையளித்து சட்டம் இயற்ற ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது என தனது இறிக்கையில் கூறியுள்ளார்.

# போக்குவரத்து தொழிலாளர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்க!

## இரா.முத்தரசன் வலியுறுத்தல்

போக்குவரத்து தொழிலாளர்களின் பிரச்சனைக்கு தீர்வு காண்க என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது.

நாட்டின் பல்வேறு மாநிலங்களை விட சிறப்பான போக்குவரத்து சேவையை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் வழங்கி வருகின்றன. 23,000 பேருந்துகளையும், ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பணியாளர்களையும் கொண்ட பெரிய கட்டமைப்பாக இவை உள்ளன.

சமூக பொறுப்புணர்வோடு மாணவர்கள், பெண்களுக்கு கட்டணம் இல்லாத பயணம் வழங்கப்படுகிறது. கிராமப்புறங்கள், மலை வழித்தடங்களிலும் கூட பேருந்துகள் லாப நோக்கின்றி இயக்கப்படுகின்றன. இந்த நிகரற்ற சேவையில், போக்குவரத்து கழக தொழிலாளர்களுக்கும் பெரும் பங்கு உண்டு.

கடந்த பல ஆண்டுகளாக, பொருளாதார சிக்கலுக்கு போக்குவரத்துக் கழகங்கள் ஆட்பட்டுள்ளன. ஓய்வு பெற்ற, பணிவிலகிய, மரணமடைந்த தொழிலாளர்களின் பணியிடங்கள் நிரப்பப்படாததால் தொழிலாளர்களின் பணிச் சுமை அதிகரித்துள்ளது. பேருந்துகளை இயக்க முடியாமல் நிறுத்தப்படுவதாகவும் கூறப்படுகிறது.

தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி கூட நிர்வாகத்தால் செலவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. ஓய்வு பெற்றோர், மரணம் அடைந்தோர் ஆகியோரின் பணிக்கொடை ஓய்வு பலன்களை கூட வழங்குவதற்கு பல ஆண்டுகள் தாமதமாகிறது. பொருத்தமான ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை.

இதனால் முதிர்ந்த வயதில் தொழிலாளர்கள், நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்க வேண்டி நேரிடுகிறது. நிர்வாகமும் இதற்காக பொழுதையும் பணத்தையும் வீணாக செலவிடுகிறது.

எத்தனை சிக்கல்கள் இருந்தாலும், இனியும் இந்த நிலையை நீடிக்க விடாமல் தடுத்து, தீர்வு செய்வது அவசர அவசியமானதாகும்.

தமது கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த முன்னறிவிப்பை வெளியிட்டுள்ள தொழிற்சங்கங்களை அழைத்துப் பேசி, தக்க தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு அரசை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநிலச் செயலாளர் வலியுறுத்தி உள்ளார்.

# சாதி ஒடுக்குமுறைக்கும், நில அபகரிப்புக்கும் அமலாக்கத்துறை துணைபோவதா?

## இரா.முத்தரசன் கேள்வி

சாதி ஒடுக்கு முறைக்கும், நில அபகரிப்புக்கும் அமலாக்கத்துறை ஆயுதமா? என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கேள்வி. இது குறித்து அவரது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகில் உள்ள இராமநாய்கன்பாளையம் ஊராட்சியை சேர்ந்த கண்ணையன், கிருஷ்ணன் சகோதரர்கள் தேவேந்திரகுல வேளாளர் சாதிப் பிரிவை சேர்ந்தவர்கள். இவர்களது தந்தையார் சின்னையன் நாற்பது வருடங்களுக்கு முன்பு சுத்தக் கிரயம் மூலம் பெற்ற 6.5 ஏக்கர் நிலத்தை உழுது, சாகுபடி செய்து வாழ்ந்து வருகின்றனர்.

படிப்பறிவு குறைந்த, சமூகத்தில் அடித்தளத்தில் ஒடுக்கப்பட்ட சமூகப் பிரிவில் உள்ள கண்ணையன், கிருஷ்ணன் சகோதரர்களை வஞ்சகமாக ஏமாற்றி, அவர்களது நிலத்தில் ஒரு பகுதியை அபகரிக்கும் நோக்கத்துடன் பாஜகவின் அரசியல் செல்வாக்கு பெற்ற அதன் இளைஞர் அணி செயலாளர், சேலம் இரும்பாலை பகுதியை சேர்ந்த குணசேகரன் போலி ஆவணம் தயாரித்து, ஏழை விவசாயிகளைதொடர்ந்து அச்சுறுத்தி வருகிறார். கண்ணையன், கிருஷ்ணன் சகோதரர்கள் நிலத்திற்கும், மேல் பகுதியில் குணசேகரனுக்கு சொந்தமான நிலம் இருப்பதை பயன்படுத்தி, கீழ் பகுதியில் சாகுபடி செய்ய விடாமல் தொடர்ந்து இடையூறுகளும் செய்து வந்தார்.

இந்த நிலையில் கண்ணையன், கிருஷ்ணர் சகோதரர்களுக்கு கடந்த ஜூலை மாதம் அமலாக்கத்துறை நவம்பர் 27 ஆம் தேதி விசாரணைக்கு வருமாறு அழைப்பாணை (சம்மன்) அனுப்பியுள்ளது. இதில் சகோதரர்களை "இந்து பள்ளர்" என்று சாதி அடையாளப்படுத்தி அவமதித்துள்ளது. இது அப்பட்டமான தீண்டாமை குற்றச் செயலாகும்

அமலாக்கத்துறை விசாரணையில் வழக்கறிஞர் அனுமதிக்கப்படாமல் மறுக்கப்பட்டு, சகோதரர்கள் மிரட்டப்பட்டிருப்பது அதிகார அத்துமீறலாகும்.

பாஜகவின் அரசியல் கருவியாக செயல்பட்டு வரும் அமலாக்கத்துறை, தற்போது சாதிய ஒடுக்குமுறைக்கும், நிலப்பறிப்பு மோசடிக்கும் ஆயுதமாக மாறியிருப்பது விசாரணை அமைப்புகள் மீதான நம்பிக்கையை முற்றாக தகர்த்து வருகிறது.

அமலாக்கத்துறையின் அதிகார அத்துமீறலை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன். பட்டியலின சமூகப் பிரிவு ஏழை விவசாயிகளான கண்ணையன், கிருஷ்ணன் நிலவுரிமை பாதுகாக்க களம் இறங்கி போராடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம் என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# நூறுநாள் வேலைக்கு ஆதார் அட்டை கட்டாயம் என வேலை பெறும் உரிமையை மறுப்பதா?

## இரா.முத்தரசன் கண்டனம்

நூறுநாள் வேலைக்கு ஆதார் அட்டை கட்டாயம் என – வேலை பெறும் உரிமையை மறுப்பதா? என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்து தனது அறிக்கையில் கூறியுள்ளதாவது.

விவசாயத் தொழிலாளர்கள் உள்ளிட்ட உடல் உழைப்புத் தொழிலாளர்களும், தொழிற்சங்கங்களும் வேலை பெறுவதற்கு சட்டபூர்வ உரிமை வேண்டும் என போராடி வந்த நிலையில், ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஒன்றிய அரசு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தை 2005 செப்டம்பர் 5 ஆம் தேதி நிறைவேற்றியது. இச் சட்டத்தின் கீழ் நடைபெறும் திட்டப் பணிகளில், ஊரகப்பகுதி உடல் உழைப்புத் தொழிலாளர் குடும்பங்கள் ஆண்டுக்கு தலா நூறு நாள் வேலை பெறுவதற்கு சட்டபூர்வ உரிமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2006 பிப்ரவரி 2 முதல் நடைமுறையில் உள்ள வேலை பெறும் உரிமைச் சட்டத்தை சீர்குலைத்து, சிதைத்து முற்றாக அழித்தொழிக்கும் முயற்சியில் பாஜக ஒன்றிய அரசு பத்தாண்டுகளாக தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

தற்போது வேலை அட்டையுடன் ஆதார் அடையாள அட்டையை இணைக்கவேண்டும் என நிர்பந்தம் செய்கிறது. பாஜக ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கும், வேலை உறுதியளிப்புச் சட்டம் மற்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படை உணர்வுகளுக்கு எதிரானது.

பாஜக ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சகம் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணிகள் தொடர்பாக வெளியிட்ட உத்தரவுகள் திட்டத்தை பெருமளவு பலவீனப்படுத்தி சுமார் 6 கோடி தொழிலாளர்களின் வேலை அட்டைகளை ரத்து செய்துள்ளது. இதன் மூலம் அவர்களது வேலை பெறும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் மிகக் குறைந்த நிதி ஒதுக்கம் செய்து, வேலை செய்த தொழிலாளர்களுக்கு பல மாதங்கள் ஊதியம் வழங்காமல் வஞ்சித்து வருகிறது.



இந்த நிலையில் ஆதார் அட்டை வேலை அட்டை இணைப்பை கட்டாயப்படுத்தி, 30.12.2023 ஆம் தேதிக்குள் ஆதார் அட்டையை இணைக்காத தொழிலாளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் தொழிலாளர்களின் சட்டபூர்வ வேலை பெறும் உரிமையை முற்றாக பறிக்கும் ஒன்றிய அரசின் விவசாயத் தொழிலாளர் விரோதச் செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாக கண்டிப்பதுடன், ஆதார் அட்டை கட்டாயம் என்ற உத்தரவை திரும்பப் பெற வலியுறுத்துகிறது. இது தொடர்பாக மாநில அரசு ஒன்றிய அரசுக்கு வலுவான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# பொங்கல் சிறப்பு தொகுப்பில் தேங்காய்களையும் வழங்க வேண்டும்

## தமிழ்நாடு விவசாய சங்கப் பொதுச் செயலாளர் அறிக்கை

பொங்கல் சிறப்பு தொகுப்பில் தேங்காய்களையும் சேர்த்து வழங்கி வேண்டும் என்று தமிழ்நாடு விவசாய சங்கப் பொதுச் செயலாளர் பி.எஸ். மாசிலாமணி அறிக்கை விடுத்துள்ளார்.

உழவர் திருநாளே பொங்கல் திருநாளாகும். அந்நாட்களில் விவசாயிகள், தாங்கள் விளைவித்த புத்தரிசி, சர்க்கரை, தேங்காய், கரும்பு, மஞ்சள், இஞ்சி, காய்கறிகள் மற்றும் பூக்களை கொண்டு தனது குடும்ப விழாவாக மனம் ஒருமையுடன்.. தன் உறவுகளுடன் ஒருங்கே இணைந்து கொண்டாடுவதே பொங்கல் என்பதை தாங்கள் அறிந்ததே. அவர்கள் விளைவித்த விளைபொருள்களுக்கு உரிய விலை கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலேயே தாங்கள் தொடர்ந்து பொங்கல் சிறப்பு திட்டம் என்பதை அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறீர்கள்.

இந்த நிலையில் பொங்கலிடுவதில் அடிப்படை பொருட்களில் ஒன்றான தேங்காய்களையும் இதில் சேர்த்து கொடுத்திட நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கடந்த இரு ஆண்டுகளாக தேங்காய்களுக்கு உரிய விலை கிடைக்காது போராடி வருவதை தாங்கள் அறிந்த நிலையில் தான் வழக்கமான இலக்கில் விவசாயிகளிடம் கொப்பரை கொள்முதலை தங்கள் அரசு செய்து முடித்தபின் மேலும் கொப்பரை கொள்முதலை நீட்டித்தால் தான் தென்னை விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைக்கும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றதுடன் ஒன்றிய ஆட்சியாளர்களிடம் நிலைமைகளை வலியுறுத்தி.. மேலும் கொப்பரைகொள்முதலை 56000 மெ.டன்னிலிருந்து இருந்து 90000 மெ. டன்னாக உயர்த்தி கொள்முதல் செய்து அதுவும் 26/11/2023 உடன் முடிந்துள்ளது.

விளையும்தேங்காய்களின் அளவிற்கு இக்கொள்முதல் இலக்கு ஈடு செய்யாது என தாங்கள் அறிவீர்கள்.

இதுவரை அரசு கொள்முதல் செய்து வைத்துள்ள கொப்பரைகளையும், வெளிமார்க்கெட்டில் விற்பனை செய்வதற்கு ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் வெளிச்சந்தையில் கொப்பரை விலை மேலும் குறைவதற்கு வாய்ப்பு உள்ளது. அரசு தேங்காய்களாக கொள்முதல் செய்தால் தான் சிறு, குறு, நடுத்தர விவசாயிகளுக்கு பயனளிக்கும்.

எனவே பொங்கல் சிறப்பு தொகுப்பு திட்டத்தில் ஒரு குடும்பத்திற்கு இரண்டு தேங்காய்களை கொடுத்திட தமிழ்நாடு அரசு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு பி.எஸ்.மாசிலாமணி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# குற்றம் சாட்டப்பட்டவர் பதவி உயர்வு பெறுவதா? இரா.முத்தரசன் கேள்வி

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் இயக்கத்தால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் பொது சுகாதாரத்தில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வந்ததை எதிர்த்து மக்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வந்தனர். இதில் 2018 மே 22 ஆம் தேதி காவல்துறை துப்பாக்கி சூடு நடத்தியதில் இரண்டு பெண்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் தொடர்பாக விசாரித்த நீதிபதி அருணா ஜெகதீசன் ஆணையம் மாவட்ட ஆட்சியர், காவல்துறை ஐ.ஜி. உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மீது கடுமையான குற்றம் சுமத்தி, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளது.

நீதிபதி அருணா ஜெகதீசன் விசாரணை ஆணையத்தின் அறிக்கை பெற்றுக் கொண்ட முதலமைச்சர் சட்டமன்றப் பேரவையில்: "ஆட்சி நிர்வாகம் இரக்கமற்று எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு உதாரணம்தான் தூத்துக்குடிச் சம்பவம்" என்று விளக்கம் அளித்து, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிதியுதவி அறிவித்ததுடன், காவல்துறையினர் போராட்டத்தை ஒடுக்கும் நோக்கத்துடன் போடப்பட்ட சில வழக்குகளை திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.



இந்த நிலையில் துப்பாக்கி சூடு சம்பத்திற்கு முழு முதல் காரணமாக இருந்தவர் என குற்றம் சாட்டப்பட்ட, ஐ.ஜி. சைலேஷ் குமாருக்கு பதவி உயர்வு வழங்கியிருப்பது சட்டத்திற்கும், நீதிக்கும், இயற்கை நியதிக்கும் புறம்பானது என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது. சைலேஷ் குமார் யாதவுக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வை முதலமைச்சர் தலையிட்டு திரும்பப் பெற வேண்டும் என்று தனது அறிக்கையில் வலியுறுத்தியூள்ளார்.

# கட்சியின் 99வது அமைப்பு தின விழா





இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99 ஆம் ஆண்டு தொடக்க விழா, கே.டி.கே. தங்கமணி நினைவு நாள், ஆர்.நல்லகண்ணு பிறந்தநாள் விழா தமிழ்நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

***திண்டுக்கல்:*** இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் 99 வது அமைப்பு தின கொடியேற்று நிகழ்ச்சி திண்டுக்கல் மாவட்ட கட்சி அலுவலகத்தில் மூத்த தோழர் பல வெள்ளைச்சாமி கொடியேற்றி வைத்தார். இதில் மாவட்ட செயலாளர் ஏ. பி. மணிகண்டன், மாநகரச் செயலாளர் கே.ராஜாங்கம், திண்டுக்கல் கிளைச் செயலாளர் சின்னப்பன், ஜோசப், அலுவலக செயலாளர் சுப்பையா, மேலாளர் ஐயப்பன் மற்றும் நியூ செஞ்சுரி நடராஜன், கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட செயலாளர் பிரபாகரன், ஜனசக்தி பொறுப்பாளர் கிருஷ்ணசாமி ஆகியோர் பங்கேற்றனர்.

***மதுரை:*** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேற்கு பகுதி செயலாளர் ஜனசக்தி என். ஜீவா கட்சி கொடியை ஏற்றிவைத்தார். கட்சியின் மாநில குழு உறுப்பினர் பா. ராஜலெட்சுமி, கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சி.தாமஸ், மாவட்ட பொருளாளர் எம்.இருளாண்டி, ஏஜடியூசி நிர்வாகிகள் இரா.முருகன், விளாங்குடி மணி, எம்.ஆர்.லோகநாதன், கோ.பாலகிருஷ்ணன், மற்றும் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

***குமரி:*** நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கம் அருகில் அமைந்துள்ள ஜீவா சிலை முன்பு நடைபெற்ற நிகழ்வுக்கு கட்சியின் மாவட்ட செயலாளர் தா.சுபாஷ் சந்திர போஸ் தலைமை தாங்கினார். ஜீவா சிலைக்கு கட்சியின் மூத்த தோழர் ஆரல் சுந்தரம்,ஏ.ஐ.டி.யு.சி.யின் முன்னாள் மாவட்ட செயலாளர் எஸ்.ராஜீ, கட்சியின் மாநகரப் பொருளாளர் கே.நாகராஜன், பூதை கிளையின் மூத்த தோழர் பூதலிங்கம்ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கட்சியின் கொடியை தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாநில தலைவர் எஸ்.கே.கங்கா ஏற்றி வைத்தார். கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எஸ்.அனில்குமார், மாதர் சம்மேளனத்தின் மாவட்ட செயலாளர் ஆர்.செல்வராணி, இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கே.சஜேஷ், மாவட்ட தலைவர் கிருஷ்ணகுமார், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற முன்னாள் மாநிலத்தலைவர் சி.சொக்கலிங்கம் உள்ளிட்டோர் மலர் அஞ்சலி செலுத்தினர். அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில துணைத் தலைவர் பேராசிரியர் சுந்தரம் நாகர்கோவில் மாநகரப் செயலாளர் ஆர். இசக்கிமுத்து நன்றி கூறினார்.

***கரூர்:*** மாவட்ட அலுவலக வாயிலில் கொடியேற்று நிகழ்ச்சி மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் தலைமையில் நடைபெற்றது.கட்சி கொடியை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.ரத்தினம் ஏற்றிவைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.லட்சுமி காந்தன்,கே. கலாராணிஒன்றிய செயலாளர்கள் ஆர்.நடராஜன்,,அரவக்குறிச்சி எஸ்.பழனி,மாவட்டகுழு உறுப்பினர்கள் ஆர்.தங்கவேல்,ஜிபிஎஸ்.வடிவேலன், உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

***திருவாரூர்:*** திருத்துறைப்பூண்டியில். பி.எஸ்.ஆர். இல்லம் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டது. முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கோ. பழனிச்சாமி கட்சி கொடியினை ஏற்றி வைத்தார். பி

தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்களின் உருவப்படத்திற்கு சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர் கே. உலகநாதன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். திருத்துறைப்பூண்டி பகுதியில் நகரிலும்,ஒன்றியத்தின் கிளைகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கொடிகள் ஏற்றப்பட்டது. இதில் அ.பாஸ்கர், பி. வி.சந்திரராமன், கே. ஆர். ஜோசப், கே. ராஜா, வி.ஜவஹர், டி. பி. சுந்தர் மற்றும் கட்சியின் முக்கிய தோழர்கள் பங்கேற்றனர்.

***சேலம்:*** மாவட்ட கட்சி அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் கொடியேற்று விழா நடைபெற்றது. கே.டி.கே.தங்கமணி படத்திற்கு மாவட்ட துணைச்செயலாளர் எம்.ராமன் மாலை அணிவித்தார். கொடியினை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் ஆர்.ரமேஷ் ஏற்றி வைத்தார்.

மேட்டுத் தெரு கிளையின் கொடியினை மாவட்டக்குழு உறுப்பினர் பா.நேதாஜி ஏற்றி வைத்தார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் பி.பரமசிவம், மாவட்டக்குழு உறுப்பினர் கே.சுவாமிநாதன் ஆகியோர் உரையாற்றினர். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.பாலன், மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.சம்பத், ஆர்.எல். முத்துராஜகோபால் உட்பட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட துணைச்செயலாளர் ஏ.கந்தன் நன்றி கூறினார்.

### கருத்தரங்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட குழு சார்பில், 99வது அமைப்பு தினம், மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு பிறந்த நாள் விழா, கே.டி.கே.தங்கமணி 22வது நினைவு நாள் கருத்தரங்கம் சேலம் மாவட்ட கட்சியின் அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் ஏ.மோகன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் கட்சியின் மாநில துணை செயலாளர் மு.வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றினார். மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன் நன்றி கூறினார். மாவட்ட துணைச் செயலாளர் எம்.ராமன், மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா.தினேஷ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் டி.வி.கருணைதாஸ், என்.கே.செல்வராஜ், என்.எம்.சடையன் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

***திருச்சி மாநகர்:*** மாவட்டக் குழு சார்பில் 90 இடங்களில் கொடியேற்றப்பட்டது. மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மாவட்ட துணைச் செயலாளர் சி.செல்வகுமார் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் எஸ்.சிவா முன்னிலை வகித்தார். தேசிய கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் எம். செல்வராஜ் சிறப்புரையாற்றினார்.

கட்சி அலுவலகத்தில் உள்ள கொடியை ஏஐடியுசி பொதுச் செயலாளர் க. சுரேஷ் ஏற்றி வைத்தார். பெரிய மிளகு பாறை கிளை கொடியினை மூத்த தோழர் சிவ சூரியன் ஏற்றி வைத்தார். இதில் மாணவர் பெருமன்றத்தின் மாநில பொருளாளர் க. இப்ராகிம், ஏ ஐ டி யு சி மாவட்ட தலைவர் நடராஜன், பொருளாளர் ராம்ராஜ், புறநகர் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் ஜி.ஆர்.தினேஷ் குமார், இளைஞர் பெருமன்ற மாவட்ட தலைவர் முருகேசன் ,மாதர் சங்க மாவட்ட பொருளாளர் சுமதி, க.ஆயிஷா உள்ளிடோர் கலந்து கொண்டனர்.

மேற்குபகுதிசெயலாளர்சுரேஷ்முத்துசாமி தலைமையில் கொடியேற்றப்பட்டது. இதில் பொருளாளர் ரவீந்திரன் முன்னிலை வகித்தார். மணிகண்டம் ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் எம்.ஆர். முருகன் தலைமையில் கொடியேற்றப்பட்டது. ஸ்ரீரங்கம் பகுதி செயலாளர் பார்வதி தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் சொக்கி சண்முகம் முன்னிலை வகித்தார். கிழக்கு பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பகுதி செயலாளர் சையது அபுதாஹிர் தலைமை வகித்தார். அந்தநல்லூர் ஒன்றிய குழு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஒன்றிய செயலாளர் எம்.ஆர். எஸ்.ராஜலிங்கம் தலைமை வகித்தார், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் பேரூர் நடராஜன் முன்னிலை வகித்தார். அபிஷேகபுரம் பகுதி குழு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு பகுதி செயலாளர் அஞ்சுகம் தலைமை வகித்தார், தோழர் அசோக் முன்னிலையில் வைத்தார். பொன்மனைப் பகுதியில் செயலாளர் ராஜா தலைமையில் கொடியேற்றப்பட்டது.

***திருச்சி புறநகர்:*** மாவட்டத்தில் மணப்பாறை நகரம் ஒன்றியம், மருங்காபுரி, வையம்பட்டி, திருவறும்பூர், தொட்டியம், மணச்சநல்லூர், த.பேட்டை உட்பட அனைத்து இடை கமிட்டிகளில் கொடியேற்றப்பட்டது.

துவாக்குடி அரசு போக்குவரத்து கழக பணிமனை அலுவலகம் முன்பு கே.டி.கே. தங்கமணியின் நினைவு தினத்தை முன்னிட்டு, கிளை செயலாளர் பழனிச்சாமி, கௌரவ தலைவர் மாரியப்பன், முத்துசெல்வன், சுந்தரவேல் உள்ளிட்டோர் அவரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலி செலுத்தினர்.

***தூத்துக்குடி:*** கோவில்பட்டி ஜீவா இல்லத்தில் கட்சியின் கொடிக்கம்பத்தில் கட்சியின் கொடியை கட்சியின் மாவட்ட செயலாளர் பி. கரும்பன் ஏற்றி வைத்தார்.

மாவட்டத் துணைச் செயலாளர் பாபு, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சேதுராமலிங்கம், நகரச் செயலாளர் சரோஜா, மாவட்ட குழு உறுப்பினர் பரமராஜ் ஆகியோர் உரையாற்றினர்.

***ஈரோடு:*** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் 99 ஆம் ஆண்டு அமைப்பு தினப் பேரவை கூட்டம் ஈரோட்டில், கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் எஸ்.டி.பிரபாகரன் தலைமை தாங்கினார். கொடியினை ஏற்றி வைத்து கட்சியின் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் சிறப்புரை நிகழ்த்தினார்.

கூட்டத்தில் விவசாய சங்க மாநில துணைத் தலைவர் சி.எம். துளசிமணி, கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர்கள் எஸ்.சின்னசாமி, எம் குணசேகரன், மாவட்ட பொருளாளர் என்.ரமணி, ஈரோடு வட்டார செயலாளர் ஜி.கல்யாணசுந்தரம், பெருந்துறை ஒன்றிய செயலாளர் வி.சி.செந்தில்குமார், மொடகுறிச்சி ஒன்றிய செயலாளர் யு. டி. மாதேஸ்வரன், ஒன்றிய வட்டார நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.

***திருவண்ணாமலை:*** செங்கம் ஒன்றியத்துல் பத்து கிளைகளில் கொடியேற்றப்பட்டது.

***நாகை***: வேதாரண்யம் ஒன்றியம் தகட்டூர் கடைத்தெருவில் ஒன்றிய செயலாளர் அ.பாலகுரு தலைமையில் மாவட்ட செயலாளர் சிவகுரு பாண்டியன் கட்சி கொடி ஏற்றினார்.மாவட்ட நிர்வாக குழு டி.நாராயணன் மற்றும் ஒன்றிய நிர்வாக குழு தோழர்கள் .இளைஞர் பெருமன்றம் தோழர்கள் மாதர் சங்க உறுப்பினர்கள் மற்றும் கிளை செயலாளர்கள் மற்றும் கட்சி தோழர்கள் கலந்து கொண்டனர்.

***தென்காசி:*** சிவகிரி அலுவலகத்தில் சிவகிரி நகர செயலாளர் பி. பாலசுப்பிரமணியன் தலைமையில் கட்சியின் வரலாற்று கருத்தரங்கம் தடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் இசக்கித்துரை சிறப்புரை ஆற்றினார். ராஜேந்திரன், குருவு, கண்ணன், சண்முகவடிவு, பால்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இராயகிரி, சங்கரன்கோவில், புளியங்குடி, கடையநல்லூர், தென்காசி, கடையம், செங்கோட்டை பகுதிகளில் கட்சி கொடி ஏற்றி, ஜனசக்தி இதழ், காலண்டர் விற்பனை செய்யப்பட்டது.

***விருதுநகர்:*** விருதுநகர் மாவட்டம் முழுவதும் கொடியேற்றி ஜனசக்தி சிறப்பு மலர் மற்றும் காலண்டர் விற்பனையும் நடைபெற்றது. வத்திராயிருப்பில் வட்ட செயலாளர் கோவிந்தன் தலைமையில் தேசியக்குழு உறுப்பினர் இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ , வி.அழகிரிசாமி எக்ஸ் எம்.பி., செட்டியார்பட்டியில் ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவிதொச வரதராஜன், திருச்சுழி ஒன்றியத்தில் ஒன்றிய செயலாளர் செல்வம் தலைமையில் மாவட்ட பொருலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன் உள்ளிட்டோரும்,

சிவகாசியில் வட்ட செயலாளர் ஜீவா தலைமையில் மாவட்ட துணை செயலாளர் சமுத்திரம், இராஜபாளையத்தில் நகர செயலாளர் விஜயன் தலைமையில், வி.இரவி, சத்திரப்பட்டியில் ஒன்றிய செயலாளர் இராமச்சந்திரன் தலைமையில் ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, ஆலங்குளத்தில் ஜெயபிரகாஷ் தலைமையில் ஒன்றிய செயலாளர் நடராஜன் உள்ளிட்டோரும், ஜி. புத்துயிர் ஒன்றிய செயலாளர் பலவேசம் தலைமையில் பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ.

விருதுநகரில் நகர செயலாளர் முத்துக்குமார் தலைமையில் ஒன்றிய செயலாளர் சக்கணன் ,தலைவாஇ முருகேசன் ,ஏஐடியுசி பாண்டியன் உள்ளிட்டோரும், அருப்புக்கோட்டையில் வட்ட செயலாளர் முனியசாமியும், காரியாபட்டியில் துணை செயலாளர் ரவி தலைமையில் வட்ட செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்டோரும, சாத்தூரில் நகர செயலாளர் ஜான்ராஜா தலைமையில் வட்ட செயலாளர் சுவாமிநாதன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

***செங்கல்பட்டு மாவட்டம்:*** மதுராந்தகம் தொகுதி குழு சார்பில் மெய்யூர் கிளையில், கிளைச் செயலாளர் செ. இன்பராஜ் தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட குழு உறுப்பினர் கே.வி.சேகுவேராதாஸ் கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார். இந்த நிகழ்வில் இளைஞர் பெருமன்றத்தின் தொகுதி செயலாளர் மு.நாகராஜ், பிலாப்பூர் கிளை செயலாளர் கி.கதிர்வேல், இளைஞர் பெருமன்றத்தின் கிளை செயலாளர் அ.நவீன் மற்றும் முன்னணி தோழர்கள் பங்கேற்றனர்.

***திருநெல்வேலி:*** பாளை. ஒன்றியம்,கே டி சி நகர் கிளை சார்பாக கீழநத்தம் பஞ்சாயத்தில் பணிபுரியும் 31 தூய்மை காவலர்கள் மற்றும் நலிவடைந்த 19 பெண்கள் உட்பட 50 பேருக்கு நலத்திட்ட உதவிகள், சிபிஐ மாவட்ட துணை செயலாளர் நண்பா கே.முத்துகிருஷ்ணன் தலைமையிலும், பாளை. ஒன்றிய துணை செயலாளர் எம்.நவராஜ் மோசஸ் முன்னிலையிலும் வழங்கப்பட்டது.

## அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தாயார் மறைவு!

விருதுநகரில் தமிழக வருவாய்த்துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரனின் தயார் அமராவதி அம்மாள் (94) வயது மூப்பின் காரணமாக காலமானார் என்ற செய்தியறிந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன் விருதுநகர் வந்து அமராவதி அம்மாள் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார். அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். மாநில துணை செயலாளர் பெரியசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாநில செயற்குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்எம்பி, மாரிமுத்து ஏம்எல்ஏ, ஏஐடியுசி மாநில தலைவர் காசிவிஸ்வநாதன், மாவட்ட பொருளாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர் பாலமுருகன், பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்எல்ஏ, தவிதொச வரதராஜன் மற்றும் இடைக்கமிட்டி செயலாளர்கள் உடன் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

## இலவச வீட்டுமனை கோரி மாவட்டாட்சியரிடம் மனு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி திருச்சி மாநகர் மாவட்ட மேற்கு பகுதி குழு சார்பாக, மாமன்ற உறுப்பினர் ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் க. சுரேஷ் தலைமையில், கூலித் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா மற்றும் தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வழங்கக்கோரி நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரிடம் மனு கொடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவின் பேரில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோர் கொண்ட குழு சொந்த வீடு இல்லாத 44 பேருக்கு வீட்டுமனை பட்டா அல்லது குடிசை மாற்று வாரியத்தில் வீடு வழங்க நடவடிக்கை எடுக்க பட்டியல் தயார் செய்யப்பட்ட நிலையில், உடனடியாக நடவடிக்கை எடுக்க கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு அளிக்கப்பட்டது.

இதில் மேற்கு பகுதி செயலாளர் இரா. சுரேஷ் முத்துசாமி, கட்டுமான சங்க மாவட்டத் துணைச் செயலாளர் ம.சுமதி மற்றும் கங்காதேவி, சுலோச்சனா, நசீமா, பர்ஜானா, முகமுதா, பாத்திமுத்து, பானுமதி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## பேரூராட்சியை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் இராயகிரியில் பேரூராட்சியில் சீரான குடிநீர், வினியோகம், கால்நடை மருத்துவமனை, மின்வாரியமுறைகேடு களைதல் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கிளை செயலாளர் வி.சின்னவேல்சாமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதற்கு எஸ்.செரிமுத்து, என்.லிங்கத்துரை, கே. சங்கரையா முன்னிலை வகித்தனர். கட்சியின் மாவட்ட செயலாளர் டி.இசக்கிதுரை, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் டி.சுப்பையா, மாவட்ட குழு உறுப்பினர்கள் பி.பாலசுப்பிரமணியம், பி.வேலு, ஆர்.சமுத்திரக்கனி ஆகியோர் கண்டனவுரையாற்றினர்.

## மூத்த தோழர் கொ.மா.கோதண்டம் அவர்களுக்கு பாராட்டு



இராஜபாளையத்தில் இலக்கியத்தின் அடையாளமாக திகழ்ந்துவரும் தொழிலாளர் சங்கத்தின் மூத்த தோழர் குறிஞ்சி செல்வர் கொ.மா. கோதண்டம் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு இலக்கியத்திற்கான கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்துள்ளது. இந்தியகம்யூனிஸ்ட்கட்சியின் 99வது ஆண்டு அமைப்பு தினத்தில் தோழருக்கு கட்சியின் சார்பில் சால்வை அணிவித்து, ஜனசக்தி சிறப்பிதழ் மற்றும் நாட்காட்டி வழங்கப்பட்டது. நிகழ்வில் சிபிஐ மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வி.ரவி,நகரச்செயலாளர் பி.கே.விஜயன் மற்றும் கோவிந்தன், பாஸ்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### வினாடி - வினா விடைகள்

1. காரல் மார்க்ஸ் ஆசிரியராக இருந்த ரைனிஷ் சைடுங் பத்திரிகை அலுவலகத்தில். (1842 நவம்பர்)
2. பிரான்ஸ் (1845 ஜனவரி 16)
3. மேகங்களில் உள்ள நீர்த் துளிகளில் ஊடுருவும் சூரிய ஒளி சிதறலடைந்து, எதிரொலிப்பதால் தோன்றுகிறது.
4. எம்.எஸ்.சுப்புலெட்சுமி (1966)
5. ராபர்ட் புரூஸ் ஃபுட்
6. உத்திரமேரூர்

## அவதூறு சுவரொட்டி மாநகராட்சி பணியாளர்கள் வேலையை புறக்கணித்து போராட்டம்



கோவை மாநகராட்சி 48வது வார்டு துப்புரவு தொழிலாளி கலைவாணி. இவர் பணி செய்யும் இடத்தில் தொடர்ந்து அமைதி சூழலை கெடுப்பதாக புகார் எழுந்தது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கலைவாணி, பணி செய்யும் இடத்தில் ஜெயலட்சுமி என்ற தொழிலாளி அடித்துள்ளார்.

இதன் அடிப்படையில் கலைவாணி, சித்ரா, நிலவேணி ஆகிய தொழிலாளிகளை மாநகராட்சி நிர்வாகம் வேறு இடத்திற்கு பணியிட மாற்றம் செய்தது.

இதில் ஆத்திரமடைந்த கலைவாணி, தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதார துப்புரவு பொதுப் பணியாளர் சங்கம், கோவை மாநகராட்சி அண்ணா சுகாதார பணியாளர் சங்கம், பகுஜன் சமாஜ் தொழிலாளர் யூனியன் ஆகிய சங்கங்களின் பெயரில் 48வது வார்டில் மாஸ்டர் ரோல் ஊழல் நடப்பதாகவும், அதற்கு மாமன்ற உறுப்பினர் பிரபாவதி துணை போவதாகவும் தவறான தகவல்களை கூறி சுவரொட்டிகள் அடித்து ஒட்டியுள்ளார்.

இதைக் அறிந்த மாநகராட்சித் தொழிலாளர்கள் சித்தாபுதூரில் உள்ள 48வது வார்டு அலுவலகத்திற்கு வந்து பணிக்கு செல்லாமல். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், "பணி செய்யும் இடத்தில் பொது அமைதிக்கு ஊறுவிளைவிக்கும் கலைவாணி என்ற தொழிலாளி மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

மாநகராட்சி துணை ஆணையர் சிவக்குமார் நேரில் வந்து தொழிலாளர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கண்ட நபர் மீது நடவடிக்கை எடுப்பதாக கூறி, அனைவரும் பணிக்குத் திரும்ப கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் அனைவரும் பணிக்கு திரும்பினர். இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கெடுத்தனர்.

## பால் கொள்முதல் விலை லிட்டருக்கு 10 ரூபாய் உயர்த்தி அறிவித்திடவேண்டும்

### தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில நிர்வாக குழு கூட்டத்தில் தீர்மானம்

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாநில நிர்வாக குழு உறுப்பினர்கள் கூட்டம் 15.12.2023 அன்று தஞ்சாவூரில் சங்கத்தின் மாநில தலைவர் எஸ்.குணசேகரன் முன். எம்.எல்.ஏ. தலைமையில் நடந்தது. மாநில பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி அமைப்புநிலை கடமைகளைவிளக்கிபேசினார். சிபிஐ தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து. உத்திராபதி பங்கு கொண்டு சிறப்பித்தார். இக்கூட்டத்தில் தோழர்கள் சி.எம்.துளசிமணி, இரா.முல்லை, அ.பன்னீர்செல்வம், மு.மாதவன், சிவ.சூரியன், சோ. பாஸ்கர், ஆர். ராமச்சந்திரன்மற்றும் பலர் பங்கு கொண்டனர்.கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழக அரசு பால் லிட்டருக்கு ரூபாய் 3 ஊக்கத் தொகையாக அறிவித்து வழங்குவதுஉற்பத்தியாளர்களுக்கு ஆறுதளிக்கும். இந்நிலையில் கால்நடை தீவனமூட்டைகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வரும் நெருக்கடியில் ஆவின் உறுப்பினர்களுக்கு 50 சதம் மானியத்தில் தீவனம் வழங்கிடவும் ....பால் விலையை லிட்டர் 10 ரூபாய் உயர்த்தி வழங்கிடவும் அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

கால்நடைகள் நோய் தாக்குதலுக்கு உள்ளாகி பாதிப்பும், இறப்பும்ஏற்பட்டு விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஆகவே இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவ திட்டம் போல் தொழுக்கூடம் நாடி மருத்துவம் என்ற புதிய திட்டத்தை நடைமுறைப்படுத்திட வேண்டும்.

சிறுதானிய சாகுபடிக்கான நிரந்தர திட்டங்கள் வேண்டும்!

2023 ஆம் ஆண்டு சிறுதானிய ஆண்டாக ஐ.நா; சபை அறிவித்தது. தமிழ்நாடு அரசும் தொடர்ந்து இதன் விரிவாக்கத்திற்காக புதிய திட்டங்களை நடைமுறைபடுத்தி வருகிறது. சிறுதானிய உற்பத்தி பெருக்கத்திற்காக மானாவாரி தானியங்கள் விளையும் மாவட்டங்களில், சிறுதானிய சாகுபடிக்கான விதைகள், இடுபொருட்கள்;தொழில்நுட்பம், வணிகப்படுத்துதல் போன்ற தொலைநோக்கு பாதுகாப்புதிட்டங்களை அறிவித்து நடைமுறைப்படுத்திட வேண்டும். இதற்கென தனித்துறை ஒன்றை, வேளாண்துறையில் ஏற்படுத்திட வேண்டும்.

சம்பா தாளடிக்கான இரசாயண உரங்களை தட்டுப்பாடு இல்லாமல் வழங்கிட வேண்டும்!

நெல் பயிர் வளர்ச்சிக்கு அடிப்படையான இரசாயண உரங்களை காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

நெல் சாகுபடியை பாதுகாத்திட உடன் தண்ணீர் வழங்கிட வேண்டும்!

தீர்ப்பின்படி கொடுக்க வேண்டிய தண்ணீரை கர்நாடக வழங்காததால், மேட்டூர் அணையின் நீர் இருப்பைகொண்டு டெல்டா விவசாயிகள் சாகுபடியை மேற்கொண்டனர். பல இடங்களில் தண்ணீர் தட்டுப்பாட்டால், அழிந்து போன சாகுபடிக்கு பதிலாக மீண்டும் மறு சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் வடகிழக்கு பருவ மழையும் உரியஅளவு பொழியாததால் பல இடங்களில் சம்பா, தாளடி பயிர்கள் காய்ந்து விவசாயிகள் அச்சத்தில் உள்ளனர்.

எனவே டெல்டா மாவட்டங்களின் தற்போதைய பருவ மழையை கவனத்தில் கொண்டு.. மேட்டூர் அணையில் இருந்து உடன் உரிய அளவு தண்ணீரை திறந்திட வேண்டும்.

மக்காச்சோளம்சாகுபடியில் படைப்புழு தாக்குதல்.. உரிய நிவாரணம் வேண்டும்!

தமிழகத்தின் பல மாவட்டங்களில் மக்காச்சோளம் பயிரிடப்பட்டு வருகிறது. தூத்துக்குடி, தேனி, விருதுநகர், மதுரை உள்ளிட்ட சில மாவட்டங்களில் படைப்புழுக்களால் பரவலாக தாக்குதலுக்கு உள்ளாகி பெரிய அளவுக்கு விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி உள்ளது. இவைகளை உடனடியாக வேளாண் துறை ஆய்வு செய்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 25,000 நிவாரணம் வழங்கிட வேண்டும்.

## பொதிகை தொலைக்காட்சியின் பெயரை மாற்றும் ஒன்றிய அரசுக்கு கண்டனம்!

இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஒன்றிய அரசாங்கத்தால் 1975ல் தொடங்கப்பட்ட சென்னை தொலைக்காட்சி நிலையம், தமிழ் மக்களிடையே கருத்துக்கணிப்பு நடத்தி, 2000 ஆம் ஆண்டு பொதிகை தொலைக்காட்சி என பெயர் மாற்றப்பட்டது. அதேநேரத்தில், பல்வேறு மொழிகளில் இருந்த தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்களின் பெயர்களும் மாற்றப்பட்டன.

இந்த 'பொதிகை' என்ற பெயர், தமிழர் திருநாளாம் பொங்கல் முதல் மாற்றப்பட்டு 'டிடி தமிழ்' என அழைக்கப்படும் என்று ஒன்றிய அமைச்சர் எல்.முருகன் அண்மையில் அறிவித்துள்ளார்.

கடந்த 23 ஆண்டுகளாக அழைக்கப்பட்டுவந்த 'பொதிகை' என்பதை 'டிடி தமிழ்' என மாற்ற வேண்டிய அவசியம் என்ன? அதுவும் தமிழர் திருநாளாம் பொங்கல் அன்று பொதிகையின் பெயரை வெறுமனே டிடி தமிழ் என்று அறிவிப்பது எதற்காக?

அந்தந்த மாநிலங்களில் உள்ள புகழ்பெற்ற மலைகளின் பெயர்களை, அந்தந்த மொழி பேசும் மக்கள் பரிந்துரைத்ததன் அடிப்படையில், தமிழில் பொதிகை, கன்னடத்தில் சந்தனா, தெலுங்கில் சப்தகிரி, மகாராஷ்டிராவில் சஹ்யாத்ரி, குஜராத்தில் கிரினார் என்று தொலைக்காட்சிகளுக்கு பெயர்கள் வைக்கப்பட்டன. 'பொதிகை' பெயர் நீக்கம், இந்தப் பெயர்களையும் மாற்றுவதற்கான தொடக்கமா என்ற கேள்வி எழுந்துள்ளது. எனவே அந்தந்த மாநில மக்களின் தனித்துவத்தை, உணர்வுகளை அவமதிக்கும் ஒன்றிய அரசின் போக்கு கைவிடப்பட வேண்டும்.

இந்த பெயர் மாற்ற முயற்சியை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது. இதனை கைவிட்டு தொடர்ந்து பொதிகை என்ற பெயரிலேயே அழைக்கப்படுவதை உறுதி செய்யுமாறு ஒன்றிய அரசின் தகவல் ஒளிபரப்பு துறையை கேட்டுக் கொள்கிறது என்று தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி உண்ணாவிரதப் போராட்டம்



மணப்பாறை தாலுகா வையம்பட்டி ஒன்றியம் வீ.பெரியபட்டி, அமையபுரம், முகவனூர், புதுக்கோட்டை, நடுப்பட்டி, வையம்பட்டி, செக்கனம், உள்ளிட்ட ஊராட்சிகளில் உள்ள கூலித்தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க தமிழக அரசை வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் எண்.பூலம்பட்டி கடை வீதியில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

இப்போராட்டத்திற்கு வி தொ ச மாவட்ட தலைவர் சண்முகானந்தம் தலைமை வகித்தார். பாலுசாமி, சவரியப்பன், கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உண்ணாவிரத போராட்டதை துவக்கிவைத்து தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் அ.பாஸ்கர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் ராஜ்குமார், விவசாய சங்க மாநில துணைச் செயலாளர் த. இந்திரஜித், போக்குவரத்து கழக ஏஐடியூசி மாநில துணைச் செயலாளர் சுப்பிரமணியன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் பழனிச்சாமி, வி தொ ச மாவட்ட செயலாளர் கனேசன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மனவை நகர செயலாளர் ஜனசக்தி உசேன், போக்குவரத்து கழக ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுந்தர்ராஜ், ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்தி உரை நிகழ்தினர்கள்.

உண்ணாவிரதத்தை முடித்து வைத்து இந்திய விவசாய தொழிலாளர்கள் சங்கத்தின் தேசிய தலைவர் என். பெரியசாமி சிறப்புரை நிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றிய துணை செயலாளர்கள் ஸ்டீபன் சேகர், தங்கராஜ், ஒன்றிய பொருளாளர் செலின் லீமாரோஹி, ஒன்றிய குழு உறுப்பினர்கள் இராமசாமி, ஆரோக்கியம், வேளாங்கன்னி, வீராச்சாமி மற்றும் விவசாய தொழிலாளர்கள் சங்க நிர்வாகிகள் கூலித் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

# ஏக்கர் ஒன்றுக்கு நெற்பயிர் ரூ.35,000, வாழை ரூ.50,000 இழப்பீடு வழங்க!

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலிறுத்தல்!

தென்மாவட்டங்களில் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகளை நேரில் கண்டறிய தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பி.எஸ். மாசிலாமணி, தூத்துக்குடி மாவட்ட சி.பி.ஐ. செயலாளர் பி. கரும்பன், விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் வி. கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் அ.லெனின் குமார், வி.பாலமுருகன், எம்.பிச்சை, ஆர்.சிவராமன் ஆகியோர் தூத்துக்குடி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளநீர் பாதிப்புகளையும், நேரில்சென்று சந்தித்து விவசாயிகளிடம், தொழிலாளர்களிடம், பொது மக்களிடம் கருத்துகளை கேட்டு ஆறுதல் கூறினர்.

கடந்த சில ஆண்டுகளாக பருவமழை உரிய அளவு பொழியாது வறட்சி ஏற்பட்டு அரசு நிவாரணம் கொடுத்தது. நடப்பாண்டு பிற்பகுதியில் விதையிட்ட பயிர்கள் பெரும்பகுதி தண்ணீர் இல்லாது, காய்ந்து, பின்னர் வந்த மழையில் மீண்டும் இரண்டாவது சாகுபடி பலர் செய்திருந்த நிலையில், நெல், வாழை, கரும்பு, மக்காசோளம், உளுந்து, பாசிப்பயறு, மிளகாய், வெங்காயம், கம்பு, சூரியகாந்தி, உப்பளம் இவைகள் பெரும்பகுதி இடங்களில் முழுமையாக அழிந்துள்ளது. இதில் இனி மீண்டும் சாகுபடி செய்ய இயலாது.

தொடர்ச்சியாய் பெருகி வந்த வெள்ள நீரால் சாலைகள் பல இடங்களில் அரித்து, புளிய மரங்கள் கூட சாய்ந்து உள்ளன. பொங்கலுக்கு வெட்டி விற்கக் கூடிய நிலையில் தார் விட்ட வாழைகள் பல இடங்களில் சாய்ந்து முறிந்து விட்டது. வாழை விவசாயிகளுக்கு பெருத்த இழப்பு. கால்நடைகள், குடியிருப்பு கட்டிடங்கள், வணிக கட்டிடங்கள் என மிகப் பெரிய சேதாரத்தை ஏற்படுத்தி உள்ளன.

பாதிப்பை உடனடியாக தமிழக முதல்வர் வந்து பார்வையிட்டதும், அமைச்சர்களும், அலுவலர்களும் மறு சீரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருவதும், நிவாரண அறிவிப்பு செய்திருப்பதையும் வரவேற்கிறோம்.

தூத்துக்குடி மாவட்டத்தின் தென் பகுதியில் உரிய அலுவலர்களைக் கொண்டு ஆய்வு செய்வது போல், மானாவாரி புஞ்சை, பயிர்களுக்கும், உயர்அலுவலர்களை நியமித்து கூடுதல் முக்கியத்துவம் அளித்திட வேண்டும். ஆனால் மேற்கண்ட பாதிப்புக்குரிய நிலையில் நிவாரண அறிவிப்பு இல்லை.

முதலீட்டு செலவு இழப்பையும், ஓராண்டு கால வாழ்க்கை வருமான செலவிற்கும் சேர்த்து நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். நெல்பயிர் இழப்பிற்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூபாய் 35 ஆயிரம், வாழை ஏக்கருக்கு ரூபாய் 50,000, மானாவரி பயிர்களுக்கு ரூ. 30000 என உயர்த்தி வழங்க வேண்டும். இதுபோல் மனித உயிரிழப்பு, கால்நடைகள் இழப்பிற்கு, குடும்ப எதிர்கால பாதுகாப்பிற்கு ஈடாகும் நிலையில் உயர்த்தி வழங்க வேண்டும். வேளாண் பயிர் கடன்களை ரத்துசெய்திடவேண்டும்.

வீட்டு உபயோக மின்சாதனங்களை தமிழக அரசே தனி முகாம் நடத்தி, உரியபழுது நீக்குநர்களை கொண்டு பழுதுநீக்கி கொடுத்திட வேண்டும்.

எல்நினோ மற்றும் பருவகால மாற்றங்களை கவனத்தில் கொண்டு, இம்மாவட்டங்களில் ஏற்பட்ட அனுபவத்தை கணக்கில் கொண்டும், நீர்நிலை கொள்ளளவு திறனை உயர்த்தி, கரைகளை உயர்த்தி பலப்படுத்திட வேண்டும்.

உடைப்பட்ட இடங்களில் கரைகளை பலப்படுத்திட வேண்டும். நீர்நிலைகளை கண்டறிந்து நீர் சேமிப்புதிறனை அதிகப்படுத்திடும் தொலைநோக்கு திட்டங்களை அமல்படுத்திட வேண்டும் என்று தமிழக அரசை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

# டேங்கர் வெடி விபத்திற்கு இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அலட்சியமே காரணமே

இந்தியன் ஆயில் நிறுவனத்தின் அலட்சிய போக்கை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பகுதி செயலாளர் எம். ஜெய்சங்கர் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பகுதி துணைச் செயலாளர் ஜி.ராஜசேகர் முன்னிலை வகித்தார். இதில் முன்னாள் மாவட்ட செயலாளர் மூத்த தோழர் எம்.எஸ்.மூர்த்தி, வடசென்னை மாவட்ட செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி ஆகியோர் கண்டன உரையாற்றினர். பகுதி துணைச் செயலாளர் ஏ.சுரேஷ் நன்றி கூறினார்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்




அமலாக்கத் துறை சம்மன்

# பாதிக்கப்பட்ட விவசாயிகளுடன் சிபிஐ சந்திப்பு



நிலத்தை அபகரிக்கத் திட்டமிட்ட பிஜேபி பிரமுகர் குணசேகரனுக்காக ஏழை விவசாயிகள் கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோருக்கு அமலாக்கத் துறையால் சம்மன் அனுப்பியிருந்தது. இதனால் பாதிக்கப்பட்ட சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ராமநாயக்கன் பாளையம் ஏழை விவசாயிகளான கண்ணையன், கிருஷ்ணன் ஆகியோர் இல்லத்திற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தோழர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர் இதில் மாவட்ட செயலாளர் ஏ. மோகன், மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் பா. தினேஷ், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் என்.எம்.சடையன் ஒன்றிய செயலாளர் கவிதா செல்லப்பன் மற்றும் ஈ.ஆர்.கே. , எம்.கண்ணன், டி.பி.தங்கராஜ், டி.விநடராஜ், ஆகியோர் பங்கேற்றனர்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி

கோவை மாவட்டம் சூலூர் தெற்கு வட்டாரம் இருகூர் கட்சி கிளை உறுப்பினர்கள் ஏ. ராஜேந்திரன், சுமதி ஆகியோரின் பேரன் பத்மபிரியா, பிரேம்குமார் தம்பதியரின் மகன் செல்வன் ரித்திக் அவர்களின் மூன்றாவது பிறந்த நாளை முன்னிட்டு, கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பெ.மௌனசாமி, வட்டார செயலாளர் வே. வசந்தகுமார் ஆகியோரிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதி ரூபாய் 500 அளிக்கப்பட்டது.

பெல் தொழிற்சாலையில்

# ஏஐடியுசி புதிய நிர்வாகிகள் தேர்வு




திருச்சி பாரத மிகுமின் தொழிற்சாலை DTS/AITUC ஆண்டு மகாசபை கூட்டம் வே. நடராஜா தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் தீனதயாளன் வரவேற்புரை நிகழ்த்தினார். ஆண்டறிக்கை துணைப் பொதுச் செயலாளர் கங்காதரன் வாசித்தார். தீர்மானங்களை சங்க ஆலோசகர் ராஜேந்திரன் முன்மொழிந்தார்.

அறிக்கையின் மீது விவாதங்கள் நடைபெற்று, புதிய நிர்வாகிகளாக தலைவர் நடராஜா, பொதுச் செயலாளர் கைலாஷ்நாத், பொருளாளர் வினோத் குமார், அமைப்பு செயலாளர் சங்கர் கணேஷ் ஆகியோர் ஏக மனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி திருச்சி மாவட்ட ஏஐடியுசி பொதுச் செயலாளர் க.சுரேஷ் HAPP எம்பிளாயிஸ் யூனியன் பொதுச் செயலாளர் இரணியன், பெரம்பலூர் MRF யூனியன் பொதுச் செயலாளர் பிரபாகரன், பெல் சங்கத்தின் செயல்தலைவர் சுப்பையா உள்ளிட்டோர் உரையாற்றினர். தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்க பொதுச் செயலாளர் கிருஷ்ணசாமி சிரப்புறையாற்றினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 145. அறிதல் என்றும் எளிது

**அறிதலென்ப என்றும் எளிதாம் அஃதை**
**மறத்தல் அரிதின் அரிது.**

அறிவை அறிதல் என்பது மிக எளிய செயல். தாம் அறிந்தவற்றை மறந்துவிடுதல் என்பது முடியாத செயலாகும்.

**பேசுதல் என்றும் எளிதந்தப் பேச்சை**
**நிறுத்தல் அரிதின் அரிது.**

நாம் எதனையும் எளிதாகப் பேசிவிடலாம். ஆனால் பேசியவற்றை நிலைபெறச் செய்தல் கடினமான செயல்.
(சொல்லுதல் ஓதல் யார்க்கும் எளிய – வள்ளுவர்)

# நாவல் எழுதியதற்காக இரு தரப்பிலும் இருந்து மிரட்டல்

## – சம்சுதீன் ஹீராவுடன் நேர்காணல்

**எழுத்தாளர் சம்சுதீன் ஹீரா எழுதிய 'மௌனத்தின் சாட்சியங்கள்' நாவல் 1997, 98 இல் கோவையில் நிகழ்ந்த மத வன்முறைகள், குண்டுவெடிப்புகள் குறித்தும், அதன் சமூகப் பாதிப்புகளைப் பற்றியும் பேசுகிறது.**

இந்நூல் வெளிவந்த 2015ஆம் ஆண்டில் பல்வேறு விருதுகளைப் பெற்றது. இந்த நாவல் சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் குறித்தும், வேறெப்போதையும் விட மத நல்லிணக்கம் தேவைப்படுகிற இந்தச் சூழலில் இந்நூலின் தேவை குறித்தும் பல்வேறு ஆளுமைகளின் காணொளிகளாக 'சலனத்தின் சாட்சியங்கள்' என்கிற ஆவணப்படம் வெளி வந்துள்ளது. அதன் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த சம்சுதீன் ஹீராவைச் சந்தித்தோம்.

**கேள்வி : உங்களுடைய முதல் படைப்பே காத்திரமான அரசியல் நாவலானது எப்படி ?**

பதில்: நான் 15 ஆண்டுகளாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர். சிறு வயதிலிருந்து வாசிப்பின் மீது ஆர்வம் உண்டு. அப்போதெல்லாம் அரசியல் வரலாறு குறித்த கட்டுரைகளை தொடர்ச்சியாக எழுதி வந்தேன். பாலஸ்தீனம், ஈழம், காஷ்மீர் பற்றிய வரலாற்றுக் கட்டுரைகளை கீற்று, மாற்று, தடம் போன்ற இணைய இதழ்களில் எழுதிக்கொண்டிருந்த காலம் அது.

ஒருமுறை முகநூலில் என் நண்பர் பெரோஸ் பாபு, கோயமுத்தூர் அரசு மருத்துவமனையில் உட்கார்ந்த நிலையிலே உயிரோடு எரிக்கப்படும் ஒரு முஸ்லிம் இளைஞனின் படம் ஒன்றை பதிவிட்டிருந்தார். அது என் மனதை மிகவும் பாதித்தது. விபரங்களைத் தேடிப்போனேன். அது 1998 குண்டுவெடிப்புக்கு முன்பாக கோவையில் நிகழ்ந்த இஸ்லாமியர்களின் மீதான தாக்குதலில் 19 பேர் கொல்லப்பட்ட சம்பவம். அதுகுறித்த முழுமையான இலக்கியப்பதிவுகள் ஏதும் அதுவரை வந்திருக்கவில்லை.

பிர்தவுஸ் ராஜகுமாரன், பாமரன் போன்ற எழுத்தாளர்களின் சில சிறுகதைகள் வந்திருந்தனவே தவிர முழுமையான பதிவாக எதுவும் இல்லாமலிருந்தது. அப்போதே அதை முழுமையாக பதிவுசெய்ய முடிவு செய்து, அது தொடர்பான ஆவணங்களை திரட்டத் தொடங்கினேன். 1980 ஆம் ஆண்டு முதல் 1998 வரையில் கோவையில் நிகழ்ந்த மத வன்முறைகள் குறித்த முதல் தகவல் அறிக்கைகள், அக்காலத்தில் வெளிவந்த முன்னணி நாளிதழ்களில் வந்த செய்திகளின் பேப்பர் கட்டிங், மக்கள் சிவில் உரிமைக் கழக அறிக்கை, பிரண்ட்லைன் இதழின் கவர் ஸ்டோரிகள், மாதர் சங்கம் வெளியிட்ட அறிக்கை, 'உணர்வு' என்ற இசுலாமிய இதழ் வெளியிட்ட சிறப்பு பதிப்பு, நீதியரசர் கோபாலகிருஷ்ணன் அறிக்கை போன்றவைகளை சேகரித்தேன்.

இதைத் தவிர இரு தரப்பிலும் இந்த வழக்குகளில் சம்மந்தப்பட்டவர்களை சந்தித்துப் பேசினேன். அவர்களில் பலர் அப்பாவிகள். அவர்கள் பேசவே அஞ்சினார்கள். அவர்களுக்கு வேண்டியவர்கள் மூலம் பேசி, நம்பிக்கைத் தந்த பிறகுதான் பேசினார்கள். அதன்பிறகுதான் நாவலை எழுதத் தொடங்கினேன்.

இதை எழுதுவதைத் தவிர்க்கச்சொல்லி வீட்டிலும் நெருக்கடிகள் வந்தன. பாதிக்கப்பட்ட மக்களின் துயரைக் கேட்டு எழுதும்போதே இவ்வளவு சிக்கலுக்கு உள்ளானேன் என்றால், அதில் பாதிக்கப்பட்ட மக்களின் வலிகள் எந்த அளவுக்கு இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். இதை கைவிடுவது அவர்களுக்குச் செய்யும் துரோகம் என்று நம்பினேன். மீண்டும் எழுதத் துவங்கினேன். இப்படி நான்கரை ஆண்டுகால உழைப்பிற்குப்பிறகு நாவல் வெளியானது.

**கேள்வி: நாவலின் தாக்கமும், இந்த நாவலுக்கு வந்த எதிர்வினை எப்படி இருந்தது!**

பதில்: வாசகசாலை விருது, கலை இலக்கியப் பெருமன்றம், தமுஎகச, சமூக நீதிக்கட்சி, கலை இலக்கிய மேடை என முக்கியமான இலக்கிய அமைப்புகள் விருதுகள் கொடுத்து அங்கீகரித்தன. அதன் பிறகு ஜீவா விருது, அரசியல் புதினத்துக்கான திண்டுக்கல் தமிழ்ச்சங்க விருது என்று பரவலான அங்கீகாரம் பெற்றது. அரசியல் இயக்கங்கள் குறிப்பாக இடதுசாரிக்கட்சிகளும்




ஜனநாயக அமைப்புகளும் இந்நூலின் தேவையை உணர்ந்து தமிழகம் முழுவதும் எடுத்துச்சென்றனர். சிறிதும் பெரிதுமாக அறுபதுக்கும் மேற்பட்ட கூட்டங்கள், நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்த நாவலின் தாக்கத்தினால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பத்தாண்டுகளுக்கு மேலாக சிறையில் இருப்பவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன்னெடுத்ததை மிகப் பெரிய வெற்றியாக கருதுகிறேன்.

இசுலாமிய சிறைவாசிகளின் முன்விடுதலை கோரிக்கை தொடர்பான உரையாடல், இஸ்லாமிய இயக்கங்கள் தாண்டி பொதுவெளியில் நிகழ்வதற்கு ஏதேனும் ஒரு வகையில் இந்த நாவல் பங்களித்திருப்பதை அறிந்தவுடன் நான் பட்ட இன்னல்கள் வீணாகவில்லை என்ற திருப்தி ஏற்பட்டது.

அதுமட்டுமன்றி இந்த நாவலை எழுதியதற்காக இந்துத்துவ சக்திகள், இசுலாமிய அடிப்படைவாதிகள் என இரண்டு தரப்பிலும் இருந்து மிரட்டல்கள் வந்தன. தேனி மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் இந்த நாவலை படிக்கக் கூடாது என்று இந்துத்துவ அமைப்பும், இசுலாமிய அடிப்படைவாத அமைப்பும் தடை விதித்ததாக எழுத்தாளர் நந்தன் ஸ்ரீதரன் எழுதியிருந்தார். வலதுசாரி எழுத்தாளரான ஜெயமோகன் இது 'இடதுசாரி முகமூடி அணிந்த வஹாபி இலக்கியம்' என்றார். வலதுசாரி மதவெறிச் சக்திகள் இந்நூலால் பதட்டமடைவதைக் கொண்டே நான் சரியான திசையில் பயணிப்பதாக திருப்தியடைந்து கொண்டேன்.

**கேள்வி: கலவரம் நடந்த கோவை பொதுமக்களின் நிலைமை எப்படி இருக்கிறது !**

பதில்: இந்த கலவரத்துக்கான விதை இந்து முன்னணியால் 80 களின் இறுதியிலிருந்தே தூவப்பட்டு வந்தாலும் 1997இல் இஸ்லாமியர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கூட்டுப் படுகொலையும், 1000 கோடி ரூபாய் அளவிலான இஸ்லாமியர்களின் சொத்துகள் அழிக்கப்பட்ட நிகழ்வும், அதற்கு எதிர்வினையாக இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பு அல் உம்மா நிகழ்த்திய குண்டுவெடிப்புகளும் கலவரங்களும் மக்களுக்குப் புதியது. நூற்றுக்கணக்கான ஆட்கள் தெருவில் மோதிக்கொள்வதும், கடைகள் வணிக நிறுவனங்கள் கூட்டம் கூட்டமாகக் கொள்ளையடித்து எரிக்கப்படுவதும், தொடர் குண்டு வெடிப்பும், அதற்குப்பின்பான கலவரம் எல்லாவற்றையும் கோவை மக்கள் முதல்முறையாகப் பார்த்தனர். மக்களுக்கு மட்டுமில்லாமல் போலீசுக்கும் அரசுக்குமே இது பழக்கமில்லாதது. அதனால் இஸ்லாமிய சமூகத்தின் மீது அரச இயந்திரம் நடத்திய கொடூரமான அடக்குமுறை என்றெல்லாம் கொந்தளிப்பான காலகட்டம் அது. மக்கள் அதிலிருந்து மீண்டு வர நீண்டகாலம் எடுத்தது.

**கேள்வி: உங்கள் நாவலில் சி.எம்.சி காலனி மக்கள் குறித்து பேசியிருக்கிறீர்கள். அவர்களும் பாதிக்கப்பட்டார்களா?**

பதில்: ஆமாம், கலவரங்களில், இஸ்லாமியர்கள் மட்டுமன்றி சிஎம்சி காலனி அருந்ததிய இளைஞர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். பொய்யான வாக்குறுதிகளை நம்பி கலவரம், கொள்ளைகளில் ஈடுபட்ட சில இளைஞர்கள் பின்னர் கைவிடப்பட்டனர். வழக்கு வராது என அவர்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால் அவர்கள் மீது பின்னர் வழக்கு போடப்பட்டது. வழக்கை நடத்த தங்கள் வீட்டை அடிமாட்டு விலைக்கு விற்றுவிட்டு அந்தப் பகுதியை விட்டு வெளியேறிய சில அருந்ததியக் குடும்பத்தினர் உண்டு. வழக்கை எதிர்கொள்ள முடியாமல், அருந்ததிய இளைஞர்கள் தற்கொலை செய்துகொண்ட சம்பவங்களும் நிகழ்ந்தன.

கேள்வி: இப்போது நிலைமை மாறியிருக்கிறதா?

பதில்: முற்றிலும் மாறிவிட்டதாகச் சொல்ல முடியாது. ஆனாலும் சில நிகழ்வுகள் நம்பிக்கையளிக்கக் கூடியதாக இருக்கிறது.



சமீபத்தில் சசிக்குமார் கொலையை வைத்து மீண்டும் ஒரு கலவரத்தை நடத்த வலதுசாரிகள் சதி செய்தனர். ஆனால் ஏற்கனவே பட்ட அனுபவத்தால் சுதாரித்துக் கொண்ட பெரியார் இயக்கங்களும், இடதுசாரி இயக்கங்களும், பொதுமக்களும் ஒன்றிணைந்து அதை முறியடித்தனர்.

**கேள்வி: உங்கள் நாவலுக்கு மத அமைப்புகள் தாண்டி வேறு எந்த வகையிலாவது நெருக்கடிகள் வந்ததா?**

பதில்: ஆமாம். ஆரம்பத்தில் உளவுத்துறையிலிருந்து நெருக்கடிகள் இருந்தன. இந்த நாவலை திருப்பூரில் உள்ள ஒரு இலக்கிய அமைப்பு ஒரு திருமண மண்டபத்தில் நடத்த முயற்சி எடுத்தது. நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் காவல்துறையினர் நான் நக்சலைட் இயக்கத்தைச் சார்ந்தவன் என்று சொல்லி மண்டப உரிமையாளர்களை மிரட்டி தடுத்தனர். இதுபோல தொடர்ச்சியாக தொந்தரவுகள் இருந்துகொண்டே இருந்தன. அதை அரசியலாக எதிர்கொள்ளத் திட்டமிட்டோம். பொன்னுலகம் பதிப்பகத்தைச் சேர்ந்த குணா முன்முயற்சியில் திருப்பூரில் 13 அரசியல் அமைப்பினர் ஒன்று சேர்ந்து கருத்துரிமைப் பாதுகாப்பு கூட்டமைப்பு உருவானது. அது உளவுத்துறைக்கு எதிரான கண்டனக் கூட்டங்களை நடத்தியது. வீதிகளில் சுவரொட்டிகள் ஒட்டி உளவுத்துறையை அம்பலப்படுத்தியது. அதன்பின்னரே உளவுத்துறை நெருக்கடி குறைந்தது.

அந்த நெருக்கடி நேரத்தில், தமுஎகச என்னை நேரில் சந்தித்து ஆதரவு தந்ததோடு திருப்பூரில் பிரமாண்டமான வெளியீட்டு விழாவையும் நடத்தியது.

**கேள்வி: உங்கள் நாவல் குறித்து 'சலனத்தின் சாட்சியங்கள்' என்ற ஆவணப்படம் வெளியானதைப் பற்றிச் சொல்லுங்கள்.**

பதில்: இரண்டாண்டுகளுக்கு முன்பு எனது நாவல் பற்றி வெளியான மதிப்புரைகளை எழுத்தாளர் இ.பா.சிந்தன் 'மௌனம் கலைத்த சாட்சியங்கள்' என்ற பெயரில் நூலாக தொகுத்து வெளியிட்டார்.

இப்போது சென்னையைச் சார்ந்த ஆவணப்பட இயக்குநர் கார்த்திக், இந்த நாவல் ஏற்படுத்திய சமூகத்தாக்கம் குறித்து தமிழகத்தின் முன்னணி ஆளுமைகளை நேர்காணல் செய்து 'சலனத்தின் சாட்சியங்கள்' என்ற ஆவணப்படத்தைத் தயாரித்துள்ளார். அதன் வெளியீட்டு விழா திசை புத்தக நிலையத்தில் நடந்தது. மிக முக்கியமான பணியைச் செய்துள்ள கார்த்திக் அவர்களுக்கு என் வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன்.

**கேள்வி: சமீபகாலமாக இஸ்லாமிய சமூகத்தில் நிறைய பெண் படைப்பாளிகள் வெளிப்படுகிறார்கள். இதை எப்படிப் பார்க்கிறீர்கள்.**

பதில்: கட்டாயமாக வரவேற்கப்படவேண்டிய விசயம் அது. இஸ்லாமிய சமூகத்தில் எழுதக்கூடிய ஆற்றலுடைய நிறைய ஆளுமைகள் இருக்கிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்களின் குரல் இஸ்லாமிய சமூகத்தைத்தாண்டி வெளியே வருவதில்லை என்கிற வருத்தம் எனக்கிருந்தது. இப்போது அதில் பெரிய உடைவு ஏற்பட்டிருப்பதாகவே பார்க்கிறேன். சமீபகாலமாக இஸ்லாமிய பெண் படைப்பாளிகள் பொதுச்சமூகத்தில் நின்று பேச ஆரம்பித்திருக்கிறார்கள்.

**கேள்வி : இசுலாமிய பெண்கள் புர்கா அணிவது குறித்த உங்கள் கருத்து என்ன !**

பதில்: என் நிலைப்பாட்டை ஒரே வரியில் சொல்வதென்றால், புர்கா அணியச்சொல்லி குடும்பத்தினர் கட்டாயப்படுத்தினாலும் எதிர்ப்பேன். புர்கா அணியக் கூடாது என அரசாங்கம் கட்டாயப் படுத்தினாலும் எதிர்ப்பேன். அவ்வளவுதான். எனது மனைவியோ மகள்களோ புர்கா அணிவதில்லை. நாளை என் மகள்கள் புர்கா அணிய விரும்பினாலும் நான் தடுக்கப் போவதில்லை. உடை என்பது அவரவர் விருப்பம்.

**கேள்வி: குடியுரிமை திருத்தச் சட்டம் வந்தால் ஒரு இசுலாமியக் குடும்பம் எப்படியெல்லாம் வதைப்படக்கூடும் என்பதை சித்தரித்து 'மயானக்கரையின் வெளிச்சம்' என்ற சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டீர்கள் ! இப்போது நீங்கள் என்ன எழுதிக்கொண்டிருக்கிறீர்கள் ?**

பதில்: திருப்பூர் நகரை மையப்படுத்தி 'சபக்தனி' என்ற நாவலை எழுதி முடித்திருக்கிறேன். பாரதி புத்தக நிலைய வெளியீடாக சென்னை புத்தகக்கண்காட்சிக்கு வரவிருக்கிறது.

கேள்வி: சமீபத்தில் நீங்கள் படித்ததில் உங்களுக்கு பிடித்த நூல் என்ன ?

பதில்: வளைகுடா நாட்டில் வேலைக்கு போன ஒருவன் ஆடு மேய்ப்பதை உயிரோட்டமாகச் சொல்லும் 'ஆடு ஜீவிதம்' நாவலைச் சொல்லலாம். ஆமினா முஹம்மத்தின் 'ஆகாத தீதார்', இஸ்லாமியச் சமூகத்தில் பெண்கள் உலகின் நாம் அறியாத பக்கங்களைத் ததும்பத்ததும்ப பேசுகிறது. அ.கரீமின் 'முகாம்' நாவல், ஈ.பா.சிந்தன் மொழிபெயர்த்த 'ஆன்மீக அரசியல்', விஜயசங்கர் ராமச்சந்திரன் மொழிபெயர்த்த 'ஆர்.எஸ்.எஸ் (இந்தியாவிற்கு ஓர் அச்சுறுத்தல்)' போன்ற அரசியல் நூல்கள் மிகுந்த கவனத்தையும் வரவேற்பையும் பெற்றிருக்கின்றன.

**கேள்வி: வேறு எதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

பதில்: மனிதநேயத்தை வலியுறுத்தி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் கலைக்குழுவின் மைய முழக்கத்தைச் சொல்லி முடிப்பது பொருத்தமாக இருக்கும்.

'அன்பை விதைப்போம்.. வெறுப்பை வேரறுப்போம்.'

**நேர்காணல் செய்தவர் :பீட்டர் துரைராஜ்.**

# அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் இளைஞர் குரல் தேசிய மாநாடு!




அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் இளைஞர் அமைப்புகளை ஒருங்கிணைத்து தேசிய மாநாடு டெல்லியில் டிசம்பர் 23 அன்று நடைபெற்றது. மதச்சார்பற்ற, ஜனநாயக, இடதுசாரி இளைஞர் அமைப்புகளின் இளம் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். மாநாட்டின் இறுதியில் இளைஞர் குரல் டெல்லி மாநாட்டு கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

இளைஞர் பெருமன்ற அகில இந்திய தலைவர் சுக்ஜீந்தர் மகேசரி வரவேற்புரை ஆற்றினார். நோக்கவுரையை பொதுச் செயலாளர் இரா. திருமலை ராமன் ஆற்றினார்.

மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி. ராஜா காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, மணிப்பூர் முதல் மும்பை வரை பாஜக துடைத்து எறியப்பட வேண்டியது வரலாற்றுத் தேவை. நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்களை இடைநீக்கம் செய்தது குறித்து பேசிய அவர், எதிர்கட்சிகள் இல்லாத நாடாளுமன்றம் பொருத்தமற்றது என்று கூறினார்.

இளைஞர் காங்கிரஸ் நிர்வாகி மனு ஜெயின், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா சார்பில் மக்களவை உறுப்பினர் விஜய் ஹன்ஸ்தக், திமுக மாணவரணிச் செயலாளர் எழிலரசன் எம்எல்ஏ, மதிமுக அமைப்புச் செயலாளர் துரை வைகோ, சிஒய்எஸ்எஸ் சார்பில் அனு நாகேந்திர நிகாம், சமாஜ்வாடி இளைஞரணி அகில இந்திய தலைவர் முஹம்மது பஹத், ராஷ்டிரிய லோக் தள கட்சி சார்பில் சந்தன் சவுகான் எம்எல்ஏ, தேசியவாத இளைஞர் காங்கிரஸ் தேசியத் தலைவர் தீரஜ் ஷர்மா, ராஷ்டிரிய ஜனதா தளம் சார்பில் பிரியங்கா பாரதி, முஸ்லீம் யூத் லீக் அகில இந்திய தலைவர் அசீப் அன்சாரி, விடுதலைச் சிறுத்தைகள் இளைஞரணி சார்பில் சங்கத் தமிழன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி சார்பில் எம்.எஸ்.ராஜா, தமிழக வாழ்வுரிமைக் கட்சி சார்பில் ஜெரோன் குமார், ஏஐஒய்எல் பொதுச் செயலாளர் அம்பரீஷ், கேரளா யூத் பிராண்ட் சார்பில் டேனி செல்ஸ் ஆகியோர் பங்கேற்று உரை நிகழ்த்தினர்.

மாநாட்டின் இரண்டாம் அமர்வில் ஜவஹர்லால் நேரு பல்கலைகழக பேராசிரியர் முனைவர் அஜய் குடவரதி ‘இன்றைய சூழலில் இளைஞர்களை அமைப்பாக்குதல்’ என்ற தலைப்பில் பேசினார். நிறைவுரையை அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற முன்னாள் பொதுச் செயலாளரும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான சந்தோஷ் குமார் எம்.பி. அவர்கள் ஆற்றினார்.

அப்போது பேசிய அவர் இம்மாநாடு இந்தியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் இளைஞர் அமைப்புகளை ஒருங்கிணைத்து நடத்தப்படும் முதல் முயற்சி. இளைஞர்களின் தேவைகள் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளில் இடம்பெற வேண்டும். அதற்காக ஏஐஒய்எப் இந்தியா கூட்டணியில் உள்ள கட்சிகளிடம் தொடர்ந்து உரையாட வேண்டும் என்று தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப்பினர்கள் இடைநீக்கம் ஜனநாயகத்தின் மீதான தாக்குதல் என்ற அவர், கோஷம் இடுவதும், முழக்கங்கள் எழுப்புவதும் ஜனநாயக போராட்ட வடிவங்கள். அதற்காக உறுப்பினர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டால் எதிர்கட்சிகள் இல்லா இந்தியா என்பதை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது எனக் கூறினார்.

இளைஞர் அமைப்பின் கூட்டுபிரகடனம்

‘இளம் இந்தியர்களின் குரல் இந்திய இளைஞர்களுக்கு முன் உள்ள சவால்கள் குறித்த தேசிய மாநாடு’ என்ற தலைப்பில் கையெழுத்திட்டவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர் அமைப்புகளான நாங்கள், இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு விரிவான தீர்வு காண கூட்டு அரசியல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கான எங்கள் தீர்மானத்தை இதன் மூலம் அறிவிக்கிறோம்.

ஆழமாக வேரூன்றிய நெருக்கடிகளைத் தீர்க்க அரசியல் ரீதியாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படும். பொதுவான ஒருமித்த கருத்தின் அடிப்படையில், பல்வேறு நிலைகளில் கூட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவோம். இந்த பிரகடனத்தின் மூலம், நாடு முழுவதும் உள்ள இளைஞர் அமைப்புகளின் செயல்பாட்டில் ஒற்றுமையைக் கொண்டுவர நாங்கள் முயற்சி செய்கிறோம்.

மேலும் பிரிவினை மற்றும் குறுங்குழுவாத சக்திகளைத் தோற்கடிக்க ஒற்றுமை மட்டுமே ஒரே வழி என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம். இந்தத் தீர்மானத்தில் அடிக்கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள பிரச்சினைகளில் நமது கூட்டு போராட்டங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் ஒற்றுமையின் மூலம் ஒரு திட்டவட்டமான வடிவத்தை எடுக்கும்.

### இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்!

இந்திய இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தடுப்பதற்கான உறுதியான நடவடிக்கைகள் இல்லாத நிலையில், அவர்களின் முன்னுரிமையை விரிவான முறையில் உறுதி செய்வதற்காக ஒரு ஒத்திசைவான அரசியல் இயக்கத்தை உருவாக்கி தொடங்குவது அவசியமாகிவிட்டது.

வேலையின்மை, தொடர்ந்து நீடிக்காத வளர்ச்சி மாதிரிகள் மற்றும் எதிர்காலத்தில் அதன் தீய விளைவுகள் ஆகியவற்றை கொள்கை வகுப்பாளர்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய நேரம் இது. இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தனிமைப்படுத்தப்பட்டவை அல்ல, மாறாக அவை பன்முகத்தன்மை கொண்டவை. வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் இருந்து அரசாங்கம் விலகியிருப்பது இளைஞர்களின் எதிர்காலத்தை ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது. பொதுத்துறை என்பது பாதுகாப்பான வேலைகளின் ஆதாரமாக உள்ளது. இது ஏராளமான மக்களை வேலைக்கு அமர்த்தும் திறன் கொண்டது மற்றும் அற்புதமான உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதி செய்வதில் அதன் முக்கிய பங்கை நிரூபித்துள்ளது.

வேலையின்மை ஒரு தொலைநோக்கு பிரச்சினையாக இருந்தபோதிலும், தனியார் துறை மற்றும் கிக் (gig) பொருளாதாரத்தில் பணிபுரியும் மக்கள் எதிர்கொள்ளும் தடைகள் தீர்க்கப்பட வேண்டும். நீண்ட வேலை நேரம், குறைவான ஊதியம், நச்சு பணியிடங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லாதது ஆகியவை இளைஞர்களை அதிர்ச்சியடையச் செய்கின்றன, அவர்கள் பெரும்பான்மையான தொழிலாளர்களாக உள்ளனர்.

அவர்கள் அதிக ஊதியம் பெறாமல் உள்ளனர், மேலும் அவர்களின் வேலையின் ஒப்பந்த இயல்பு காரணமாக, காப்பீடு மற்றும் பிற பணிப் பாதுகாப்புகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை. கிக் தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாக்க திடமான சட்டம் எதுவும் இல்லை, மேலும் ஈ. எஸ். ஐ, வருங்கால வைப்பு நிதி அல்லது சமூகப் பாதுகாப்பு தொடர்பான எந்தவொரு ஏற்பாடும் இல்லை. தனியார் துறையில் பணிபுரியும் நபர்களின் சூழலும் மிகவும் வேறுபட்டதல்ல. வேலை மற்றும் சமூக பாதுகாப்பு வேண்டும்

### தரமான கல்வியின்மை!

தரமான கல்விக்கான அணுகல் இல்லாதது இளம் தலைமுறையை பயனற்ற தொழிலாளர்களாக மாற்றுகிறது. படிப்படியாக, புதிய வாய்ப்புகளையும், புதுமையான திட்டங்களையும் சித்தப்படுத்தும் திறன் அவற்றிலிருந்து மறைந்துவிடும். தரமான கல்விக்கான அணுகல் இல்லாதது மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளிக்காதது மற்றும் பிற பிரச்சினைகள் ஆகியவை அவர்களின் அபிலாஷைகளின் முழுமையான வளர்ச்சி குன்றுவதையும் தேக்கநிலையையும் உறுதி செய்கின்றன.

எதிர்காலத்தைப் பற்றிய நிச்சயமற்ற தன்மையும் வேதனையும் இளைஞர்களிடையே ஆழ்ந்த மனநலப் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன. சிறந்த வேலைவாய்ப்பைக் கண்டுபிடிப்பதற்கான அழுத்தம், குறைந்த ஊதியத்திற்காக அதிக அழுத்தத்தின் கீழ் வேலை செய்வது பெரும்பாலும் அவர்களை மனிதாபிமானமற்றவர்களாக ஆக்குகிறது.

மனநலப் பிரச்சினைகளுடன் சேர்ந்து வகுப்புவாத அரசியலும் அவர்களை முற்றிலும் சீரழித்து வருகிறது. பிரிவினை மற்றும் ஆட்சி என்ற அரசியல் இந்திய மக்களின் தேசபக்தி உணர்வை நாசப்படுத்த ஆங்கிலேயர்களால் பயன்படுத்தப்பட்டது. சுதந்திரத்திற்கு முந்தைய காலத்தில், பிரிவினைவாத சக்திகளுக்கு எதிராக இளைஞர்கள் எப்போதும் விழிப்புடன் இருந்தனர்.

தற்போதைய சூழ்நிலையில், அரசியலின் வகுப்புவாதமயமாக்கல் ஜனநாயகத்தை பலவீனப்படுத்துகிறது. வெறுப்பின் அரசியல் இளைஞர்களை தவறாக வழிநடத்துவது மட்டுமல்லாமல், சமூகத்தில் முரண்பாடுகளையும் உருவாக்குகிறது. பிளவுபடுத்தும் அரசியல் ஜனநாயகத்தைத் தகர்த்து, அரசாங்கத்தை சொந்த நலன்களின் விவகாரங்களைக் கையாளும் குழுவாக மாற்ற முயற்சிக்கிறது.

வகுப்புவாத அரசியலில் பாதிக்கப்பட்டவர்கள் இளம் இந்தியர்கள், அவர்கள் புறக்கணிக்கப்பட்டவர்கள், பாகுபாடு காட்டப்பட்டவர்கள், ஓரங்கட்டப்பட்டவர்கள் மற்றும் இகழப்பட்டவர்கள். ஜனநாயகம் பலவீனமடைவது அவர்கள் தங்கள் கருத்துகளையும், கவலைகளையும் வெளிப்படுத்துவதற்கான மன்றங்களையும் தளங்களையும் அழித்து வருகிறது. ■

1 ஆம் பக்க தொடர்ச்சி

அவை குறித்த எந்த விவாதமும் இன்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய தண்டனைச் சட்டமான பாரதிய நியாய சன்ஹிதவில், செய்யப்பட்டுள்ள திருத்தங்களுக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. குறிப்பாக விபத்து தொடர்பான பிரிவுகளுக்கு எதிராக லாரி ஓட்டுநர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். முன்பிருந்த தண்டனைச் சட்டத்தில், எதிர்பாராதவிதமாக சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தால், ஓட்டுநருக்கு அதிகபட்சமாக இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

ஆனால், தற்போதைய திருத்தத்தின்படி, சாலை விபத்தில் எதிர்பாராதவிதமாக ஒருவர் உயிரிழந்தால் ஓட்டுநருக்கு அபராதத்துடன் ஏழு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும். அதுமட்டுமல்லாமல், குற்றவாளி தப்பித்துவிட்டாலோ அல்லது சம்பவம் குறித்து உடனடியாகப் புகாரளிக்கத் தவறினாலோ 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 7 லட்சம் ரூபாய் அபராதமும் விதிக்கப்படும்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் லாரி ஓட்டுநர்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குஜராத் மாநிலத்தில் லாரி ஓட்டுநர்கள் நெடுஞ்சாலைகளில் வாகனங்களை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கேடா, வல்சாட், கிர், சோம்நாத், பாருச் மற்றும் மேஷனா மாவட்டங்களின் வழியாக செல்லும் நெடுஞ்சாலைகளில் ஓட்டுநர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அகமதாபாத் வடோதரா நெடுஞ்சாலையில் 10 கி.மீ. தொலைவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

லாரி ஓட்டுநர்களின் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால், வாகன போக்குவரத்தும், எரிபொருள் விநியோகமும் பாதிக்கப்பட்டது. ஆம்புலன்ஸ்களும் போக்குவரத்து நெரிசலில் சிக்கிக் கொண்டன. பெட்ரோல் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் வாகன ஓட்டிகள் காத்திருந்தனர். இந்தக் காணொலிகள் சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவின.

“புதிய சட்டம் பற்றி யாருக்கும் எதுவும் தெரியாது. இது குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும்“ என்று அகில இந்திய மோட்டார் மற்றும் சரக்கு போக்குவரத்து சங்கத்தின் தலைவர் ராஜேந்திர கபூர் தெரிவித்தார்.

வடமாநிலங்களில் லாரி ஓட்டுநர்கள் நடத்திய இரண்டு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்திலேயே, பெட்ரோல், டீசல், எல்பிஜி சிலிண்டர் கிடைக்காமல் மக்கள் பெரும் தவிப்புக்கு உள்ளாகினர். பெட்ரோல் பங்குகளில் கூட்டம் அலைமோதியது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை வெளியேற்றிவிட்டு, எந்த விவாதமும் இன்றி ஜனநாயக விரோதமாக புதிய சட்டங்களை ஒன்றிய மோடி அரசு நிறைவேற்றியுள்ளது. மக்களாட்சி கோட்பாடுகளுக்கு எதிரான திருத்தங்கள் புதிய சட்டங்களில் இடம்பெற்றிருப்பதும் பல்வேறு தரப்பினரை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. அரசியல் சாசனம் உறுதிப்படுத்தியுள்ள அடிப்படை உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் எதிரான இந்தப் புதிய சட்டங்களுக்கு எதிரான போராட்டங்கள் இன்னும் தீவிரமடையும் என்பது மட்டும் உறுதி.

– மணி

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 06.01.2024 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# மூன்று மிகப்பெரிய போராட்டங்கள்! அமெரிக்காவில் அதிர்வலைகள்!



தா.சந்திரன்

**அமெரிக்க மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் பெரிய வெற்றிகளைப் பெற்ற ஆண்டாக அமைந்துள்ளதென தெரிவித்துள்ளனர்.**







கடந்த வருடம் அமெரிக்கா மூன்று மிகப்பெரிய வேலை நிறுத்தங்களை சந்தித்தது.

இவை 1990களுக்குப் பிறகு நடந்த மிகப்பெரிய வேலை நிறுத்தங்களாகும்.

இதன் விளைவாக 20 % முதல் 32 % வரையிலான ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளனர்.

குறிப்பாக கடைநிலை ஊழியர்கள் சம்பளம் குறிப்பிடத்தக்க அளவிற்கு உயர்ந்துள்ளது.

அமெரிக்காவின் மிகப்பெரும் தொழிலாக விளங்கும் ஹாலிவுட் கனவுத் தொழிற்சாலையின் 15000 கதாசிரியர்கள் புதிதாக வந்திருக்கும் கிமி தொழில்நுட்பத்தினால் தங்கள் எதிர்காலத்திற்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்திற்கு எதிராகவும், ஊதிய உயர்வுக்காகவும் தொடங்கிய வேலைநிறுத்தத்தில் பிற்பாடு 1லட்சத்து 60 ஆயிரம் நடிகர்களும் பங்கேற்று அந்த வேலை நிறுத்தம் மிகப்பெரிய வெற்றியை பெற்றதோடு, கிமி தொழில்நுட்பத் தாக்குதலிலிருந்து தங்களை காத்துக் கொண்டதோடு, ஊக்க ஊதியத்தையும் கணிசமாகப் பெற்றனர்.




1960லிருந்து இதுவரையில் நடந்ததில் இதுவே முதல்மிகப்பெரும்வேலைநிறுத்தம் என்று அமெரிக்க பொருளாதார நிபுணர்களும், தொழிற்சங்கங்களும் தெரிவித்துள்ளன.

டெட்டராய்ட் எனப்படும் தொழில் நகரத்தில் மூன்று மிகப்பெரிய ஆட்டோமொபைல் தொழில் நிறுவனங்களில் 45000 தொழிலாளர்கள் பங்கேற்ற வேலை நிறுத்தங்களின் விளைவாக 20% முதல் 25 % வரையிலான ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளனர.

சுகாதாரப்பணியாளர்கள் சுமார் 75000 பேர் பங்கெடுத்துக் கொண்ட பெரும் வேலைநிறுத்தம் பெரிய வெற்றியைப் பெற்று, அத்துறையிலும் 25 % வரையில் ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளனர்.

சமையல் கலைஞர்கள் 40000 பேரின் வேலை நிறுத்தத்தின் விளைவாக 32 % ஊதிய உயர்வினைப் பெற்றுள்ளனர்.

இதில் மிக முக்கியமாக கவனிக்க வேண்டிய விசயம் 2022 ம் வருடம்தான் அமெரிக்க வரலாற்றிலேயே தொழிற்சங்கங்களில் தொழிலாளர்கள் பங்களிப்பு மிகமிகக் குறைவாக இருந்துள்ளது.

அமெரிக்காவின் மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கையில் 10.1 % தொழிலாளர்கள் மட்டுமே சங்கத்தில் உறுப்பினராக இருந்துள்ளனர்.

இதற்கு முன் 1983 ல் அது 20.1 % மாக இருந்துள்ளது.

மேலும்கடந்தஆண்டுதுவக்கத்திலேயே அமெரிக்க பொருளாதார நிபுணர்கள் அந்த ஆண்டை பொருளாதார மந்தம் தாக்கும் ஆண்டாக பிரச்சாரம் செய்தனர். அதோடு பணவீக்கமும் கூடுதலாக இருந்தது. கடந்த ஆண்டில் பல வங்கிகளின் செயல்பாடு மிகப்பெரிய தோல்வியை கண்டது.

அதாவது தொழிலாளர்கள் சங்கங்களில் பங்கேற்பது மிகவும் குறைவாக இருந்த நாடு பணவீக்கத்திலும் பொருளாதார மந்த நிலையிலும் இருந்த காலத்தில் தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் உறுதியாக நின்று போராடியதன் விளைவாக மிகப்பெரிய வெற்றியை ஊதியத்திலும், பணி நிலைமைகளிலும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது போராடுவதற்கான காலமில்லை என போராட்டங்களைக் தள்ளிப் போட்டு, இறுதியில் போராட்டங்களே இல்லாமல் செய்கிற, போராட்ட உணர்வை மழுங்கடிக்கிறவர்களுக்கும், தொழிலாளர்களுக்கு இழப்பதற்கு ஏதுமில்லை என்ற நிலை மாறி, இழப்பதற்கு நிறைய சம்பாதித்து வைத்துள்ளனர். அதனால் போராட மாட்டார்கள் என்றும் தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான கருத்துக்கள் அனைத்திற்கும், அதை பிரச்சாரம் செய்பவர்களுக்கும், அமெரிக்காவின் தொழிலாளர்கள் புத்தியில் உறைப்பது போன்ற செய்தியைத் தந்துள்ளனர்.

கடந்த நான்காண்டுகளாக நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பாளர்களின் சம்பளம் 40 % உயர்த்திவிட்டு, தொழிலாளர்களின் சம்பளம் வெறும் 6 % மட்டுமே உயர்த்திய நிறுவனங்களின் சுரண்டலை தொழிலாளர்கள் சரியாகப் புரிந்து வைத்திருந்தனர். இது இந்த வேலை நிறுத்தங்கள் வெற்றி பெற முக்கியமான காரணமாக அமைந்ததாக தொழிற்சங்கத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்தப் போராட்டங்கள் ஊதிய உயர்வினை மட்டும் பெற்றுத் தரவில்லை, மாறாக 2022 ல் சங்கங்களிலும், அதன் செயல்பாடுகளிலும் இருந்த மந்த நிலையையும் இத்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் உடைத்தெறிந்து தங்களின் கட்டுமானத்தை வலுப்படுத்திக் கொண்டுள்ளன.

இந்தப் போராட்டங்களை அமெரிக்க மக்களில் 67 % பேர் ஆதரிப்பதாக ஒரு கருத்துக் கணிப்புத் தெரிவிக்கிறது.

அதாவது தொழிலாளர்கள் போராட்டத்திற்கும் மக்களுக்கும் சம்பந்தமில்லை என்ற வாதத்தையும் போராட்டங்கள் உடைத்தெறிந்திருக்கின்றன.

தொழிற்சங்கங்களோ, இடதுசாரி கட்சிகளோ தங்கள் பலவீனங்களை மாற்றியமைக்கவும், பலம் பெறவும் இருக்கும் ஒரே வழி போராட்டங்கள் மட்டுமே என்பதை உலக ஏகாதிபத்திய சுரண்டலின் தலைமையகமான அமெரிக்காவின் தொழிலாளர்களே கற்றுத் தருகின்றனர்.

அவர்கள்தானே கற்றுத்தரவும் முடியும். ஏனென்றால் அவர்கள்தானே முதலாளித்துவத்தின் அராஜக உற்பத்தியினால் தங்களைத் தாக்கும் சகல துன்ப, துயரங்களுக்கும் நேரடியாக ஆளாபவர்கள்.

அதே சமயம் அமெரிக்காவின் தொழிற்சங்க அமைப்புகளின் தன்மை, அதாவது நிரந்தரத் தொழிலாளர்கள் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களை தொழிற்சங்கங்கள் எவ்வாறு அமைப்பாக்கியிருக்கின்றன என்பது குறித்து பெரிய தகவல்கள் நம்மிடமில்லை, அவற்றையும் இதோடு சேர்த்துப் பார்த்தால் இன்னும் சற்று கூடுதல் தெளிவு பிறக்கும்.

(இக்கட்டுரை Blue-collar workers won big in 2023, defying bleak predictions என்ற வாஷிங்டன் போஸ்ட் பத்திரிக்கையின் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது)

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்
# ஆர்.நல்லகண்ணு ஆவணப்பட தொடக்க விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு அவர்களின் 99வது பிறந்தநாளில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், தாமரை செந்தில் இயக்கத்தில் உருவாகும் ஐயா நல்லகண்ணு அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆவணப்படத்தை தொடங்கி வைத்தார்.

ஓவியர் டிராஸ்க்கி மருது, இயக்குனர் நடிகர் கவிதாபாரதி, ஓவியர் திருவண்ணாமலை பெ.அன்பு, தாம்பரம் ஆதிமாறன், எஸ். ஏழுமலை, பி.எஸ். மாசிலாமணி, டி.லெனின், வழக்கறிஞர் ஷங்கர், டிஸ்கவரி வேடியப்பன், லி.உதயகுமார், பகத்மக்கா, வெங்கட்ராவ், தமீம்அன்சாரி, இளங்கோ உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.